திருவருள் சக்தி
ஆன்மிகம்–ஜோதிடம்–மருத்துவ மாத இதழ்

குருவருள் ஜோதிடம்

குமுதத்தின் மற்றுமோர் மகத்தானப் படைப்பு

நாவல் உலகின் மணிமகுடம்

# அப்ஸரா நாவல்

# மகிழ மலையா? மர்ம மலையா?



லக்ஷ்மி ராஜரத்தினம்

# மகிழ மலையா? மர்ம மலையா?

## 1

மஞ்சு வீட்டிற்குள் வந்தாள். மணி எட்டு. அக்கா மந்தாகினி கதவைத் திறந்தாள். தங்கை மஞ்சு நேரம் கழித்து ஏன் வருகிறாள் என்பது தெரிந்த விஷயம் தான். அக்காளும், தங்கையுமாய் நடத்தும் குடித்தனத்தில் ஒருத்தர்க்கு ஒருத்தர் தெரியாத இரகசியம் ஏதுமில்லை. வீட்டிற்குள் நுழைந்ததுமே ஒருவரிடம் மற்றவர் பகிர்ந்துக் கொள்வது வழக்கமான விஷயமே.

இதனால் இருவரின் மனங்களிலும் எந்தவிதமான அடைசல்களும் கிடையாது. துடைத்து விட்ட சிலேட்டாக இருந்தது. தனியாகக் குடும்பம் நடத்தும் பெண்களிடம் பயம் ஏதும் இருக்க வழியில்லை. மந்தாகினி பெரியவள் என்பதால் சின்னவள் மஞ்சு மரியாதை கொடுத்தும், புத்திமதி கேட்டும் நடந்துக் கொள்வாள்.

சமூக சேவை நிலையம் ஒன்றில் வேலை பார்க்கும் மந்தாகினிதான் குடும்பத்தை வழி நடத்தி வந்தாள். அங்கு அதிகமான வருமானம் வர வாய்ப்பு இல்லை. மன நிம்மதியைப் பெற வாய்ப்பு இருந்தது. உதவி கேட்டு வரும் பெரிய குடும்பத்தினர்க்கு இவர்கள் நிலையம் உதவி செய்ய உறுப்பினர்களை அனுப்பி வைப்பார்கள்.

பெரிய குடும்பத்தினர் கண்டிப்பாக ஒரு கட்டணத்தைத் தருவார்கள். சேவை நிலையம் அதை வருமானமாகக் கொண்டு இவர்களுக்கு சம்பளம் தருவார்கள். சில பணக்கார குடும்பங்கள் தங்களின் ஆடம்பரமான கல்யாணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு இவர்கள் நிலையத்தை அணுகுவார்கள். அச்சமயங்களில் ஏழெட்டு பேர்களாகப் போவார்கள்.

நிகழ்ச்சி முடிந்து இவர்களது சேவைகளை பாராட்டி புடவையுடன் பணம், பலகாரங்கள் வைத்து அன்பளிப்பாக ஈவார்கள். மந்தாகினி பலகாரம் சாப்பிடுவாளே தவிர புடவைகள், பணத்தைத் தனக்காக

ஒரு போதும் வைத்துக் கொண்டதில்லை.

சேவை நிலையத்தில் தன்னை விட வறுமையில் வாடும் பெண்கள் குடும்பத்திற்குப் பண்டிகை தினங்களில் பரிசாகக் கொடுத்து விடுவாள்.

சேவை நிலையத்தின் நிர்வாகி அன்னம்மா அவளிடம் “இப்படி வாரி வழங்குவதற்கு நீ ஒன்றும் பணக்காரி இல்லையே மந்தா. ஏன் இப்படி இருக்கிறாய்? இப்படி வர்ற பணத்தை வைத்துக் கொண்டு எத்தனையோ பையன்களுக்கும், பெண்களுக்கும் பீஸ் கட்டுகிறாய்? உன் பிற்காலத்திற்கு என்று ஏதாவது சேர்த்து வைத்துக் கொள்ளக் கூடாதா? என்று பலமுறை சொல்லி இருக்கிறாள்.

மந்தாவின் முகத்தில் சிரிப்பு வாடாது.

“இன்றைக்கு நாம் ஒருவருக்குச் செய்தால் நாளை நமக்கு யாராவது செய்வார்கள் அம்மா. இது இறைவன் நமக்கு வரையறுத்துள்ள இலக்கணம். மேலும் என் தங்கை மஞ்சு நிலையான பணியில் இருக்கிறாள். கவலை கொள்வதற்கு என்று எந்த விஷயமும் இல்லை. நாளை எப்படிப் போகும் என்று கவலைப்படுபவர்களுக்கு உதவ வேண்டும் அம்மா” என்று பதில் சொல்லுவதில் அவளுக்குத் திருப்தி ஏற்படும்.

மந்தாகினி வேகமானவள். நதியைப் போன்றவள். உடல்நலம் சரியில்லாதவர்களுக்குத் சேவையா, கல்யாண வீட்டிற்குப் போகலாமா? என்றால் உடல்நலம் இல்லாதவர்களைத் தான் தேர்ந்தெடுப்பாள். யாருக்கும் அஞ்சாத ஒருநடையுடன் அவள் உடலில் ஆண்மையின் செருக்கும் அமைந்திருப்பது இறைவன் கொடுத்த வரப் பிரசாதம்.

இதனாலேயே நிலைய நிர்வாகி அன்னம்மாவிற்கு இவள் இன்றியமையாதவளாக இருந்தாள். நிதி நிர்வாகத்தை கவனிக்க அன்னம்மா வெளியே போக நேரும் பொழுது இவள்தான் சேவை நிலையத்தை கவனித்துக் கொள்வாள். சேவை நிலையத்தில் அன்னம்மாவும் இன்னும் சில வேலையாட்களும் தான் தங்கி இருப்பவர்கள். நிறையப் பேர்கள் மந்தாகினி மாதிரி வீட்டிலிருந்து வருபவர்கள்.

மந்தாகினியின் துணிவுக்கும், கண்டிப்பான பேச்சுக்கும் எதிர்குணம் கொண்டவள் இளையவள் மஞ்சு. நளினமான பெண். கண்களில் ஒருவித நாணம் ஒட்டிக் கொண்டே இருக்கும். படிக்கும் காலத்திலேயே அவள் பார்வையில் விழுந்தவர்கள் பலர். ஆனால் அவள் விழவில்லை என்பது தான் ஆச்சர்யம்.

அக்காவின் கண்டிப்பு அவளை வளையமாகச் சுற்றி வளைத்திருந்தது எந்த ஆடவனைப் பற்றியும் பேசுவதை அக்கா விரும்புவதில்லை. தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவள். தங்கையையும் தன் வழியிலேயே நடத்தி வந்தாள். என்றாலும் இயற்கை ஒரு நாணத்தையும் அழகையும் கொடுத்து விட்டனவே.

அப்பா வழியில் கொஞ்சம் நிலங்கள் கிராமத்தில இருந்தன. அப்பாவுக்கு அதிக படிப்பு இல்லை. அதனால் ஒரு வக்கீலிடம் தன் திறமையைக் காட்டி குமாஸ்தாவாக இருந்தார். பெரிய வக்கீல் என்பதால் குமாஸ்தா குமாரலிங்கத்திற்கும் வருமானம் தாராளமாக வந்தது. நில வருமானத்தை வைத்து வீடு ஒன்றையும் வாங்கிவிட்டிருந்தார்.

மனைவி கண்ணம்மாவும் வாழ்க்கையை உணர்ந்தவள். இரண்டும் பெண் குழந்தைகள் எட்டும் மூன்றுமாக. ரெண்டும் பொட்டைப் புள்ளைக என்ற கவலை கண்ணம்மாவை தாரளமாக செலவு பண்ண விடவில்லை. உடுத்தியும், பூட்டியும் அழகு பார்க்க வேண்டியவள் அடக்கியே வாசித்தாள். குமாரலிங்கம் பெரிய வக்கீலிடம் இருந்ததால் வரும் கட்சிக்காரர்களும் பெரிய இடம் தான்.

விடைபெற்றுச் செல்லும் சமயம் தாராளமாகவே கையில் வைத்து அழுத்திவிட்டுச் செல்வார்கள்.

“ஏன் கண்ணா, புள்ளங்களுக்கு தாராளமாகவே செலவு பண்றது?” என்பார்.

“புள்ளங்கள கஷ்டம் தெரிஞ்சு வளர்க்கணும், தாராளமா வளர்த்துட்டா நாமதாங்க கஷ்டப்படணும் என்பாள்.

நாமதான் கஷ்டப்படணும்னு எந்தவேளையில் சொன்னாளோ தெரியவில்லை. நிலங்களைப் பார்க்கச் சென்ற குமாரலிங்கம் பாம்பு கடித்துப் பிணமாக வந்து சேர்ந்தான்.

கணவன் பிணமாக வந்ததைக் கண்ட கண்ணம்மா கதறினாள். புரண்டாள். புள்ளைகளைக் கட்டிக் கொண்டு அலறினாள். ஆண்டாண்டுதோறும் அழுதாலும் மாண்டார் வருவதில்லையே. எட்டுவயசு மந்தாகினி அம்மாவுக்கு தாயாக மாறினாள்.

“அம்மா, கஞ்சியைக் குடி” என்று அம்மாவைத் தேற்றியதுடன் தங்கை மஞ்சுவையும் பார்த்துக் கொண்டாள்.

துக்கம் கேட்டு விட்டுப் போன ஆசிரியையும் திரும்ப வீட்டிற்குள்

# மகிழ மலையா? மர்ம மலையா?

நாவலாசிரியர்– **லக்ஷ்மி ராஜரத்தினம்**

## பதிப்பாசிரியின் பரிந்துரை

**திருவருள் சக்தி, குருவருள் ஜோதிடம்** குழுமத்தின் அப்ஸரா நாவல் இதழின் படைப்பான ''மகிழ மலையா? மர்ம மலையா?' நாவலைப் படைத்தவர் திருமதி லக்ஷ்மி ராஜரத்தினம். இவரின் பல அரிய படைப்புகள் வாசகர்களின் அமோக ஆதரவைப் பெற்றவை. சமீபத்தில் ''அப்ஸரா நாவல்'' வெளியிட்ட ''உறவுகள் தொடர்கதை'' நாவலுக்கு கிடைத்த வாசகர்களின் பாராட்டுகள் அவரை ஊக்கப்படுத்தி ஆக்கத்தை கொடுத்தமையால் உருவானதே இந்த நாவல்.

**மகிழ மலையா? மர்ம மலையா?** நாவல், ஜமீன்தாரின் வாரிசை வெளிப்படையாக வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில் வளர்த்து ஆளாக்கி சூழ்ச்சி கூட்டங்களில் இருந்து காப்பாற்றி ஜமீனைக் கைப்பற்றுவதே கதையின் மூலக்கரு. அமானுஷ்ய நிகழ்வுகளுடன் திகில் நிறைந்த கதையின் உயிரோட்டம் அடுத்து என்ன ஏற்படப் போகிறது என்ற எதிர்ப்பார்ப்போடு கதையின் வேகத்தை சிறப்பாகக் கொண்டு செல்வதுடன் கதையின் முடிவு எப்படி இருக்கும் என்பதை யூகிக்க முடியாத அளவிற்கு லஷ்மி ராஜரத்தினம் அவர்கள் எடுத்துச் செல்வது சிறப்பான அம்சம். கதையின் வேகம் கருத்துக்கு வியூகம். தீர்ப்பை தீர்மானிக்க வைத்திடும் உங்கள் மதியூகம். படித்துப் பாருங்கள் மலைத்துப் போவீர்கள் மகிழ மலையா? மர்ம மலையா? அதை உணர்ந்துக் கொண்டால் உங்கள் மனம் முழுவதும் வீசிடும் மகிழ மணம் பாராட்ட தூண்டிடும் உங்கள் குளிர்ந்த குணம்.

இந்த நாவலைப்படித்த வாசகர்களின் கருத்துக்களை செல் 89258 26347 என்ற எண்ணில் தொடர்புக் கொண்டு திருமதி **லக்ஷ்மி ராஜரத்தினம்** அவர்களுடன் உங்கள் கருத்துக்களை பகிர்ந்துக் கொள்ளலாம். அவர்களின் எழுத்துக்கு ஏற்றம் கொடுக்கலாம். உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றம் பெறலாம்.



உங்கள் அன்புச் சகோதரி

**இராதா இராஜு** ஆசிரியர்

வந்து பேசலானாள்.

“அம்மா, புள்ளய எத்தனி நாள்தான் பள்ளிக்கு அனுப்பாம வச்சிருக்கப் போறீங்க. இருக்கறவங்க வாழ வேண்டாமா! புள்ளங்க எதிர்காலத்தைப் பத்தி நெனைக்க வேணாமா!”

எட்டு வயசு மந்தாகினியின் மனதில் ஆசிரியையின் பேச்சு இறங்கியது. அவளும் தனியாக அப்பாவை எண்ணி எண்ணி அழுகிறவள்தான். அதை எண்ணுவதிலோ, அழுவதிலோ எந்தப் பயனும் இல்லை என்பதை அச்சிறுமி புரிந்துக் கொண்டது இறைவன் கொடுத்த வரம்.

மஞ்சுவைத் தூக்கி அம்மா மடியில் உட்கார வைத்தாள். “அம்மா, சமையலை கவனி. நான் பள்ளிக்கூடம் போய்ட்டு வரேன்.” என்று சொல்லிவிட்டுப் போனாள்.

நடுப்பகல் வந்தவள் மஞ்சுவையும் ஸ்கூலுக்குத் தூக்கிக் கொண்டு போனாள்.

“எதுக்கும்மா புள்ளய ஸ்கூல்க்கு தூக்கிட்டுப் போறே?”

“இத எல்.கே.ஜியில போடப் போறேன்

பெரிய மனுஷி போலப் பேசும் அவளைப் பார்த்து அதிசயித்தாலும் மகள் சாமான்யப்பட்டவள் இல்லை என்று புரிந்துக் கொண்டாள்.

வக்கீல் வந்தார். மந்தாகினியும் வீட்டில் இருந்தாள். மஞ்சுவுக்கு எழுதப் பழகிக் கொண்டிருந்த சிறுமியைப் பார்த்தாள்.

“நீதான் குமாரலிங்கத்தோட மூத்த பெண்ணா!”

“ஆமாங்கய்யா”

“படிக்கிறியா!”

“படிப்புத்தான் ஸார் இந்தக் காலத்துப் பெண்களுக்குத் துணை. என் தங்கையையும் பள்ளிக்கூடத்துல சேர்த்துட்டேன்.”

“குட்.. சின்னப் பெண்ணானாலும் அறிவாளியா இருக்கேம்மா..”

அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டாள்.

அவர் சட்டென்று பணக்கட்டை எடுத்துக் அவள் கையில் கொடுத்தார்.

“இது எதுக்கு ஸார்”

“இதுல ஒரு லட்சம் இருக்குதும்மா.. உங்கப்பா எங்கிட்ட வேலை பார்த்தார் இல்லையா அவருக்கு சேர வேண்டிய பணம்மா”

“அப்படி என்றால் சரி. இத்தனை பணத்தை எங்கே எப்படி வச்சுக்கறதுனு தெரியல்ல ஸார்.”

“அம்மாவுக்குத் தெரியும் மந்தா”.

மந்தாகினியின் இதழ்களில் ஒரு விரக்திப் புன்னகை ஓடியது”. எல்லாத்தையும் அப்பாதான் பார்த்துக்குவாரு. ஊர்ல கொஞ்சம் நிலங்கள் இருக்குது. அதையும் வித்து இதோட போட்டு மாசாமாசம் செலவுக்கு வர மாதிரி ஏதாவது ஏற்பாடு இருக்குது. அதையும் வித்து இதோட போட்டு மாசாமாசம் செலவுக்கு வரமாதிரி ஏதாவது ஏற்பாடு இருக்குதா சார். அப்பா இருந்தால் பணம் மாசாமாசம் வரும்“ என்ற பொழுது எவ்வளவு தடுத்தும் குரல் தழுதழுத்தது.

வக்கீல் அவளை அணைத்துக் கொண்டார். “ரொம்ப புத்திசாலிம்மா” நீ என்றார்.

சொன்னதுடன் நில்லாமல் இரண்டே மாதங்களில் நிலங்களை விற்று பணத்தை வங்கியில் முதலீடு பண்ணினார். கணிசமான வட்டி வந்தது. கவலையில்லாத ஒரு வாழ்க்கை கண்ணம்மா வாழத் தொடங்கினாள். தந்தைக்கே உபதேசம் செய்த முருகனாகக் கண்ணம்மா மூத்த மகளை எண்ணினாள்.

“அம்மா, எதுக்கு ரசம், குழம்புனு ரெண்டும்? ஒண்ணு வச்சு ஒரு கூட்டோ, பொரியலோ செய்” என்பாள் மந்தாகினி.

“துணி இருக்குது. தீபாவளிக்கு வாங்கினா போதும். பக்கத்து வீட்ல வாங்கறாங்கனு நீ வாங்காதே” என்று அம்மாவை அதட்டுவாள்.

வீட்டைச் சுற்றி இருக்கும் கொஞ்சம் மண் தரையில் புடலை, அவரை, பாகல் என்ற கொடிகளையும், வெண்டை, கத்திரியையும் விளைய விட்டாள்.

“உன் பெண்ணை அரசியல்ல விட்டால் அவ இந்தியாவையே கடன் வாங்காம செய்திடுவா” என்று அக்கம் பக்கத்தினர் சொல்லும் பொழுது மகிழ்ந்து போவாள் கண்ணம்மா.

மாசக்கடைசியில் வரவு செலவு பார்ப்பாள். வீட்டில் வாங்கிய முதல் மாசம் மிஞ்சிய சாமான்களை மறுமாசம் வாங்காமல் பட்ஜெட்டை குறைப்பாள்.

வெயிலில் சுற்றி முகம் மற்றும் கை, கால்களின் நிறம் கருமையாகியிருக்கும். அதுமட்டுமின்றி புகைப்பிடிப்பதாலும், மன அழுத்தத்தில் இருப்பதாலும், சருமம் பொலிவிழந்து ஒருவித சோர்வுடன் காணப்படும். பொதுவாக இப்படி முகம் பொலிவிழந்து கருமையாக காணப்பட்டால், அழகு நிலையங்களுக்கு சென்று ப்ளீச்சிங் செய்வோம்.

ஆனால் சருமத்தின் பொலிவு மற்றும் நிறத்தை அதிகரிக்க இயற்கைப் பொருட்களைக் கொண்டு ஒருசில ஃபேஸ் மாஸ்க்குகளைப் போட்டு வந்தால், சருமத்தை அழகாகவும் பொலிவோடும் வைத்துக் கொள்ளலாம்.

தேன் சருமத்தை ஈரப்பதத்துடன் வைத்துக் கொள்வதோடு, சிறந்த ப்ளீச்சிங் பொருளாகவும் பயன்படும். மேலும் தேனில் ஆன்டிபாக்டீரியல் தன்மை அதிகம் உள்ளது. எனவே அந்த தேனை தினமும் முகத்தில் தடவி 5 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி வாருங்கள். இதனால் நல்ல மாற்றத்தைக் காணலாம்.

தயிரில் உள்ள லாக்டிக் ஆசிட், சருமத்தில் உள்ள கருமையை நீக்கும் தன்மை கொண்டது. ஆகவே தினமும் தயிரை முகம் மற்றும் கை, கால்களில் தடவி ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரில் கழுவி வந்தால், முகம் பொலிவாகும். முக்கியமாக, இந்த செயலை ஒரு மாதத்திற்கு தொடர்ந்து பயன்படுத்தி வந்தால், நல்ல மாற்றத்தைக் காணலாம்.

பப்பாளி கூட ப்ளீச்சிங் தன்மை கொண்டது. அதற்கு பப்பாளித் துண்டைக் கொண்டு முகத்தை தேய்த்து, 23 நிமிடம் கழித்து கழுவ வேண்டும்.

எலுமிச்சை மற்றொரு அற்புதமான ப்ளீச்சிங் தன்மை கொண்ட பொருள். இத்தகைய எலுமிச்சையின் சாற்றினை நீரில் கலந்து, முகத்தில் தடவி 5 நிமிடம் கழித்து, சுத்தமான குளிர்ந்த நீரில் கழுவி, பின் மாய்ஸ்சுரைசர் தடவவும். இப்படி தினமும் செய்து வந்தால், முகத்தின் பொலிவு மேம்படும்.

தென்னிந்திய பெண்களின் அழகின் ரகசியமே மஞ்சள் தான். மேலும் மஞ்சளில் ஆன்டிபாக்டீரியல் மற்றும் ஆன்டிசெப்டிக் தன்மை உள்ளதால், இந்த மஞ்சள் தூளை பாலில் கலந்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இதன் மூலம் முகத்தின் பொலிவு அதிகரிக்கும்.

# முகத்தில் உள்ள கருமையை நீக்க

கற்றாழை ஜெல்லை தினமும் முகத்தில் தடவி 1015 நிமிடம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனாலும் சருமத்தின் நிறத்தை அதிகரிக்கலாம்.

ஆரஞ்சு பழத்தில் வைட்டமின் சி அதிகம் உள்ளது. மேலும் இது எலுமிச்சையைப் போன்றே ப்ளீச்சிங் தன்மை கொண்டதால், இவையும் சருமத்தில் உள்ள கருமையைப் போக்க உதவும். அதற்கு 1/2 டீஸ்பூன் மஞ்சள் தூளுடன், 1/2 கப் ஆரஞ்சு ஜூஸ் கலந்து, முகம், கை, கால்களில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும்.

வெள்ளரிக்காயில் குளிர்ச்சித்தன்மை உள்ளதால், இதனைக் கொண்டு சருமத்தைப் பராமரித்தால், சரும கருமை நீங்குவதோடு, சருமமும் புத்துணர்ச்சியுடன் காணப்படும். எனவே தினமும் வெள்ளரிக்காயை அரைத்தோ அல்லது துண்டுகளாக்கியோ முகத்தில் வைத்து, 1520 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவி வந்தால், சருமத்தின் கருமை நீங்குவதோடு, சரும சுருக்கமும் மறையும்.



மாசத்தில் முதலில் சாமான்கள் வாங்கிவிட்டால் எக்காரணம் கொண்டும் சாமான்கள் வாங்கப் பையைத் தூக்கிக் கொண்டு கடைக்குப் போகக் கூடாது. மஞ்சு பாப்பாவுக்கு பிஸ்கட் வாங்க மட்டுமே கடைக்குப் போக வேண்டும்.

அன்றிலிருந்து இன்று வரை அதையே கடைபிடித்தும் வந்தாள் மந்தாகினி.

## 2

வீட்டிற்கு நேரம் கழித்து வந்த மஞ்சு குளித்து உடை மாற்றிக் கொண்டாள். எந்நேரம் வந்தாலும் குளித்து விட்டு உணவு உண்ணும் பழக்கமே இருவரிடமே உண்டு.

“அக்கா சாப்பிடலாமா?”

“சாமி கும்பிட்டியா?”

“இதோ கும்பிட்டு இருக்கேன்”. என்ற மஞ்சு விளக்கேற்றி தொழுதாள்.

அந்த வீட்டின் இஷ்ட தெய்வம் முருகன். கண்ணம்மாவிற்கு முருகன்தான் தெய்வம்.

“கைவிட்டால் நாயேனைக் காப்பார் ஒருவரும் இல்லை. பொய் விட்டார் போற்றும் புனிதனே” என்று திருப்போரூர் சன்னதி மாலையை கண்ணம்மா சொல்லிச் சொல்லி மந்தானிக்கும் பாடமாகி விட்டது.

மஞ்சுவும், முணுமுணுத்தபடி முருகனைத் தொழுதாள். அவள் கண்கள் அடுத்த படத்தில் போய் தேங்கியது. அது ஒரு பெரியவரின் படம். அவர்கள் பிறப்பதற்கு முன்பே அந்த வீட்டில் இருந்த.

“இவர் யாரம்மா?”

“தெரியல்லம்மா... பக்கத்து வீட்ல ஒரு தாத்தா குடி இருந்தாரு. அவர் மகன் கூடப் போகும் பொழுது எனக்குக் கொடுத்துட்டுப் போனாரு என்னமோ அவரைக் கொஞ்ச நேரம் பார்த்தாலே போதும். நெஞ்சுல அமைதி பிறக்கும் என்பாள் கண்ணம்மா.

இத்தனைக்கும் அந்தப் படம் பெரியவரின் உருவத்தைச் சன்னமாகக் காட்டியது. இன்றைக்கு மஞ்சு அப்படத்தை உற்று நோக்கவும் அவளின்

கண்கள் இரண்டு ஜோதிகளாகப் பிரகாசித்தது. மஞ்சுவை அசத்தியது. புது அனுபவம். அவள் தளிர் உடம்பு மெல்ல நடுங்கியது.

இன்னும் உற்றுப் பார்க்க சிரிப்பது போல இருந்தது.

"மஞ்சு, வந்ததே லேட். மணி ஒன்பது. எனக்கு காலையில நேரத்தே போகணும். பாமினி பாட்டியை மருத்துவமனைக்கும் கூட்டிட்டுப் போகணும்" என்று மந்தாகினியின் குரல் அதட்டலாக வரவே வணங்கி எழுந்து சாப்பிடும் இடத்திற்கு ஓடினாள் மஞ்சு.

தட்டு வைத்துப் பலமாறி இருந்தாள். மந்தாகினிக்குக் கோபம் என்பது தங்கையிடம் கிடையாது. மிலிட்டரி ரூல் போல் கறாராக இருப்பாள். தங்கையும் அதற்கு இணங்கியே நடப்பாள்.

சூடான சாதம். அதன் மேல் சாம்பார். பீன்ஸ் பொரியல். தட்டில் போட்டிருந்தாள் மந்தா.

சூடான சாம்பார் சாதம் சுவையாக இருந்தது. " ----- ஏன் அக்கா" என்றாள்.

"ஏன் லேட்? உன் மனசை ஏதோ ஒண்ணு அலக்கழிக்கிறது. இன்னும் சொல்லலே நீ" என்ற மந்தா சாம்பார் சாத உருண்டையில் பொரியல் தொட்டு வாயில் திணித்துக் கொண்டாள்.

"மகேஷின் அம்மாவுக்கு திடீர்னு மூச்சு விட முடியல்ல. திரும்ப ஐ.ஸி.யூக்கு கூட்டிட்டுப் போயிருக்காங்க".

"அடப் பாவமே" என்றார் மந்தாகினி.

மகேஷ் மஞ்சுவுடன் நட்பாகப் பழகியது அவளுக்குத் தெரியும். மகேஷின் கள்ளமில்லா மனசு மந்தாகினிக்குத் தெரியும். அம்மாவின் அன்பில் வளர்ந்த பையன். அப்பாவைப் பற்றி எதுவும் சொன்னதில்லை. அப்பா என்பவர் இவர்களை விட்டு ஓடிப் போயிருப்பார் என்றே மந்தாகினியின் கெட்டிக்கார மனசு யூகித்திருந்தது. பாலாம்மாவின் நெற்றிப் பொட்டும் பூவும் அப்படி அவளை யூகிக்க வைத்திருந்தது. பாலாம்மாவின் சாந்தமான குணமும், கனிவுப் பார்வையும் ஆளை சரியாக எடைபோடும் மந்தாகினியைக் கவர்ந்ததில் வியப்பேதும் இல்லை.

மகேஷும் சாத்வீகமான பையன் எல்லாமே அம்மாதான் என்று அம்மாவின் மடியில் தாலாட்டு பாட ஆடிக் கொண்டிருப்பவன். இப்படி ஒருவன் மஞ்சுவிற்கு கணவனாக வாய்த்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணிய பொழுதுதான் மஞ்சு தன் உள்ளத்தில்

மலர்ந்த காதலைச் சொன்னாள்.

இவர்கள் காதல் மந்தாகினியின் மனத்திற்கு உகந்ததாகவே இருந்தது. உடனே பாலம்மாவிடம் போய் சொன்னாள். பெண்மையை பூஜிக்கும் ஒருவன் தன் தங்கைக்கு மணாளனாகும் பெருமை அக்காவிற்குப் பூரிப்பைக் கொடுத்ததில் வியப்பேதும் இல்லை.

மூத்தவள் பொறுப்பைக் கையில் ஏந்தியவளாக பாலம்மாவிடம் போய் பூ, பழத்துடன் நின்றாள். பூஜையை முடித்துக் கொண்டு வெளியே வந்த பாலம்மா நைவேத்ய பாயசத்தை தம்ளரின் ஊற்றிக் கொடுத்தாள்.

“குடி மந்தா”.

“நான் நல்ல விஷயம் பேச வந்திருக்கிறேன்னு எப்படிம்மா தெரியும்?”

“பூ,பழப் பையோட திடீர்னு வந்ததிலிருந்து யூகித்தேன் மந்தா” என்றவளை பாலம்மா உட்கார வைத்தாள்.

பாலம்மா யூகித்த விஷயம் தான். மந்தாகினி மொழிந்தாள். பூ, பழப் பையைக் கையில் கொடுத்தாள்.

“புள்ளங்க ரெண்டும் ஆசைப்படுதுங்க சீக்கிரமா கல்யாணம் கட்டிராம்னு உங்ககிட்ட கேட்க வந்தேன்” என்றாள்.

மந்தாகினி வளர்த்த நல்ல பெண்தான் மஞ்சு. கொஞ்சம் யோகித்தாள். அவள் படிப்பை முடித்து வேலைக்குப் போய் ஓராண்டு காலம்தான் ஆகிறது. பொறியியல் பட்டதாரி. கை நிறையச் சம்பளம். ஆனால் எம்.பி.ஏ.படிக்க வேண்டும் என்று ஓர் ஆசை உண்டு.

அவன் வேலைக்குப் போகும் முன்பு சின்ன வீட்டில் இருந்தார்கள். அவன் சம்பளத்தில் தான் அடுக்கு மனை குடியிருப்பு ஒன்றிற்குக் குடி பெயர்ந்தார்கள்.

“என்னம்மா யோசனை?”

“அவன் மேல படிக்கணும்னு ஆசைப்படறான். கல்யாணத்துக்குக் கொஞ்ச காலம் போகட்டும்னு பார்க்கிறேன் மந்தா”.

“இரு உள்ளங்கள் சங்கமித்த பின்பு இத்தகைய தடைகள் இருப்பது சரியாகப்படவில்லை அம்மா.” என்று மகேஷின் தாயாருக்கு உரிய காரணத்தைப் பூடகமாக எடுத்துரைத்தாள்.

“அதுவும் சரியான காரணம்தான்” என்றாள் மகேஷின் தாயார்.

வயசுக் கோளாறு வரம்பு மீற வாய்ப்பு உண்டல்லவா! புரிந்தது மகேஷின் தாயார்க்கு இதற்கெல்லாம் வேலியிட்டு காபந்து பண்ண யாரால் முடியும்!

“என்னிலும் சின்னவளானாலும் நன்கு யோசித்திருக்கிறாய் மந்தா” என்றபடியே காப்பி கலக்க சமையலறைக்குள் புகுந்தாள்.

அந்த சில நிமிடங்கள் போக யோசிக்கத் தேவையாகத்தானே இருந்தது. தன் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கவும் அந்த கணங்கள் உதவின. காப்பியுடன் வந்தவள் தன் சம்மதத்கதையும் மந்தாகினியிடம் வைத்தாள்.

மந்தாகினிக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

தன்னிலும் நான்கு வயசு மஞ்சு சிறியவளானாலும் மந்தா தாயாகவே அவளை வளர்த்தவள். அப்பா குமாரலிங்கம் போன பின்பு வக்கீல் ஏற்படுத்திக் கொடுத்த பொருளாதார சீரமைப்பினால் குடும்பம் நன்றாகவே ஓடியது. திட்டம் போட்டு வாழ்க்கை வண்டியை ஒட்டியதால் கையில் நாலுகாசு அதிகமாகவே புரண்டது.

ஆனால் இவர்களின் தாயார் கண்ணம்மாவால் ஒன்றிரண்டு வருடங்கள் ஆனாலும் கணவன் பிரிவைத் தாங்க முடியவில்லை. அக்கம் பக்கம் போய் உட்காரும் பழக்கமுமில்லை. கணவன் இருக்கும் பொழுதாவது அக்கம் பக்கம் தேவை என்றால் சென்று வருவாள். கணவகை இழந்த பின்பு மற்றவர்கள் அவள் வருகையை சகுனத் தடையாக அல்லவா பார்ப்பார்கள்? நத்தை கூட்டினுள் சுருங்குவது போல வீட்டினுள் முடங்கிக் கிடந்தாள்.

வீடு சிறியது என்றாலும் முற்றமும், தாழ்வாரமும் கொண்ட வசதியான வீடுதான். ரொம்ப சலிப்பு ஏற்பட்டால் புடலை, பாகல், கொடிகளுக்கு தண்ணீர் விடுவதும், மல்லி மொட்டுகளைப் பறித்து தொடுப்பதும், இதுவும் சில சமயங்கள் அலுப்பைத் தான் தரும்.

உபயோகமாக வேலை செய்து கணவனின் நினைப்புகளிலிருந்து விடுபடுவது எப்படி?

“பகல் பூரா போரடிக்குது மந்தா”

அவர்களுக்கும் மாலை நேரங்களில் அம்மாவுடன் நேரம் கழிக்க வீட்டுப் பாடங்கள் அனுமதிப்பதில்லை. மஞ்சுவுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து அவள் தன் பாடங்களைப் படித்து எழுதி....

"டி.வி. பாரம்மா..." என்று சுலபமாகக் சொன்னாலும் அம்மா சொன்ன காரணம் ஏற்புடையதாகவே இருந்தது.

"சதா அதைப் பார்ப்பதும் சரியில்ல. ஒரே பழிவாங்கும் படலம்தான். மனசு கெட்டுப் போயிரும் தாயி. இயல்பான குடும்ப சீறியல் ஒன்றிரண்டு போகுது. மீதி எல்லாம் மனதைக் கெடுத்துவிடும். பெண்ணே பெண்ணுக்குச் செய்யும் கொடுமைகள். தன்னிலையை உணராது செய்யும் பொழுது நியாயம் எங்கேம்மா போய் ஒளிஞ் சுக்கறது.! அதுக்கு அதைத் தேட ஒரு போலீஸ்படையை அனுப்பணும் போல இருக்குது" என்று அம்மா பேசினாள்.

"சரி... என்ன பண்ணப் போறே"

"வேலைக்குப் போறேன் கண்ணு"

"என்ன வேலைக்குப் போறே?"

"நம்ம ஊர் புறநகர்ப் பகுதியில இருக்கிற பஞ்சாலையில ஆள் எடுக்கறாங்கடா"

அம்மாவின் களை இழந்த முகத்தைப் பார்த்தாள் மந்தா.

தலையில் துணியைச் சுற்றிக் கொண்டு பஞ்சாலையில் வேலை செய்யும் பெண்களைப் பார்த்திருக்கிறாள் மந்தா. தன் அம்மாவும் அவர்களில் ஒருத்தியா! நினைக்கவே முடியவில்லைதான்.

## 3

ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்ட மந்தாவை என்ன மந்தா யோசனை மஞ்சுவைப் பத்திக் கவலையா! நான் அவளை அம்மாவா இருந்து பார்த்துக்குவேன்" என்று காப்பியை நீட்டியவள் இடது கரத்தால் மந்தாவின் தோளைத் தடவிக் கொடுத்தாள்.

மந்தாகினியின் கண்களில் நீர் மையிட்டாள் போலப் பரவியது. பதினேழாவது வயதிலிருந்து தாயாக வளர்த்தவள் அவள்தானே!

"ஏம்மா கண்ணீர் கண்ல?"

"எங்கம்மாவைப் போல கனிவா பேசுறீங்க. எங்கம்மா ஞாபகம் வந்திருச்சும்மா"

"நீங்க சின்னப் பிள்ளைங்களா இருக்கறப்பவே இறந்துட்டாங்களோ?"

"வீடு வாசல்னு கொஞ்சம் வசதியாத்தான் இருந்தோம். சிக்கனம்

தான் எங்க தாரக மந்திரம். வீட்ல சும்மா இருக்க முடியல்லனு அம்மா பஞ்சாலையில வேலைக்குப் போனாங்க. அந்தத் தூசு ஒத்துக்கல்ல. டஸ்ட் அலர்ஜி மெல்ல காச நோயைக் கொண்டு விட்டுச்சு. அம்மா எங்ககிட்ட அதை சொல்லலே. ரொம்ப முத்திப் போற வரைக்கும் வேலைக்குப் போனாங்க. எங்களை விட்டுட்டும் போயிட்டாங்க. அப்ப எனக்கு பதினாறு வயசு”.

மந்தாகினியின் சோகத்தின் வேகம் பாலம்மாவைத் தாக்க அவளை அணைத்தார் போல அமர்ந்தாள்.

“மகிழ்ச்சி மனுஷங்களை ஒண்ணு சேக்குதோ இல்லையோ... துயரம் ஒண்ணு சேர்த்துடும். கல்யாணம் பேச வந்துட்டு கண்ல தண்ணிவிடக் கூடாது. அம்மாவா இருந்து மஞ்சுவை வளர்த்து வந்திருக்கே. உன் கவலை புரியுது” என்றாள் பாலம்மா.

யாருக்கும் சொல்லப்படாத கதை அவளுடையது. அவள் யாரிடமும் சொன்னதில்லை. முகத்துச் சிரிப்பை விடவிட்டதில்லை. மந்தாகினி தன் அம்மாவைப் பற்றிச் சொன்னாலும் பாலம்மா தன்னைப் பற்றி வாயைத் திறக்கவில்லை.

“இதோ பார் மந்தா, வீட்டுக்கு வீடு சிமெண்ட், மண்ணுனு வச்சு கட்டின வாசற்படி தான். யார் வீட்டிலேயும் பொன் வாசற்படி கிடையாது. வீடுகள் தோறும் வேதனைகள் இருக்கத்தான் செய்யும் கவலைப்படாதே.”

என்ன பேசுவது என்று தெரியவில்லை. உடனே கல்யாணத்தை வையுங்கனு பலவந்தப்படுத்தவா முடியும்? தன் மனதில் இருப்பதை மெல்ல சொல்லியாகி விட்டது. ஒரு பெண்ணுக்குப் பெண் மனசு புரியாதா என்ன?

அவள் மனதைப் படித்தவள் போல பாலம்மா பேசினாள்.

“இதப்பாரு மந்தா. வர்ற வெள்ளிக்கிழமை முகூர்த்த நாள். சின்னதா நிச்சயதார்த்தத்தை வச்சுடுவோம். என் பக்கத்துல கொஞ்சம் பேர். உன் பக்கத்துல கொஞ்சம் பேர் என்றதும் மந்தாகினியின் மனசு சமாதானமாகியது.

அடுத்து வந்த -------- பரபரப்பாகியது. சின்னதாக நடத்தும் சடங்கு என்றாலும் அதற்கு உரிய ஏற்பாடுகளைப் பண்ண வேண்டாமா! புடவை வாங்க, நகை வாங்க, மாலை ஏற்பாடு, சாப்பாட்டுக்குச் சொல்ல என்று எத்தனை வேலைகள் இல்லை.

மகேஷும், மஞ்சுவும் குஷியானார்கள்.

வெள்ளிக்கிழமை வந்தது. பாலம்மா தன் பக்கத்து வீட்டினரையும், மகேஷின் அலுவலக நண்பர்களை மட்டுமே அழைத்திருந்தாள். மந்தாகினியும் நெருங்கிப் பழகிய பக்கத்து வீட்டினர். சேவை நிலையத்து அன்னம்மா போன்ற சிலர், மஞ்சுவின் தோழிகள் என்று இவர் இப்படி அழைக்கப்பட்டிருந்தனர்.

மந்தாகினி தன் வீட்டில் நடக்கப்போகும் முதல் நல்ல காரியம் என்பதால் மிக மிக கவனமாக இருந்தாள். தன்னைத் தட்டிக் கேட்க மகேஷின் வீட்டில் யாருமில்லை என்பதால் துளியும் எதையும் குறைக்கவில்லை. மகேஷிற்கு மனையில் அதேத் துணிகள் எடுக்கும் பொழுது பாலம்மா தடுத்தும் கேட்காமல் விலையுயர்ந்த புடவையை எடுத்து வைத்தாள்.

“ஒண்ணு ஒண்ணு கண்ணே கண்ணுனு மகேஷ் இருக்காரு. அவரோட நிச்சயதார்த்த வைபவத்திற்கு பட்டுப்புடவை கட்டியே தீரணும் என்று அன்புக் கட்டளை போட்டாள்.

மகேஷிற்கும் சங்கிலி, மோதிரம், பிரேஸ் லெட், மஞ்சுவிற்கு நெக்லஸ் எடுத்து வாங்கினாள் மந்தாகினி. ஒரு தாயின் அன்பை அதில் மஞ்சு கண்டாலும், அக்கா ஒற்றை மரமாக நிற்கப் போகிறாளே என்ற குற்ற உணர்வு தோன்றி அலக்கழித்தது. தான் துணையைத் தேடி சிறகை விரித்தது தவறோ?

மறுநாள் விடிந்தால் நிச்சயதார்த்தம். மகேஷின் வீட்டில் தான் நடக்கப்போகிறது. வாங்கிய இனிப்புப் பெட்டிகளையும், நகை புடவைகளையும் எடுத்துக் செல்லத் தோதாக வைத்துவிட்டு மந்தாகினி படுக்க வந்த பொழுது மணி பதினொன்று.

“உனக்குப் பிடிக்குமேனு திரட்டுப் பால் தனியாக கொஞ்சம் வாங்கினேன்” என்று தங்கையின் வாயில் மந்தாகினி இட, மஞ்சு நெகிழ்ந்து போகிறாள்.

திரட்டுப்பால் உருண்டை தொண்டையில் சிக்கிக் கொள்கிறது.

“மெல்ல.... மெல்ல....

மெல்ல விழுங்கினாள்.

தனக்கு ஊட்டிய அக்கா மந்தாகினியின் நெஞ்சில் சாய்ந்துக் கொண்டு “அக்கா, அக்கா” என்று கண்ணீர் வடித்தாள்.

“என்னாச்சு மஞ்சு? மகிழ்ச்சியா நீ மகேஷை நினைக்க வேண்டிய நேரம். எதுக்கு இந்தக் கண்ணீர்? என்று கேட்கும் பொழுது அக்காவிற்கும் கண்ணீர் முட்டுகிறது.

“நான் தப்புப் பண்ணிட்டேன். உனக்குக் கல்யாணம் ஆகல்ல. உன்னைத் தனியா விட்டுட்டுப் போகப் போறேன். எனக்கு இந்தத் கல்யாணம் வேண்டாம் அக்கா. காலம் பூரா உன் கூடவே இருந்துடறேன்” என்று தேம்பித் தேம்பியவாறு வார்த்தைகளைத் துப்பினாள்.

திடீரெனத் தங்கை இவ்வாறு புலம்பவதைக் கேட்ட அக்காக்காரி திடுக்கிட்டாள். இதென்ன புதுப் பூதம் கிளம்புகிறது.! புது இடத்திற்கும் போகப் போகிற பயமா! பாலம்மாவும், மகேஷூம் புதியவர்கள் அல்லவா? தன்னைவிடடுப் போகும் அச்சமா? இவள் மனத்தைத் தோண்டி எண்ணங்களைக் கொட்ட வைக்க வேண்டும்.

புன்னகைத்த மந்தாகினி “திடீரென்று என்னாச்சு மஞ்சும்மா! நீ என்னுடைய தங்கை அல்லவா! துணிவாக இருப்பாய் என்றல்லவா எண்ணினேன்? என்னைப் பற்றிக் கலங்குகிறாயா! அல்லது மகேஷூடன் ஏதாவது மனஸ்தாபமா! என்று தோள்களை அணைத்துக் கேட்டாள்.

“இல்லக்கா... மகேஷ் ரொம்ப நல்லவர். என் முகம் வாடப் பொறுக்க மாட்டார். உன் நலன்களை எல்லாம் விட்டுவிட்டு என்னை வளர்த்த உன்னை விட்டுப் பிரியப் போவதை என்னால் தாங்கவே முடியவில்லை. மூத்தவள் நீ இருக்க நான் கல்யாணம் பண்ணிக் கொண்டு போவது எந்த வகையில் நியாயம் சொல்லுக்கா”

மூத்தவளுக்கு இளையவளின் மனம் புரிந்து போயிற்று. மூத்தவள் இருக்க இளையவள் தனக்கு திருமணம் என்பதை மனத்துடன் போராட்டம் நடத்துகிறாள்.

“சே... இதுக்கா அழறே மஞ்சு. என்னவோ ஏதோ எனப் பயந்து போனேன்டி. கொஞ்ந நேரத்தில் என்னை எப்படி கலங்கடித்துவிடாய். நல்லவன் ஒருவனைத் தேடிக் கொண்டிருக்கிறேன். கிடைத்ததும் கல்யாணம் தான். நீயும் மகேஷூம் தான் முன்னிருந்து நடத்தப் போகிறீர்கள்” என்று அக்காள் சொன்ன சமாதானம் ஏற்புடையதாக இருந்தது.

“நிஜமா சொல்றியா!”

“நிஜமாத்தாண்டா! என்றவள் தங்கையை படுக்க அனுப்பி வைத்தாள்.

மந்தாகினி படுத்தும் தூக்கம் வரவில்லை. பெண்களில் வித்தியாசப்பட்டவள் என்பது அவளுக்கே தெரியும். நான் ஏன் இப்படி இருக்கிறேன். வயதுக்கு வந்ததும் பலர் அவளை காதல் பார்வையுடன் அணுகினர். அவர் பார்வை விழிகளில் எவனாலும் நுழைய முடியவில்லை என்பது தான் உண்மை.

கனிந்து கனிந்து பின் தொடர்ந்து காதலைச் சொல்லி உருகியவர்கள் எவரும் அவள் தன் முடிவைச் சொன்னதும், அவளுக்காக காத்திருந்து கொண்டிருக்கவில்லை என்பது தான் உண்மை. கையில் குழந்தை ஒன்றுடன், மனைவி பின் தொடர "ஹவ் வேர் என்று சொல்லிக் கொண்டு போனவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள்.

வயது முதிர்ந்தும் கூட எத்தனையோ பெண்களில் ஒன்றிரண்டு பெண்கள் பூக்காமல் நிற்பது போல் இவள் மனத்திலும் காதல் என்ற பூ ஒன்று பூக்கவில்லை என்பது ஆச்சர்யமே.

பூக்க வைக்கச் சுற்றிய வண்டுகள் தோற்றதும், எந்த வண்டுமே பூவைச் சுற்றாமல் தோற்றதும் வண்டுகள் மகாநாட்டில் என்ன காரணம் என்பதை அறியாமல் தவித்ததும் நிஜமே. வயது கொஞ்சம் ஏறினாலும் மனத்திண்மை இளமையைக் கொடுத்தது. தன் தனிமை தங்கையைப் பாதித்திருக்கிறது.

அதனால் தான் நல்ல வாழ்க்கையை எதிர்நோக்குவதாகத் தங்கைக்கு எடுத்துரைத்து அமைதிப்படுத்தினாள்.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை எழுந்து குளித்து, சுவாமி கும்பிட்டு, மறக்காமல் சீர்வரிசைகளை எடுத்துக் கொண்டு மகேஷ் வீட்டை அடையும் பொழுது மணி ஏழு. பாலம்மா ஆரத்தி சுற்றத் தன் வருங்கால மணமகளை வீட்டினுள் அழைத்துக் கொண்டாள். பெரிய ஐந்து முக வெள்ளிக் குத்து விளக்கு, திரி, எண்ணெய் போட்டு தயாராக பூஜை அறையில் வைத்திருந்தாள் பாலம்மா.

"மஞ்சு, முதல்ல சுவாமி விளக்கை ஏற்று"

"அம்மா, விளக்கு புதுசா இருக்கு?" என்று மந்தாகினி விசாரித்தாள்.

"மருமகன் ஏற்ற புதுசா வாங்கினேன்"

விளக்கை ஏற்றினாள் மஞ்சு. டிபன் வர எல்லோரும் சாப்பிட்டார்கள். ராகு காலத்திற்குள் நிச்சயதார்த்த ஓலை படிக்கப்பட்டது. மந்தாகினி தாய் ஸ்தானத்தில் நின்று மருமகன் மகேஷிற்கு நகைகளைப் போடச் சொன்னாள்.

பாலம்மா தன் மருமகள் மஞ்சுவிற்கு நெக்லஸ் பெட்டியைத் திறந்தபொழுது வைரங்களும், ஜாதிக் கற்களும் பதிக்கப்பட்ட நெக்லஸும், அதற்கான இணையான ஜொலிக்கும் வளையல்கள் இரண்டும் அனைவரையும் அசர வைத்தன. இவ்வளவு பணம் போட்டு சமீபத்தில் வாங்கி இருக்க பாலம்மாவால் முடியாது என்று அவள் குடும்ப சூழ்நிலை அறிந்த பலராலும் உணர முடிந்ததே.

மகேஷ் மனைவியாக வரப்போகும் மஞ்சுவின் அழகை அந்நகைகள் மேலும் கூட்டியதை ரசித்தாலும் இப்படி நகைகள் அம்மாவிடம் இருப்பதை அவன் அறியானே. அம்மாவின் பார்வையைத் துழாவினபொழுது அம்மா சொன்னாள், “என் கணவன் எனக்குக் கொடுத்த நகைகள் அப்பா” என்று

## 4

மகேஷின் கண்களில் அதிர்ச்சி தாக்கியது. என் கணவர் என்றால் அது அவனுடைய அப்பா இல்லையா! இத்தனை விலையுயர்ந்த நகைகள் தரக் கூடிய அளவுக்கு அப்பா பணக்காரரா! அவனுடைய அம்மா பாலம்மா எந்த வேலைக்கும் போனவள் இல்லை. தனக்கு கிராமத்தில் கொஞ்சம் நிலங்கள் இருப்பதாகவும் அதிலிருந்து வரும்படி வருவதாகவும் சொல்லுவாள் மற்றவர்களிடம் தன் கணவர் பற்றி எக்காலத்திலேயும் பேசியவள் இல்லை.

“அம்மா, அப்பா... “ என்று மகன் மகேஷ் கேட்ட காலத்தில் எல்லாம் தாயார்காரி கனிசாக “நீயும் நானும் சந்தோஷமாக இருக்கிறோம்.. கசப்பை எல்லாம் பேசுவானேன் எதை எப்போ பேசலாமோ அப்ப பேசலாம்“ என்று வாடாத புன்னகையைத் தவழ விட்டுக் கொண்டு பேசும் அம்மாவிடம் மகன் எதையும் கேட்க முயன்றதில்லை.

மகன் கேட்டு எதையும் மறுத்ததே இல்லை. ஆனால் மகன் மகேஷ் நிலத்தின் வருமானம் என்பதை உணர்ந்து சிக்கனமாகவே இருப்பான். இன்று அம்மா திடீர் என்று என் கணவர் கொடுத்த நகை என்ற சொல் பலவித எண்ணங்களைத் தோற்றுவித்தது. எண்ணி எண்ணி சிக்கிய நூல் உருண்டையைப் போல எண்ணம் சிக்கலில் விடை தெரியாத பாலனாகத்தான் உழன்றான்.

அம்மாவிடம் கேட்டு விடலாமா?

மாலைக்கு பிறகுதான் மந்தாகினியும், மஞ்சுவும் கிளம்பிப்

போனார்கள். இன்னும் இரண்டு மாதங்களில் முகூர்த்தம் நன்றாக் இருப்பதாக ஐயர் குறித்துக் கொடுத்தார். மந்தாகினியும் பாலம்மாவும் வீட்டை அழகுப் பண்ணிக் கொண்டே கல்யாண ஏற்பாட்டைப் பற்றிப் பேசித் திட்டமிட்டுள்ளார்கள்.

அதிக செலவு இல்லாமல் கல்யாணத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள். சேவை நிலையத்திலிருந்து நிர்வாகி அன்னம்மாவும், அங்கு தங்கியிருக்கும் ஐந்தாறு பேர்களும் வந்திருந்தார்கள். அன்னம்மாவுக்கு வலது கையாக இருக்கும் ஹரிநாத் தன் ஆறு வயசுப் பெண் பவானியுடன் வந்திருந்தார்.

வந்தவர்களைப் பற்றி பேசியபடி ------ சரி பண்ணிக் கொண்டே கல்யாணத் திட்டத்தையும் விடாமல் பேசினார்கள்.

மஞ்சுவும், மகேஷுூம் ஹாலில் உட்கார்ந்து ஆங்கிலப் படம் ஒன்றில் மூழ்கிப் போக நடுநடுவே கண்கள் பார்வை சங்கமித்தன. இருட்டும் நேரத்தில்தான் புறப்பட்டு போனார்கள்.

சற்று ஓய்வாக அமர்ந்த பின் “சாப்பிட வரீயா? என்று பாலம்மா அழைத்த பொழுது அம்மாவையே பார்த்தான்.

அன்புச் சுரங்கமாக இருந்து மகனை வளர்த்த அந்தத் தாய் இப்பொழுது இரகசியத்தைச் சுமக்கும் சுரங்கமாக அந்த மகனுக்குத் தெரிந்தாள். அப்பா என்ற ஒருவர் அம்மாவை விட்டுப் போய் எங்கோ வாழ்கிறார் என்று தான் அவன் கணக்குப் போட்டுப் பார்த்திருக்கிறான்.

இப்பொழுது அவள் போட்ட கணக்குக்கு விடை தவறு என்று புரிந்தது. இப்படி விலையுயர்ந்த நகையை மனைவிக்கு அளித்த கணவர் அன்பு குறைந்தவர்களாக இருப்பாரா! எனக்கு என் அப்பாவைக் காட்டாமல் வளர்த்த காரணம் என்ன?

“என்னடா அப்படி பார்க்கறே”

“பசியில்ல. பழத்துண்டுகள் கொண்டு. பால் கொடு போதும்“ என்றான்.

இதே நேரம் மஞ்சுவின் வீட்டிலும் அக்காவும், தங்கையும் ஓய்வாக அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

“பசிக்கல்லையா மஞ்சு. தோசை மாவு இருக்கு. ஊத்தட்டுமா?” மந்தாகினி கேட்டாள்.

“வேண்டாம் அக்கா. மகேஷின் அம்மா பஜ்ஜி, சமோசானு

ஏதோதோ சாயந்திர டிபன் கொடுத்துட்டாங்க. பழம், பால்னு போதும்க்கா”

மந்தாகினி பழங்களை நறுக்கலானாள்.

“ஏன் மஞ்சு... பாலம்மா மகேஷின் அப்பாவைப் பற்றி எதுவுமே பேசல்ல கல்யாணத்துக்கு வருவாரானு தெரியல்ல. இன்னைக்கு நிச்சயதார்த்த ஓலையில கூட பாலம்மாவினுடைய செல்வ மகன் மகேஷைத்தானே எழுதச் சொன்னாங்க. எனக்கு ஒரே குழப்பமா இருக்குது.”

அக்காவின் பேச்சு கேட்டு துணுக்குற்றாள் மஞ்சு. இதைக் காரணம் காட்டி அக்காள் கல்யாணத்தை நிறுத்தி விடுவாளே!

ஆப்பிளைத் துண்டம் போட்ட மந்தாகினி “நான் மகேஷ்க்கும், உனக்கும் நகைகள் வாங்கினப்பக் கூட இவங்க ஒண்ணும் நம்ம தங்கைக்கு வாங்கல்லயேனு நெனச்சேன். இப்படி ஒரு நகையைப் போடுவாங்கனு நினைக்கல்ல” என் கணவர் போட்ட நகை”னு வேற சொன்னாங்க. ஏதோ காரணம் பிரிஞ்சுட்டாங்க. அந்த வம்பு எல்லாம் நமக்கு எதுக்கு மொத்தத்துல தாயும் மகனும் நல்லவங்க. மகேஷ்க்கு பணக்கார அப்பா இருக்கார்னு தெரியுது. இது போதும்மா” என்று பேசியதும், மஞ்சு அப்பாடானு பெருமூச்சுவிட்டு நெஞ்சில் கையை வைத்து நிம்மதி அடைந்தாள்.

அக்கா அன்னாசியைத் தோல் சீவுவதில் இருந்தாள். இனி இந்தப் பேச்சு போதும் என்பது போல் மஞ்சு பேச்சை திசை திருப்பினாள்.

“அக்கா, உன் சேவை நிலைய உதவியாளர் ஹரிநாத்தை இன்னிக்கு தான் நேரில பார்த்தேன். வெரி வெரி இண்ட்ரஸ்டிங் பர்ஸன்” என்றாள் மஞ்சு.

“ரொம்ப ஹெல்ப் பண்றவர். எங்க சேவை நிலையத்துல சம்பளம் வாங்காம தன் ஓய்வு நேரங்களிலே வந்து வேலை செய்வார். சேவை நிலையத்துக்கு நிதி உதவிக்கு நிறைய பணக்காரங்களை போய் பார்க்க உதவுவாரு. எங்க சேவை நிலையத்துக்கு வைத்திய முகாம், கண் சிகிச்சை முகாம், ரத்ததான முகாம்னு நடக்க இவர்தான் உதவி செய்யறார்.”

“இப்படி ஒரு மனுஷரைப் பார்க்கறதே அபூர்வம் அக்கா”

“ஒரு பெரிய கம்பெனியில வேலை செய்யற கர்வமே துளியும் கிடையாது. தன் சம்பளத்துல ஒரு பகுதியை ஒவ்வொரு மாசமும், டொனேஷனா தந்திடறார். பாவம் அந்தக் குழந்தை என்றபடி

பழத்துண்டுகள் நிறைந்த தட்டை அவளிடம் நீட்டினாள்.

தானும் ஒரு தட்டுடன் அவள் எதிரே உட்கார்ந்துக் கொண்டாள்.

“எங்க்கா? அந்தக் குழந்தைக்கு என்ன?”

“ஹரிநாத் மனைவியை இழந்தவர். மஞ்சு லேட் மேரேஜ் பண்ணிக்கிட்டவர். கல்யாணம் பண்றப்பவே முப்பத்திரெண்டு வயசு. உடனே பவானி பிறந்துட்டா. ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி ரெண்டாவது பிரசவத்துல ஏதோ கோளாறாகி போய்ச் சேர்ந்துட்டா”

“கேட்கவே பரிதாபமா இருக்குதக்கா. அந்தக் குழந்தை பவானி உங்கிட்ட ரொம்ப ஒட்டிக்கிறாக்கா. பார்த்தேன்.”

“ஹரிநாத் குழந்தை பேர்ல உயிரையே வச்சிருக்கார். வீட்ல வயசான சொந்தக்கார பாட்டியம்மா குழந்தையை பார்த்துக்கறா. குழந்தைக்காகவே அவர் ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கல்ல. சேவை நிலையத்துக்கு வரப்ப குழந்தையைக் கூட்டிட்டு வருவார்.

“ரொம்பச் சூட்டிகையான பொண்ணு. நீ எல்லாருக்கும் சந்தனம் கொடுத்தப்ப நான் குடுப்பேன்னு கொடுச்சுக்கா. பார்த்தேன்.

“கல்யாணங்களுக்கு வாலண்டியரா நாங்க போவோம் இல்ல. சமையல் காண்ட்ராக்ட் எடுத்தவரும் எங்க சேவை மையத்தை சேர்ந்தவராவே இருப்பார். ஹரிநாத் கிட்ட அவளுக்கு ஸ்வீட்ஸ், பட்சணம் கொடுத்து விடுவேன். பவானிக்குப் பழப் பச்சடின்னா ரொம்பப் பிடிக்கும்“ என்று பவானியைப் பற்றி மனம் ------- பேசினாள் மந்தா.

“அவளைப் பத்தி இத்தனை தெரிந்சு வச்சிருக்கே அக்கா”.

தங்கையைக் கண்களில் வாஞ்சை பொங்கப் பார்த்தாள். “அந்தப் பவானிகிட்டே எனக்குத் தனிப்பட்ட பாசம் ஏற்படுது மஞ்சு. அவளைப் பார்க்கறப்ப உன்னைச் சின்ன வயசுலே வளர்த்த பாசமான நாட்கள் என் நெஞ்சில் வானில் வட்டமிடும் பருந்தாகச் சுற்றி வருது. இப்பக் கூட ஸ்வீட்ஸ், மிக்சர்னு நாளைக்கு ஹரிநாத்கிட்ட அவளுக்காக கொடுத்தனுப்ப எடுத்து வச்சுட்டேன்” என்றாள்.

அம்மா வளர்க்காமல் தாயாய் நின்று தன்னை வளர்த்த அக்காள் மந்தாகினியைப் பார்க்கும் பொழுது கண்களில் நீர் திரையிட்டது. அதுமட்டுமின்றி என்னில் அவள் பவானியை வைத்துப் பார்க்கும் பேரன்பிற்கு ஈடு இணை ஏது?

“காலித் தட்டை வச்சுகிட்டு என்னையே ஏன் மஞ்சு பார்க்கறே?”

தன் தோளில் கை வைத்த அக்காவை உட்கார்ந்த வாக்கில் இடுப்பைச் சுற்றி ஒட்டியாணமாகக் கைகளைச் சுற்றிக் கொண்டாள். வயிற்றில் தலை சாய்த்துக் கொண்டாள்.

“எத்தனை ஜென்மம் எடுத்தாலும் எனக்கு நீதான் அக்காவா வரணும்“ என்று கண்ணீர் விட்டவளை அணைத்த மந்தாகினி” ஏன் மஞ்சு உனக்கு நான் அம்மாவா வந்தா வேண்டாம்னு சொல்லிடுவியா! அசடு... அசடு... கண்ணைத் துடை. வா படுக்கப் போகலாம். நாளைக்கு அந்தப் புரொபஸர் அம்மா வீட்ல எனக்கு ட்யூட்டி. போகணும்“ என்றாள் மந்தாகினி.

“ஸ்வீட் எடுத்துட்டுப் போக்கா”

“வேற வினையே வேணாம். அவங்க ஷுகர் பேஷண்ட். ஹார்ட் ட்ரபிள் கொஞ்சம் இருக்காப்பல இருக்குது. அவங்களை ரொம்ப கேர்ஃபுல்லா கவனிக்கணும்.

இருவரும் கட்டிலில் போய் அமர்ந்தார்கள். ஏதாவது பேசிக் கொண்டே தூங்குவது வழக்கம்தான். விளக்கை அணைத்தாள் மந்தா.

“உனக்குப் பாடம் எடுப்பாங்களா அந்த புரொபஸர் அம்மா”.

இரவு வெளிச்சத்திலும் மந்தா சிரிப்பது மஞ்சுவுக்கு அழகாக இருந்தது.

“ஆங்கிலம் எந்த அளவுக்குப் படிச்சிருக்காங்களோ அந்த அளவுக்குத் தமிழையும் படிச்சிருக்காங்க. கம்பன், மில்டன், ஷேக்ஸ்பியர், பாரதி, பாரதிதாஸன்னு அவங்க வார்த்தைகளில் புகுந்து விளையாடுங்க. எனக்கு அங்கே ட்யூட்டின்னா சந்தோஷமாக இருக்கும்“ என்று மந்தா சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே கைபேசி அழைத்தது.

“நம்பளைப் போல மகேஷ் வீட்லயும் தூங்கல போல” என்றபடி கைபேசியை உயிர்ப்பிக்க மகேஷின் குரல் பதட்டமாக ஒலித்தது. ஒரு மருத்துவமனையைக் குறிப்பிட்டு அங்கே வாங்க என்றான் மகேஷ் பதட்டமாக.

## 5

தங்கையிடம் விஷயத்தைச் சொல்ல இருவருமே தூக்கக் கலக்கம்

போய்விட முகத்தைத் தண்ணீர் விட்டு கழுவித் துடைத்துக் கொண்டு கிளம்பினார்கள். அவ்வளவு பதட்டத்திலேயும் மந்தாகினி சுறுசுறுப்பாக செயல்பட்டாள். சேவை நிலையத்தின் பழக்கம் கை கொடுத்தது.

கைக் கூடை ஒன்றில் பழங்கள், கத்தி, கைத்துடைக்க துண்டுகள், சூடான பால் அடங்கிய பெரிய பிளாஸ்க் என்று வைத்து நிரப்பிக் கொண்டாள். அக்காவின் சமயோஜிதம் தங்கையை பிரமிக்க வைத்தது. இருவரும் வெளியே பெரிய கடைத் தெருவிற்கு வந்தார்கள். கடைகள் பூட்டப்பட்டுத் தெருக்கள் வெறிச்சிட்டுக் கிடக்கும் சமயம்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆட்டோக்கள் ஓடிக் கொண்டிருக்க, இவர்களுக்கு ஆட்டோ கிடைத்தது. ஏறி அமர்ந்து கொண்டார்கள். தங்கையின் அனுபவமில்லாத முகத்தைப் பார்த்தான் மந்தாகினி. கையைப் பற்றிக் கொண்டாள்.

"மகேஷ் போன் பண்ணினதாலே அவனுக்கு ஒண்ணுமிருக்காது. பாலம்மா வயசானவங்க. இந்த வயசுக்குன்னே பிரஷர், ஷுகர் எல்லாம் காத்துக்கிட்டு ஓடி வந்துடும். நிச்சயதார்த்த வேலைகளை இழுத்துப் போட்டுக்கிட்டு செஞ்சிருக்காங்க. கவலைப்படாதே ரெண்டு இஞ்செக்ஷன் போட்டு பெட் ரெஸ்ட் இருந்தா சரியாய்ப போயிடும் என்றாள் மந்தாகினி.

சேவை நிலையத்து நோயாளிகளுக்கு இப்படி உடம்புக்கு வருவதும், இவர்கள் மருத்துவமனைக்கு ஓடுவதும் சகஜமாகிப் போனதால் மந்தாகினி நெஞ்சில் தனித் துணிவு இருந்தது. செல்லமாக வளர்ந்த மஞ்சுவுக்கு அந்த அனுபவம் ஏதுமில்லை. பயம் நெஞ்சைத் தட்டிப் படபடக்க வைத்தது.

அன்றைய மதியம் நெக்லெஸையும், வளையல்களையும் அவளுக்கு அணிவித்து நெற்றியில் முத்தமிட்ட பாலம்மாவின் கனிந்த முகமே மனக்கண்களில் வந்து நின்றது.

"ஈஸ்வரா, அம்மாவுக்கு ஒண்ணும் வரக் கூடாது." என்று கைகுவித்து வேண்டிக் கொண்டாள்.

அவர்கள் மருத்துவமனையில் இறங்கும் பொழுது மணி பன்னிரெண்டு. பாலம்மா ஐ.ஸி.யூ.வில் இருக்க, அறையின் முன் வரிசையாகப் போட்டிருந்த நாற்காலியில் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் மகேஷ்.

"மகேஷ்" என்று மந்தா குரல் கொடுத்ததும், குரலைக் கேட்டுத்

தாவி ஓடி வந்து மந்தாவை அணைத்துக் கொண்டு தோளில் முகம் புதைத்து சிறுபிள்ளை போல "அம்மா... அம்மா..." என்று தேம்பினான்.

அவனும் சிறகில் வைத்துப் பாதுகாத்து மூடிய குஞ்சாக அன்னையின் அணைப்பில் வளர்ந்தவன். ஆண்பிள்ளை என்பதால் மஞ்சுவைவிட கொஞ்சம் உலக அனுபவங்களைக் கற்று வருபவன். அவன் அழுததும் மஞ்சுவால் தாங்க முடியவில்லை. அவன் தோளைத் தட்டிக் கொடுத்தாள்.

அவனைத் தாங்கி மெல்ல நடத்தி ஒரு நாற்காலியில் அமர வைத்தாள். "என்ன மகேஷ், என் கைலேயும், அம்மா கைலேயும் ஒரு பாப்பாவைத் தரப் போறீங்க. இப்படி அழலாமா? வயசாச்சுன்னா ஏதாவது ஒரு நோய் வரத் தான் கண்ணா செய்யும். இதை விட மோசமான கேஸெல்லாம் சேவை நிலையத்துல கண்டிருக்கேன். தைரியமா இரப்பா"

கண்களைத் துடைத்துக் கொண்ட அவனுக்கு சூடான பாலை கப்பில் ஊற்றி "இதைக் குடி" என்று கொடுத்தாள்.

அவனும் குடித்தான். தனக்குத் துணையாக மந்தாகினியும், மஞ்சுவும் வந்ததே தைர்யத்தைக் கொடுத்தது. மஞ்சுவின் அக்காவை அவன் அக்கா என்று தான் அழைத்தான்.

அக்கா, என்னை விட்டுப் போக மாட்டீங்களே? என்று கைகளைப் பற்றுக் கொண்டு கரைந்தான்.

என்ன மகேஷ்... நீயும் எனக்கு மஞ்சு மாதிரி தான். ரிலாக்ஸ் பண்ணிக்க என்றாள்.

அவன் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தான். உட்கார்ந்தான்.

"ஏன் அம்மா திடீர்னு இப்படியானார் என்று கேட்டாள் மந்தா.

அக்கா எதற்காக இதைக் கேட்கிறாள்? மகேஷ் திரும்பவும் அடி ஆரம்பித்து விடுவானோ அதற்கேற்ப மகேஷ் கைகளால் முகத்தை மூடிக் கொள்ள பயந்து போனாள் மஞ்சு.

"அக்கா" என்று தோளைத் தொட்டாள்.

"மகேஷ், அம்மா அதிர்ச்சி அடையும்படி ஏதாவது நடந்ததா? என்று மீண்டும் மந்தா கேட்க இதெல்லாம் இப்ப வேண்டாமே? என்று மஞ்சு தடுத்தாள்.

"நாம கேட்காட்டாலும் மஞ்சு, டாக்டர் கேட்பாங்க. அதுக்கு

முன்னாடி நாம தெரிஞ்சுக்கறது நல்லதுதானே?"

மகேஷ் மந்தாவின் அனுபவமுள்ள வார்த்தைகளைப் புரிந்துக் கொண்டான்.

"அக்கா, நான் பண்ணினது தப்பா இருக்குமா?"

"என்ன தப்பு பண்ணினே?" என்றவள் மீண்டும் பாலை ஊற்றிக் கொடுத்தாள்.

"அக்கா, அம்மாவை இதுவரை அப்பாவைப் பற்றிக் கேட்டதில்ல. இன்னிக்கு மஞ்சுவுக்கு நெக்லஸ் வளையல்னு போடறப்ப" என் கணவர் எனக்குப் போட்டது"னு சொன்னாங்க. அது என் மனசுல பல எண்ணங்களைத் தோற்றுவித்தது. அம்மாகிட்ட என் அப்பாவைப் பத்திச் சொல்லுங்க. எனக்கு அவரைப் பார்க்க ஆசையா இருக்குது. என் கல்யாணத்துக்கு அவர் வருவாராம்மா. அவரைக் கண்டிப்பா அழைக்கணும்னு சொன்னேன். அக்கா, நான் சொன்னதுல ஏதாச்சும் தவறு இருக்குதா அக்கா?" என்று கேட்டான் பரிதாபமாக.

'நாம யோசிச்சதைத்தான் இவனும் கேட்டிருக்கான்' என்று அக்காவும் - தங்கையும் கண்களால் பேசிக் கொண்டார்கள்.

"ஒண்ணும் தப்பு இல்ல மகேஷ். எனக்குக் கொஞ்சம் ஆன்மீகத்துல நாட்டம் உண்டு. தந்தையின் வயிற்றில் இருக்கும் -------- ஒரு ஜனிப்பு. தாயின் வயிற்றில் அந்த ஜனப்பு கருவாகிக் குழந்தையாகி வளர்வது இன்னொரு ஜனிப்பு. குழந்தை முழு உருவாகிப் பிறப்பது மூன்றாவது ஜனிப்பு. இதைப் புரிந்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது ஜனிப்பை ஏந்திய தாய்தான் பூமியில் ஜனனமாகும் முழுக் குழந்தைக்கு முதல் ஜனிப்பைக் கொடுத்தவரை இவர்தான் உன் அப்பானு காட்றா மகேஷ்",

மந்தாவின் பேச்சில் மனம் தெளிந்து போனது போல் இருந்தது. உலகில் தெரிந்துக் கொள்ள எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன. கவர்ச்சியின் மூலம் கலந்து கருவைக் கலைப்பது எவ்வளவு பெரிய பாவம்? இந்த ஜன சமுத்திரம் மனம் போன போக்கில் வாழ்வை வாழ்வது எவ்வளவு பெரிய அளவீனம். ஜனனம் என்பது எவ்வளவு புனிதம் என்பதை மனிதன் புரிந்துக் கொள்வானா?

"என்ன மகேஷ்? புரிஞ்சுண்டியா?

"இவர்தான் உன் அப்பானு அம்மா இதுவரைக் காட்டல்லையே?"

"ஏதாவது காரணம் இருக்கும் மகேஷ்"

“அதைத்தான் கேட்டேன் நானும்“ என்று சொன்ன பொழுது டாக்டர் ஐ.ஸி.யூவிலிருந்து வெளியே வந்தார்”.

மூவரும் அவரைச் சூழ்ந்துக் கொண்டனர்.

“டாக்டர், பாலாம்மா எப்படி இருக்காங்க”. மயக்கம் தெளிஞ் சிடுச்சா?” மந்தாதான் கேட்டார்.

“இல்லம்மா” என்றவர் மகேஷைப் பார்த்து “நீங்கதானே இவர் சன்” என்று கேட்டார்.

“ஆமாம் சார்” என்றவன் மஞ்சுவையும் மந்தாகினியையும் அறிமுகப்படுத்தினான்.

டாக்டர் ஏற இறங்கப் பார்த்தார்.

“இன்னிக்குத்தான் எங்க நிச்சயதார்த்தம் நடந்துச்சு ஸார்” என்றான் மகேஷ்.

“பிரஷர் கட்டுக்கு அடங்காம ஏறிருக்கு. ஆழ்ந்த மயக்கத்துல இருக்காங்க. ஹார்ட் ட்ரபிள் கொஞ்சம் இருக்கும் போல இருக்கே” என்றார்.

“எப்பசாவது கொஞ்சம் மூச்சுவிடச் சிரமப்படுவாங்க. வீட்டை விட்டு வெளியே போக மாட்டாங்க.”

“நிலைமை கட்டுக்கு அடங்காம தான் இருக்கு. அதிர்ச்சியான விஷயம் எதையாவது கேட்டிருப்பாங்க போல இருக்குது. பொறுத்திருந்து பார்ப்போம்“ என்றார் டாக்டர்.

“நாங்க பார்க்கலாமா?”

“மயக்கமா இருக்காங்க. நினைவு வரட்டும். அப்புறம் பார்க்கலாம்“ என்றார் டாக்டர்.

“அக்கா, எனக்கு பயமா இருக்கு”.

“பயப்பட ஒண்ணுமில்ல மகேஷ். டாக்டர் தான் நினைவு திரும்பட்டும்னு சொல்றாரே. கவலைப்பட ஒண்ணுமில்ல. அப்புறம் அம்மா என்ன சொன்னாங்க. அப்பாவைப் பத்திச் சொன்னாங்களா?”

“இல்லக்கா. சமயம் வரப்ப சொல்றேன்னு சொல்லிட்டாங்க.”

“அதுக்கு அப்புறமாவா மயக்கமாய்ட்டாங்க”

“ம்... இல்லையேக்கா.. பசி இல்லேனு பழமும் பாலும்தான்.

சாப்பிட்டோம். படுத்துக் கொஞ்ச நேரம் கழிச்சு போன் வந்துச்சு. அம்மாவுக்கு அடிக்கடி போன் வரும்."

"அந்த நேரத்துலயா?

"அக்கம் பக்கத்துல அம்மா கிட்ட குழந்தை உடம்பு கொதிக்குது. குழந்தை வாந்தி எடுக்குதுனு ஏதாவது கேட்பாங்க. ஆனா அம்மா உள்ளே போய் பேசிட்டு வந்தாங்க. முகம் கன்னி போயிருந்துச்சு. என்னம்மானு கேட்டேன். கண் கலங்கின மாதிரி இருந்துச்சு. கொஞ்ச நேரத்துல நெஞ்சு வலினு சொல்லி மயக்கமாய்ட்டாங்க".

மந்தாகினி யோசித்தாள்.

"அப்ப அந்த போன் செய்தியிலதான் ஏதோ ஓர் அதிர்ச்சியான செய்தியா இருக்கும்னு எனக்குத் தோணுது மகேஷ்"

"அம்மா நிறையப் போன் பண்ணுவாங்க எனக்கு ஒண்ணும் தோணினாதே இல்லக்கா. இப்ப நீங்க சொன்ன பிறகுதான் அப்படி இருக்குமோனு தோணுது.

"நீ இன்னும் அம்மா கைப்பிள்ளையாத் தான் இருக்கே மகேஷ்"

"இப்ப என்னக்கா பண்றது?"

"அம்மாவோட மொபைல் எங்கே?"

"வீட்ல இருக்கும் அக்கா"

"போய் எடுத்துட்டு வா. அந்த எண்ணை அம்மா டெலிட் பண்ணி இருக்க மாட்டாங்க. ஒரு ஆட்டோ பிடிச்சுட்டு போ.. வரப்ப உன்னோட பைக்ல வந்துரு."

மந்தாகினியின் பேச்சுக்கும் கட்டுப்பட்ட மகேஷ் கஷ்டப்பட்டு ஆட்டோ பிடித்து வீட்டுக்குப் போனான்.

## 6

அடுத்த அரைமணியில் பாலாம்மாவின் கைபேசியோடு வந்தான் மகேஷ். அதற்குள் மந்தாகினி பழங்களைத் துண்டு போட்டு வைத்திருந்தாள்.

"எடுத்துக்க மகேஷ்"

“இப்ப வேணாம் அக்கா”

“நான் சொல்றேன் எடுத்துக்க. டென்ஷன் ஆகாதே. பழத்தைத் தின்னு. பாலைக்குடி”

அவன் கண்கள் நீரால் நிரம்பி நன்றியைக் காட்டின”. இந்த சமயத்துல கடவுள் அனுப்பி வச்ச துணை நீங்க” என்ற மகேஷ் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

அவன் பழத்தைத் தின்னு பாலைக் குடித்த பின்பு” மகேஷ். இப்ப நம்பரைப் பார்” என்றான்.

“இருக்கு அக்கா”

“அப்ப நம்பரை அழுத்து”

“நமக்குத்தான் நேரம் காலம் ஒண்ணும் இப்ப இல்ல. இப்பப் போயி தொந்தரவு பண்ணலாமா!”

“நமக்கு இப்ப செய்தி முக்கியம். என்ன செய்தி இவங்களை அதிர்ச்சி அடையச் செய்திருக்குதுனு தெரியணும். நேரம், காலத்தைப் பார்க்காதே” என்றாள் மந்தாகினி.

மஞ்சு அக்கா மந்தாகினி செயலாற்றும் திறனை எண்ணி வியந்தவாறு பார்த்துக் கொண்டிருந்தாள்.

எண்களை ஒற்றினான் மகேஷ்.

எதிர்முனையில் உள்ளவர் எண்களைப் பார்த்து பாலாம்மா தான் என்று எண்ணி இருக்க வேண்டும்.

“என்னம்மா, ரொம்ப அதிர்ச்சியான விஷயத்தைச் சொல்லிவிட்டேன். அழுதுகிட்டே இருக்கீங்களா? மனுஷ வாழ்வு அவ்வளவு தான். நீங்க தைர்யமான பெண்மணி. நீங்க இப்படி கலங்கலாமா? உங்க காலம் உள்ள வரை ஜீவிப்பதற்கு வேண்டிய பணத்தை ஜமீன்தார் எங்கிட்ட கொடுத்துட்டுத்தான் போயிருக்கார். அதை உங்ககிட்ட சேர்ந்துட்டு இன்னும் ஒரு வாரத்துல கனடால இருக்கற மகன்கிடட போயிடப் போறேன். எப்ப வரட்டும்னு சொன்னீங்கன்னா வந்து கொடுத்துடறேன்.”

மகேஷ் ஒரு நிமிஷம் விழித்தான்.

“மகேஷ், அவர் பேசினது எனக்கும் கேட்டது. நீ இப்ப அம்மாவோட நிலையைச் சொல்லி இங்கே வரச் சொல்லு” என்று வேகமாகச்

சொன்னாள்.

“என்னம்மா, பாலாம்மா, ஏன் பேசமாட்டேங்கறீங்க. ஜமீன்தார் எதிர்பாராம இறந்துட்டார். வருத்தப்படாதீங்கம்மா” என்று எதிர்முனைக்காரர் பேசினதும், மகேஷ் வாயைத் திறந்தான்.

“ஐயா, நான் பாலாம்மாவோட மகன் பேறேன். உங்கக்கிட்ட பேசிட்டு வந்து படுத்த அம்மா மயக்கமாய்ட்டாங்க. நீங்க என்ன சொல்றீங்கனு புரியல்ல. அம்மாவோட மயக்கம் தீரல்ல. நீங்க வந்து பேசினா எனக்கும் புரியும் எல்லா விவரமும்“ என்றவன் எந்த மருத்துவமனை என்ற விவரத்தை சொன்னான்.

“எங்கிட்ட கார் இருக்குது. நான் சேலையூர் தாண்டி இருக்கேன். வந்துர்றேன்” என்றார் அந்த மனிதர்.

அவர் தன்னிடம் பேசியவற்றை எல்லாம் மந்தாகினியிடமும், மஞ்சுவிடமும் பேசி தன் சந்தேகங்களையும் சொன்னான்.

“யாரோ, ஜமீன்தார். இறந்துட்டார்னு சொல்றார். அதனாலதான் அம்மா ஷாக் ஆயிட்டாங்கனு புரியுது. அம்மா காலம் முழுக்க வசதியா வாழப் பணம் தரணும்?” என்று சொன்னான் மகேஷ்.

“ஒருவேளை நீஙக ஜமீன்தார் மகனோ?” என்று கேட்டார் மஞ்சு.

ஒருகணம் அவளையே பார்த்தான் மகேஷ். “நல்ல ஜோக். இந்த வருஷத்து ஜோக்னு எடுக்கறேன்” என்றான் மகேஷ் இதழ்களில் சின்னப் புன்னகை அரும்ப.

“அப்படின்னா அந்த ஜமீன்தார் யார்?” என்று மஞ்சு கேட்க “தெரிஞ் சா கொஞ்சம் சொல்லேன் மஞ்சு” என்று மகேஷ் கிண்டலாகக் கேட்டனர்.

“மகேஷ், இப்படித்தான் இருக்கணும்“ என்றாள் மந்தாகினி.

இவர்கள் ஜமீன்தாரைப் பற்றியும், அவருக்கும, பாலாம்மாவுக்கும் என்ன உறவு என்றெல்லாம் மண்டையை உடைத்துக் கொண்டு சிந்தித்த பொழுது, இத்தனை நேரம் அவர்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்ட மனிதர் வந்து நின்றார்.

அப்போது மணி நாலரை.

“ராத்திரியானாலும் லாரிகள் சர்சர்னு போய்ட்டு வந்துக்கிட்டு இருக்கிறதா... அங்கேங்கே ட்ராபிக் ஜாம்.. ஸாரி.. அதான் லேட்டாயிடுச்சு” என்றார் வந்த மனிதர்.

“என் பெயர் மகேஷ். பாலாம்மாவோட மகன்”.

“என் பெயர் நாராயண ஸ்வாமி. மகிழ மலை ஜமீன்தாரோட பெர்சனல் செகரட்டரி.. ஜமீன்தார் இப்ப இல்ல.. ஒன்னரை மாசத்துக்கு முன்னாலே இறந்துட்டார். இப்ப நிர்வாகம் சரியில்ல. அதனால நான் என் மகனோட போய் தங்கிடப் போறேன்” என்றார். நாராயண ஸ்வாமி.

ஐ.ஸி.யூ கண்ணாடிக் கதவு வட்டத்தின் வழியே உடம்பில் ட்யூப்க்கள் செருகப்பட்டுக் கிடந்த பாலாம்மாவைப் பார்த்து அதிர்ந்து போனார்.

“எவ்வளவு தீரமான பெண்மணி. ஜமீன்தாரோட மறைவு அவங்களை எப்படித் தாக்கிடுச்சு பாருங்க” என்று சன்னக்குரலில் முனகினான்.

“இன்னும் ஜமீன்தார் ஆட்சி இருக்குதுங்களா ஐயா?” என்று கேட்டான் மகேஷ்.

“நீ என்னப்பா இன்னும் சின்னப்பிள்ளையாவே இருக்கே. நிறைய சொத்து இருந்தா அதை நிர்வாகம் பண்றவங்களை பழங்காலம் தொட்டு ஜமீன்தார்னு சொல்லுவாங்க. பரம்பரையா அந்தப் பேர் அப்படியே நிலைச்சுடுச்சு. நம்ம ஜமீன்தார் ஐயாவுக்கும் மகிழ மலைமேல உள்ள சுத்து வட்டார கிராமங்கள் சொந்தம் பரம்பரை ஜமீன்தார் மகேஷ்.

ஜமீன்தாருக்கும், தன் அம்மா பாலாம்மாவிற்கும் என்ன சொந்தம் என்று அவன் கேட்க நினைத்தும் வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டன. ஆனால் மந்தாகினி அதே கேள்வியைக் கேட்டதும் மகேஷிற்குத் திருப்தியாக இருந்தது.

“நாராயண ஸ்வாமி ஐயா, ஜமீன்தாார் இறந்து போனது பாலாம்மாவிற்கு மெத்த அதிர்ச்சினு சொன்னீங்க. பாலாம்மா ஜமீன்தார்க்கு என்ன உறவு முறைனு சொன்னீங்கனா எங்க குழப்பம் தீரும்“

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே பொழுது பலபலவென்று விடிந்துக் கொண்டு வந்தது. மகேஷ் எழுந்து போய் ஐ.ஸி.யூவில் இருக்கும் பாலாம்மாவின் மயக்கம் தீரவில்லை என்று தெரிந்துக் கொண்டு வந்தான்.

“வாங்க எல்லாரும் கேண்டீன்ல போய் முதல்ல காப்பி குடிச்சிட்டு

வரலாம்“ என்று மந்தாகினி எழுப்ப அனைவரும் முகம் கழுவிப் பல் விளக்கினார். இரவு தூங்காத களைப்பு விலகியது.

கேண்டீனில் இன்னும் கூட்டம் சேரவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக மேஜை நிரம்பி இருந்தது. இட்லி, சாம்பார் மணத்தது. இட்லிகளை வாங்கி வந்தாள் மந்தா.

“எனக்கு சாப்பிடணும் போல இல்ல அக்கா” என்றான் மகேஷ்.

“ராத்திரி கூடச் சாப்பிடல்ல. என் பேச்சைக் கேட்கணும். முதல்ல சாப்பிடு மகேஷ்”

“குட்பாய் அப்ப சாப்பிடு”

நாராயண ஸ்வாமிக்கு நல்ல பசி போலும் இன்னொரு ப்ளேட் இட்லி வாங்கி சாப்பிட்டுவிட்டு காப்பியைக் குடித்தார்.

“இவங்க யார்னு ஒண்ணும் சொல்லியே தம்பி மகேஷ்” என்று மந்தாகினியைச் சுட்டிக் கேட்டான் நாராயண ஸ்வாமி.

மஞ்சுவைச் சுட்டிக் காட்டிய மகேஷ்” இவளுக்கும் எனக்கும் தான் நேத்து நிச்சயதார்த்தம் நடந்துச்சு. அம்மா ரொம்பவே சந்தோஷமா இருந்தாங்க. இவங்க மஞ்சுவோட அக்கா மந்தாகினி. எனக்கும் இவங்கதான் அக்கா. இப்ப உறவுனு சொல்லிக்க இவங்கதான் இருக்காங்க” என்று அறிமுகத்தை முடித்தான் மகேஷ்.

“ஐயா, நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலையே?” என்று மந்தாகினி கேட்டாள்.

நாராயண ஸ்வாமி சற்றே யோசித்தார். பெரிய இடத்து விவகாரத்தில் தலையிடக் கூடாது. இது அவரின் கெட்ட எண்ணம் ஒன்றுமில்லை. எதையாவது தான் சொல்லிவிட்டு கனடா போய்விடுவோம். இங்கு ஏதாவது தகராறு வந்தால் என்ன செய்வது என்று யோசித்தார். ஒரு நல்லது நடக்க வேண்டும் என்றால் பொய் சொல்லுவதில் தவறில்லையே.

“நான் ஜமீன்தாரிடம் வேலைக்குப் போய் பதினைஞ்சு வருஷம் ஆறது. நான் வந்த நாள்லேர்ந்து ஜமீன்தார் ஷண்முக சுந்தரம் மாதா மாதம் பணம் தருவார். அதை பாலாம்மாவிடம் கொடுத்து விட்டு வருவேன். அதிகப்படியான செலவு இருக்கும் மாதங்களில் அதிகமாகவே கொடுத்தனுப்புவார்.” என்றார் நாராண ஸ்வாமி.

“நீங்க ஒண்ணும் கேட்கல்லையா?” என்று கேட்டாள் மந்தாகினி.

“இல்ல தாயி. பெரிய இடம். ஏதாவது பேசி பொல்லாப்பு வந்துரக்

கூடாது. இல்லையா? ஜமீன்ல செல்வ வளமான வாழ்க்கை. அதைக் கெடுத்துக்கக் கூடாது இல்லையா?" என்று காரணத்தைச் சொன்னார்.

"அதனால நீங்க எதையும் கேட்கல்ல இல்லையா?"

"எனக்கும் அதுக்கும் சம்பந்தமில்லாத விஷயமாச்சே" என்றார் நாராயண ஸ்வாமி.

எதுவானாலும் அவர் தனக்குத் தெரிஞ்ச விஷயத்தை அவர்களிடம் சொல்ல மாட்டார் என்பதைப் புரிந்துக் கொண்டார்கள். ஜமீன்தார் அவர்களுக்கும் பாலாம்மாவுக்கும் என்ன உறவு? ஜமீன்தார் ஏன் பாலாம்மாவுக்கும் பணம் தர வேண்டும் என்று பல கேள்விகள் தண்ணீரில் சுழலும் சுழியாக மனத்தில் புரண்டன.

ஐ.ஸி.யூ டாக்டர் வெளியே வந்தார்.

"கொஞ்சம் நினைவு வந்திருக்கு. பேசாம போய் பாருங்க" என்றார்.

நால்வரும் போய் நிற்க பாலாம்மாவின் விழிகள் சுழன்றன. நாராயண ஸ்வாமியின் முகத்தில் பார்வை பதிய மீண்டும் மயக்கமானாள்.

## 7

ஐ.சி.யூ. டாக்டர் அழைக்கப்பட்டு உடனே வந்தார். இரத்தக் கொதிப்பு அதிகமாகி விட்டிருப்பது தெரிந்தது. மானிட்டரில் கோடுகள் தாறுமாறாக ஓடின.

"வெளியே போயிடுங்க" என்ற டாக்டர் நர்ஸை அழைத்து இஞ் செக்ஷன் போடச் சொன்னார்.

நாராயண ஸ்வாமியின் முகத்தைப் பார்த்ததும் பாலாம்மாவின் முகம் இறுகியதை மகேஷ் கண்டுக் கொண்டான். நால்வரும் வெளியே வந்தார்கள். தன்னைப் பார்த்ததும் தான் பாலாம்மா மீண்டும் மயக்கமானாள் என்பது நாராயண ஸ்வாமிக்குப் புரிந்தது. இனியும் தான் அங்கிருந்து பாலாம்மாவை அலைக்கழிக்க அவர் விரும்ப வில்லை.

"மகேஷ் தம்பி, எனக்கு கனடா புறப்பட வேண்டி இருக்குது. அதற்கு உண்டான ஏற்பாடுகளைச் செய்யணும். அம்மாவுக்கு ஒண்ணும் ஆகாது. பயப்படாதீங்க. என் பொறுப்பை உங்க கிட்ட ஒப்படைச்சுட்டு கிளம்பறேன்" என்றார்.

“என்ன பொறுப்பு”

“என் கூடக் காருக்கு வாங்க” என்றார். கீழ்தளத்திற்கு வந்து காருக்கும் போகும் முன் மகேஷ் “மணி ஒன்பதாகப் போகிறது டிபன் சாப்பிட்டு விட்டுக் கிளம்புங்க. சேலையூர் போக நேரம் பிடிக்கும். ட்ராபிக் ஜாம் ஆரம்பிச்சிடும்“ என்றான்.

டிபன் சாப்பிட்டார்கள். காருக்கு வந்தார்கள். பெண்கள் இருவரும் கார் கதவருகே நிற்க மற்ற இருவரும் காரில் ஏறி அமர்ந்துக் கொண்டார்கள்.

“ஜமீன்தார் தான் சாகப் போகிறோம் என்று தெரிந்ததும் யார் யாருக்கு என்ன தரணும்னு தீர்மானம் பண்ணிட்டார். முதல்ல ஏற்பாடு பண்ணினது உங்கம்மாவுக்குத் தான். ஐம்பது லட்சம் கொடுத்தார். அதை உங்கம்மா அக்கண்வுட்ல போட்டுட்டேன். அதற்குண்டான சலான் ரசீதுகள் இருக்கு. அதையும் ஜமீன்தார்கிட்ட காட்டிட்டேன். அவர் உங்கம்மாவுக்கு எழுதின கடிதம் ஒண்ணு உங்கம்மாவுக்கு இருக்குது. இந்தா, நீ நிதானமாப் படி. நான் கிளம்பறேன்” என்றதும், மகேஷ் கரம் கூப்பி விடை தர அவர் கிளம்பிப் போனார்.

அவர் கிளம்பிப் போனதும் மற்ற மூவரின் மனங்களும் அலை பாய்ந்தன. மூவரும் ஐ.ஸி.யூ. தாழ்வாரத்திற்கு வந்து நாற்காலில் அமர்ந்துக் கொண்டார்கள். சட்டென்று மகேஷ் மந்தாகினியின் கையைப் பற்றிக் கொண்டான்.

“அக்கா, இந்த நாராயண ஸ்வாமி ஐயா வந்து பேசினதிலேர்ந்து எனக்குள் பலவித குழப்பமான எண்ணங்கள் மேலேழும்புகின்றன. அம்மா நல்லபடியா எழுந்து எனக்கு ஏற்பட்டிருக்கற குழப்பங்களைத் தீர்ப்பாங்களானு பயமும் ஏற்பட்டிருக்கு. அக்கா, நான் சரியான முறையில் ஜமீன்தார்க்கும், பாலாம்மாவிற்கும் பிறந்திருப்பேனா? ஜமீன்தார்க்கும் அம்மாவிற்கும் நல்லமுறையில் பிறந்திருப்பேனா! அம்மாவும் ஜமீன்தாரும் எனக்கா பிரிஞ்சு வாழறாங்க! எதுவானாலும் என்னை ஒதுக்கிட மாட்டீங்களே?” என்று அவள் கையை பற்றி முகத்தில் வைத்துக் கொண்டு கரைந்தான் மகேஷ்.

முதுகில் தட்டினாள் மந்தாகினி “அழறது ஆண்பிள்ளைகளுக்கு அழகல்ல மகேஷ். எதுவானாலும் என்ன பண்ண முடியும்? வரதை ஏத்துக்கத்தான் வேணும். உன் கூட கொஞ்ச நாளா பழகறோம். உன்னோட மேலான குணம் என்னைக் கவர்ந்து விட்டிருக்கு. குலத்தை வச்சு எடை போடறதை விட குணத்தை வச்சுத்தான் ஒரு மனுஷனை எடை போடணும். ஜமீன்தார் அம்மாவோட எப்பேர்பட்ட

தொடர்பு வச்சிட்டு இருந்தாலும் சரி. அதைப் பத்தி கவலையில்லை. கடைசி மூச்சு இருக்கற வரைக்கும் கைவிடாம இப்பவும் ஐம்பது லட்ச ரூபாயை கொடுத்துட்டு போயிருக்கார். இது மேலான குணம் இல்லையாப்பா! கைல உள்ள லெட்டரைப் படி. ஏதாவது புரியுதானு பார்க்கலாம்“ என்றாள் மந்தா.

கூடையிலிருந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்ட மகேஷ், சலானை எடுத்து மந்தாகினியிடம் கொடுத்தான். “பத்திரமா வைங்க அக்கா” என்றான்.

ஒட்டப்பட்ட கலரைப் பிரித்தான். அதில் கடிதத்துடன் ஜமீன்தாரின் போட்டோவும் இருந்தது. மடிக்கப்பட்ட கடிதத்தைப் பிரித்தான்.

அன்புள்ள பாலாம்மா,

மரணப் படுக்கையிலிருந்து இக்கடிதத்தை உனக்கு எழுதுகிறேன். நாலு பேர் முன்பு கௌரமாக நடமாடாமல் நத்தையைப் போல் சுருங்கிக் கொண்டு மகன் மகேஷை நல்ல பிள்ளையாக வளர்த்து விட்டிருக்கிறாய். சென்னை வரும் பொழுதெல்லாம் உன்னைப் பார்க்க என் மனம் துடிக்கும். பாலா, உனக்கு இந்த கௌரவமான வாழ்க்கைக்கு என்னால் பங்கம் வரக் கூடாது என்று பயந்து உன்னைப் பார்ப்பதைத் தவிர்த்திருக்கிறேன்.

ஆனால் பாலா, என் மகனைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லையே. அவன் பள்ளி வாசலிலும், கல்லூரி வாசலிலும் மறைந்து நின்று பார்த்துவிட்டே இரகசியமாக மகிழ மலைக்குப் போவேன். அவனைப் பார்க்கும் பொழுது ஏற்படும் மகிழ்ச்சி ரத்த நாளங்களில் விண் விண்ணென்று தெறித்து வெடித்து விடும் போலத் துடிக்கும். எடுத்து மார்புறத் தழுவிக் கொஞ்சி கொழுமியக்கன்னங்களில் முத்தமழை பொழியத் துடிக்கும் என்னுடைய ஆவலை உன்னால் மட்டுமே புரிந்துக் கொள்ள முடியும்.

எனக்காக தியாகம் செய்தவள் நீ. ஒருநாள் என் மகனுடன் நிச்சயம் சேருவேன் என்ற எண்ணத்தை விதி சதி செய்துவிட்டது பாவிகள் என்னையும், என் மகனையும் பிரித்துவிட்டனர். உனக்கு என்று சில நகைகளை கொடுத்தேன். நீ அவற்றைப் போட்டு அனுபவித்து இருக்க மாட்டாய் என்பது தெரியும். உனக்கு என்று ஐம்பது லட்ச ரூபாயையும், என் மகனின் அன்பையும், பாசத்தையும் அனுபவிக்கும் உரிமையையும் உனக்குத் தந்திருக்கிறேன்.

பாலா, உன்னுடைய தியாகத்தில் நாராயண ஸ்வாமிக்கும் பங்கு

உண்டு. உன் கணக்கில் பணத்தைப் போட்டு விட்டு என்னிடம் காட்டவும் செய்வான். உலகில் நியாயவான்கள் அவனைப் போல யார் இருப்பார்கள்? பாலா, என் பொறுப்பை நீ ஏற்று செய்த செயலுக்கு என்ன கைமாறு செய்யப் போகிறேன்!

பாலா, உன்னால் முடியுமானால் உரிய காலத்தில் மகிழ மலையைப் பற்றிச் சொல்லி எனக்கு துரோகம் செய்த பாவிகளை விரட்டச் சொல். அப்பொழுதுதான் என் ஆத்மா சாந்தியடையும்.

பாலாம்மா, இதை என் மரண ஓலையாக ஏற்றுக் கொள். எனக்கு இன்னொரு ஆசையும் உண்டு. அடுத்த ஜென்மம் ஒன்று உண்டு என்று கூறுவதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அப்பொழுது உன் மகனாகப் பிறந்து உன் மடியில் நான் தவழ வேண்டும். இதுதான் என் பிரார்த்தனை. என் வாழ்நாளின் இறுதி நன்றியை நான் செலுத்துகிறேன் உனக்கு. இதைப் படிக்கும் பொழுது நான் நிச்சயம் இருக்க மாட்டேன். ஆனால் உன் நினைவில் இருப்பேன்.

இப்படிக்கு, ஷண்முக சுந்தரம் மகிழமலை ஜமீன்தார்.

இதைப் படிக்கும் பொழுதே மகேஷின் கொழுமிய கன்னங்களில் கண்ணீர் நீர்த்தடமிட்டது.

“எல்லாமே விளங்கி விட்டது. இல்லையாக்கா?” என்று தழுதழுத்த குரலில் கேட்டான் மகேஷ்.

“மனசு எப்பவும் கற்பாறையாக இருக்கணும் மகேஷ். அதிக வெயில் தாக்கறப்ப சூடாக இருக்கணும். உருகக் கூடாது. மழையில வழுக்கும். ஈரம் பாயும். நாம அதுல கரையக் கூடாது. பனியில ஐஸ் பாறையா இருக்கும். நாம அதில உறைஞ்சு போகக் கூடாது. நம்ம மனசு நம்ம கிட்டதான் இருக்கணும். சூடு தாக்காம, கரையாம உறையாம வச்சுக்கப் பழகு மகேஷ்” என்றவளின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

“நீங்க பெரிய ஞானிக்கா”

“நானும் அக்ஞானிதான். என்னைப் பெரிய பீடத்தில் ஏற்றி வைக்காதேப்பா. அப்பா போயி அம்மா கையைப் பற்றிக் கொண்ட பொழுது வாழ்க்கை கற்று கொடுத்த பாடம். அன்பைக் கொடு. “அன்பை வாங்கிக் கொள்” என்பது தான் எனது சித்தாந்தம்.

இவர்கள் பேசிக் கொண்டிருந்த சமயம் டாக்டர் வந்தார்.

“என் ரூம்க்குக் கொஞ்சம் வாங்கோ” என்று கூறிவிட்டு முன்னால் செல்ல” மஞ்சு, நீ இங்கேயே இரு” என்று கூறிவிட்டு மந்தாவும்,

மகேஷும் டாக்டர் பின்னால் ஓடினார்கள்.

அறுவை சிகிச்சை நடந்து ஐ.ஸி.யூவில் இருக்கும் கணவன் ஒருவனின் மனைவியுடன் மஞ்சு பேசிக் கொண்டிருந்தாள். பொழுது போக வேண்டுமே?

டாக்டரின் அறையில் மந்தாகினியும் மகேஷும் டாக்டரின் எதிரே உட்கார, டாக்டர் தன் இருக்கையில் அமர்ந்துக் கொண்டார்.

“டாக்டர் அம்மாவின் நிலைமை இப்ப எப்படி இருக்குது?”

எத்தனை எத்தனையோ கேஸ்களை இது போல் பார்த்த டாக்டர் தன் அதிர்ச்சியை அடக்கிக் கொண்டார்.

“ப்ரஷர் இறங்கவே இல்லை. அதனால தான் தீவிரமா சிகிச்சை அளிச்சிட்டு இருக்கோம்.”

“ஒண்ணும் சீரியஸா இல்லேயே?”

டாக்டர் கேள்வியை கவனிக்காத மாதிரி “நல்லாத் தூங்கினா சரியாப் போகும்னு மயக்க நிலையிலேயே வச்சிருக்கோம். இன்னொரு விஷயம்... ஈ.ஸி.ஜி.யில கொஞ்சம் வித்தியாசம் தெரியுது. கொஞ்சம் ப்ரஷர் நார்மலா வந்தப்புறம் ஆஞ்சியோ பண்ணிப் பார்த்துட்டு தீர்மானிக்கலாம் என்றார்.

“ஒண்ணும் சீரியஸ் இல்லையே?” என்று மீண்டும் கேட்டான்.

“மருத்துவம் எத்தனையோ வகையில முன்னேறி இருக்கு மிஸ்டர் மகேஷ். சின்ன வியாதிலேர்ந்து பெரிய வியாதி வரை நோயாளியைக் காப்பாற்றத்தான் நாங்க இருக்கோம் தைரியமா இருங்க மிஸ்டர் மகேஷ். எங்களால அத்தனை முயற்சிகளையும் நாங்க செய்வோம்.

“டாக்டர், எங்களுக்கே ராத்திரிதான் தெரிஞ்சுது. அம்மாவுக்கு ரொம்ப வேண்டிய ஒருவர் இறந்துட்டார். அந்தச் செய்திதான் அம்மாவைத் தாக்கி இருக்குது” என்றான் மகேஷ்.

“எங்க ஊகமும் இதுதான். அம்மா மயக்கத்துலதான் இருக்காங்க. மயக்கம் தெளிய இன்னும் மூணு, நாலு மணி நேரமாவது ஆகும். நீங்க வீட்டுக்குப் போய் குளிச்சு ரிலாக்ஸ் பண்ணிட்டு வரலாம்.” என்றார் டாக்டர் வித்யாதரன்.

மகேஷ் இருவரிடமும் சொல்லிக் கொண்டு தன் வீட்டிற்குப் போனான்.

“வரப்ப அம்மாவோட பாஸ் புக்கை எல்லாம் கொண்டுவா மகேஷ். நாங்களும் வீட்டுக்குப் போய் குளிச்சு ஒரு தயிர் சாதம் செய்து எடுத்துட்டு வரோம்.” என்றாள் மந்தாகினி.

இருவரும் தங்கள் வீட்டிற்கு வர, மகேஷ் தன் வீட்டிற்கு வந்தான். அம்மா இல்லாத வீடு அடிக்க வந்தது. வெளியே எங்கேயாவது போயிருந்தால் அம்மா இன்னும் சற்று நேரத்தில் வந்து விடுவாள் என்ற எதிர்பார்ப்பு இருக்கும். இப்பொழுதோ சும்மா நினைவற்ற நிலையில் கிடைக்கிறாள். டாக்டர் தயங்கித் தயங்கிப் பேசுவதைப் பார்த்தால் பயமாக இருக்கிறது.

அழுகையாக வந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டான். அம்மாவின் புதுப்புடவைகள் மடிக்காமல் கொடியில் கிடந்தன. அம்மாவின் பீரோவை அவன் இதுவரை திறந்திதல்லை. முதலில் பாஸ் புக்கை எடுத்து வைத்துக் கொள்வோம் என்று பீரோவை திறந்து உள் லாக்கரைத் திறந்தான். ஓர் ஓரமாக பாஸ் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன.

அம்மா எதையும் நேர்த்தியாக செய்பவள். புடவைகள் அழகாக மடிப்புக் கலையாமல் அடுக்கப்பட்டிருந்தன. உள்லாக்கரில் அந்த நகைப் பெட்டி அவன் கண்களைக் கலந்தது.

## 8

தந்த வேலைப்பாடமைந்த அழகான நகைப்பெட்டி பணக்காரத் தனத்தைப் பறைசாற்றின. ஓரங்களில் தங்கக் கம்பிகள் இழையோடின. பெட்டியை எடுத்தான். கனமாக இருந்தது. பெட்டியை எடுத்துக் கொண்டு பீரோவைச் சாத்திவிட்டு கட்டிலில் வந்து அமர்ந்தான்.

ஏகப்பட்ட கேள்விகள் சிந்தனையில் மெல்லப் பெட்டியைத் திறந்தான். மேலாக ஒரு வெல்வெட் பர்ஸ். திறந்தான். வெள்ளிச்சாவிக் கொத்தில் ஒரே ஓர சாவித் தொங்கிக் கொண்டிருந்தது. சின்ன அட்டை ஒன்றில் இது லாக்கர் சாவி என்று எழுதப்பட்டிருந்தது. நகைப்பெட்டியில்ங வைரமும், விதவிதமான கற்கள் பதிக்கப்பட்ட நகைகளும், மற்றும் தங்கத்திலான நகைகளும் கண்களைப் பறித்தன.

அவன் தனக்குள் ஒரு நூறு பலூன் இருக்கும் என்று கணக்கிட்டுக் கொண்டான். சற்று நேரம் நகைகளைப் பார்த்துக் கொண்டு உன் மத்த நிலையில் இருந்தான். சற்று சித்தம் தெளிந்தது. நகைப் பெட்டியை

உள் லாக்கரில் வைத்துப் பத்திரப்படுத்னான். இத்தனை நகைகளும் தன்னுடைய மஞ்சுவிற்குத் தான் என்ற பொழுது நினைப்பே உவப்பாக இருந்தது.

இதில் ஒன்றைத்தான் அம்மா நிச்சயதார்த்தில் மஞ்சுவுக்கு அணிவித்திருக்க வேண்டும் என்று சிந்தனை வயப்பட்டவனை கைபேசி உலுப்பியது. மந்தாதான் அவனை அழைத்தாள்.

“என்னாச்சு?”

“வீட்டிற்குள் போனதும் அம்மா நினைப்பு வந்திருக்கும அம்மாவுக்கு ஒண்ணும் ஆகாது. மனத்தை தெளிவாக்கிக் கொண்டு புறப்பட்டு வா. பாஸ் புத்தகத்தை எடுத்துவா” என்று நினைவுபடுத்தினான்.

பாஸ் புத்தகத்தை எடுத்துக் கைப்பை ஒன்றில் வைத்துக் கொண்டான் தன்னுடைய பாஸ் புத்தகம், செக் புத்தகம் என்று எடுத்து வைத்துக் கொண்டான். தன்னுடைய வங்கிக் கணக்கில் எத்தனை பணம் இருக்கிறது. என்று பார்த்தான். அம்மா அவன் பணத்தைக் குடும்பச் செலவுக்கு எடுக்கவே இல்லை என்று புரிந்தது. நினைக்கும் பொழுதே சொல்லொண்ணாத் துயரம் புகை மூட்டமாக நெஞ்சில் மூண்டது.

அவன் கதவைப் பூட்டிக் கொண்டு புறப்பட அக்கம் பக்கத்தினர் விசாரிக்க மகேஷைச் சூழ்ந்தனர். பிறகு கிளம்பினான். பாலாம்மா தன்னுடைய நல்ல குணத்தால் அருகில் உள்ளவர்களிடம் தாயாய், பிள்ளையாய் பழகி இருந்தாள். அவசரத்திற்கு அவர்களுக்கு உதவி செய்வாள்.

மகேஷ் வந்த பொழுது பெண்கள் இருவரும் வந்து விட்டிருந்தனர். காலையில் இன்று சேவை நிலையத்திற்கு வர இயலாது என்பதை நிர்வாகி அன்னம்மாவிற்கும், நண்பர் ஹரிநாத்திற்கும் கைபேசி மூலம் சொல்லி இருந்தாள் மந்தாகினி.

அலுவலகத்தில் பர்மிஷன் போட்டுவிட்டு ஹரிநாத் வந்துவிட்டார். மகேஷ் வந்த சமயம் ஹரிநாத் உடன் இருந்தார். அதனால் நகைகள் பற்றிச் சொல்லாமலும், பாஸ்புக்கைக் காட்டாமலும் நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் ஹரிநாத் அறிமுகமானபடியால் அவருடன் பேசிக் கொண்டிருந்தனர்.

ஹரிநாத்திற்கு ஏற்கனவே தெரிந்த மருத்துவமனை என்பதால் வந்ததுமே டாக்டரைப் பார்த்துவிட்டு வந்திருந்தார் ஹரிநாத். டாக்டர் சொன்ன விஷயம் ஹரிநாத்தையே பாதித்திருந்தது.

“மிஸ்டர் ஹரி, பேஷண்டின் நிலை ரொம்ப கிரிட்டிகல்தான் மகேஷ் காலேஜை முடிச்சுட்டு இப்பத்தான் வேலைக்குப் போயிருக்கார். என்னைப் பொறுத்தவரை அவர் சின்னப் பையன்தான். இந்தம்மா உடம்பை கவனிச்சுக்கல்ல. ஏதேஏதோ விஷயங்கள் இவரை அதிர்ச்சி தரும் வகையில் தாக்கி இருக்கு. மயக்கம் தெளியவே இல்லை. சும்மா கொஞ்ச நேரம் கண்ணை விழிச்சுப் பார்த்துட்டு மயங்கிட்டாங்க.

கம்ப்ளீட்டா ஸ்கேன் பண்ணி இருக்கோம். ஷுகர், ப்ரஷர் ரெண்டும் எகிறுது. இப்போதைக்கு மதில் மேல் பூனை. நெஞ்சுவலி வேற வந்திருக்கு. ஹார்ட் ஆப்ரேஷன் பண்ண வேண்டி இருந்தாலும் இருக்கலாம். உடம்பு தாங்குமானு பார்க்கணும். கடவுளை பிரார்த்திப்போம்“ என்றார் டாக்டர்.

இந்தப் பேச்சு ஹரிநாத்தையே அதிர்ச்சி அடையச் செய்து விட்டிருந்தது.

“இந்த முழுவிபரமும் மகேஷ்க்குத் தெரியுமா டாக்டர்?”

“சொல்லலே. நேத்துதான் நிச்சய வைபவம் நடந்திருக்கு. அது ஓவர் மகிழ்ச்சி இந்த அம்மாவுக்கு. ராத்திரியே யாரோ இறந்துவிட்ட செய்தியும் கிடைச்சிருக்கு. இதயம் ரொம்பவே பலவீனமா இருக்கு. தாங்க முடியல்ல. அந்தப் பையன் சின்னப் பையன். கூட வந்திருக்க மந்தாகினியோட பலத்துல அந்தப் பையன் தைரியமா இருக்கான்னு புரிஞ்சுக்கிட்டேன். எங்களாலே எந்த அளவுக்கு ட்ரீட்மெண்ட் தரணுமோ தரோம். பிழைக்க வைக்கறதுதானே கடமை” என்ற டாக்டருக்கு நன்றி சொல்லிவிட்டு வெளியே வந்தார் ஹரிநாத்.

இந்த விஷயத்தை மந்தாகினியிடமும், மஞ்சுவிடமும் சொன்னதும் ஆடிப் போனார்கள்.

“ஐயோ, எல்லாமே அம்மாதான்னு இருக்கிற மகேஷ் தாங்குவானா இதை” என்று சொல்லி ஆடிப் போனார்கள்.

“யாரோ ஒருத்தர் இறந்துட்டா சேதி வந்து - அது இந்தம்மாவைத் தாக்கி இருக்கிறதா டாக்டர் சொன்னார் மந்தா”.

“உண்மைதான் என்று சொன்ன மந்தாகினி ஜமீன்தார் விஷயத்தை ஹரியிடம் சொன்னாள். உறவுனு தெரியல்ல ஹரி. அதை நாராயண ஸ்வாமி சொல்லலே. ஜமீன்தார் எழுதியுள்ள கடிதத்திலும் என்ன உறவுனு தெளிவா சொல்லப்படல்லே. மகேஷ் ஜமீன்தார் பையன்னு தான் யூகிக்கிறேன்” என்ற பொழுது மகேஷ் வந்துவிட்டான்.

மகேஷ் கொஞ்சம் படபடப்பாகவே இருந்தான். தனக்கு முன்னதாகவே வந்துவிட்டிருந்தான் இவர்களைப் பார்த்ததும் ஆறுதலாக இருந்தது. இவனைப் பார்த்ததும் இரண்டடி முன்னால் வந்த ஹரிநாத் தோளைத் தட்டினார்.

"ஒண்ணும் பயமில்ல மகேஷ். டாக்டர்கிட்டயும் பேசிட்டேன். மந்தா போன் பண்ணினா. ஆபிஸ்ல பெர்மிஷன் போட்டுட்டு வந்துட்டேன். திரும்ப சாயந்திரமா வரேன். டாக்டர் ஒண்ணும் பயமில்ல. அதிர்ச்சி மயக்கம்னு சொன்னார். அதிக சந்தோஷம்... தனியா நின்னு சாதிச்ச பெருமை... கல்யாணம் நல்லபடியா நடக்கணுமேங்கற எதிர்பார்ப்பு பயம்.. எல்லாமச் சோந்து அவங்களைத் தாக்கி இருக்கு. கவலைப்படாதீங்க மகேஷ்" என்று ஹரி மகேசை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்.

ப்ளாஸ்க் நிறையக் கொண்டு வந்திருந்த காப்பியை மந்தா ஊற்றி அவர்களிடம் நீட்டினாள்.

"இவங்க ரெண்டு பேரும் இல்லேனா நான் என்ன ஆகி இருப்பேன்னு சொல்ல முடியாது ஹரி சார்" என்று கண்களில் நன்றியும், பயமும் கலந்து கண்ணீர் துளிர்க்கப் பேசினான் மகேஷ். "ஒண்ணும் ஆகாது" என்று தோளைத் தட்டிக் கொடுத்தார்.

"நீங்க வந்தது தைர்யமா இருக்குது ஹரி சார்" என்று அவர் கையைப் பற்றித் தன் கைகளுக்குள் அடக்கிக் கொண்டான் மகேஷ்.

"என்னை உங்க அண்ணனா நினைச்சுக்குங்க மகேஷ்."

"அப்படியோ... என்னை உங்க தம்பியா நினைச்சுக்குங்க. உரிமையா ஒருமையிலேயே அழையுங்க. மந்தாகினி அக்கா மஞ்சுவுக்கு மட்டும் அக்கா இல்ல. எனக்கும்தான். அதே மாதிரி நீங்க எனக்கு அண்ணா. இனிமே ஹரி அண்ணானு கூப்பிடுவேன்" என்றவளிடம் "இனிமே நீங்க அழக்கூடாது மகேஷ். கீதை வாக்கியப்படி "எது நடக்கணுமோ அது நன்றாகவே நடக்கும்"னு நினைச்சுக்கோ. நேத்து பகல்ல எத்தனை சந்தோஷமா இருந்தோம்." எது நடந்ததோ அது நன்னாவே நடந்தது" இல்லையா? என்று விடைபெற்றார் ஹரிநாத்.

லிப்டில் இறங்கி காருக்கு வந்த ஹரிக்கு மகேஷின் பால் வடியும் முகமே நினைவில் வந்து நின்றது. அவர் மகேஷிற்கு என்னவோ சமாதானம் சொல்லி விட்டாரே தவிர அவர் அமைதியடைவில்லை. டாக்டர் சொன்ன பாலாம்மாவின் உடல்நிலை ஒருபுறம் இறந்துபோன ஜமீன்தார் பற்றி மந்தா சொன்ன விஷயம் இன்னொரு புறம் என்று

அவரைக் குழப்பியது.

தனக்கென்ன என்று ஒதுங்கி அவரால் இருக்க முடிவதில்லை. மனிதநேயம் மனத்தைக் குடைந்தது. இதுவரை தாய் என்ற ஒருத்தி மட்டுமே இருந்து வளர்ந்த மகேஷின் வாழ்வில் ஜமீன்தார் என்ற ஒருத்தர் புகுந்து உறவு தெரியாமல் குழப்புவது மூன்றாம் மனிதரான அவரையும் பாதிப்படைய வைத்தது. தன்னால் எந்த வகையில் இவர்களுக்கு ஆதரவாக இருக்க முடியும் என்ற நிதியில் சிந்திக்கத் தொடங்கினாள்.

மருத்துவமனையில் மகேஷ் விடை பெற்றுப் போன ஹரிநாத்தைப் பற்றியே சிந்திக்கலானான்.

“என்ன மகேஷ் யோசிக்கறே?”

“இந்த ஹரிநாத் அண்ணா ரொம்ப நல்ல மனுஷர் இல்லையா அக்கா”

“ஆமாம். ஊதியம் வாங்காத உண்மையான எங்க சேவை நிலையத்தின் உழைப்பாளி இவர். தன் கை காசை செலவு பண்றவர். மனைவியை இழந்து தனிமரமா நின்னு தன் மகள் பவானியை வளர்க்கிறார் என்று விவரித்தாள் மந்தா.

“அவரவர் வாழ்க்கையில் ஆயிரமாயிரம் சம்பவங்கள் இல்லையா அக்கா?

“அதுலேர்ந்து மீண்டு எழனும் மகேஷ். அதுதான் மனிதனுடைய வெற்றி” என்றாள் மந்தாகினி.

“அந்த வகையில் நீங்க வெற்றி பெற வச்சுடுவே போல இருக்கே”

“விட்டா எனக்குப் பாராட்டு விழாலே வச்சுடுவே போல இருக்கே”

“அதுல ஒண்ணும் தப்பே இல்லையே?” என்ற பொழுது மருத்துவ ஐ.ஸி.யூ பணியாளர் ஒருவர் வந்து பாலாம்மா கண் விழித்துவிட்ட செய்தியைச் சொல்ல மூவரும் ஓடினார்கள்.

## 9

மெதுவாக வீசும் காற்றிற்கு சின்ன பூ ஒன்று தலையசைப்பது போல பாலாம்மாவின் கண்கள் திறந்து திறந்து மூடின. முகம் வாடி இருந்தது.

“அம்மா, அம்மா” என்று கைகளைப் பற்றி மகேஷின் மனம் கரைந்து உருகியது.

பின்னாலேயே டாக்டர் வித்யாதரன் வந்து விட்டவர், மகேஷை நகர்த்திக் கொண்டு சென்றார்.

“படிச்சவர் நீங்க.. அவங்க இன்னும அதிர்ச்சியிலேர்ந்து மீளலே.. இப்படி அழுதா என்ன ஆறது? புரிஞ்சுக்குங்க. சிரிச்சு சமாளியுங்க” என்றார்.

கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டான் மகேஷ். அம்மாவின் அருகில் போன பொழுது அம்மா மீண்டும் மயக்கச் சுரங்கத்திற்குள் இறங்கிக் கொண்டிருந்தாள்.

“அம்மா ஏதாவது பேசினாங்களா அக்கா”

“மலங்க மலங்க விழிச்சாங்க. கண்களைச் சுழற்றினாங்க. மஞ்சு அம்மா அம்மானு கூப்பிட்டா. பார்வை அவ மேல நின்னுச்சு. அப்படியே கண்களை மூடிக் கொண்டாங்க” என்றாள் மந்தா.

“மஞ்சுவைப் பாத்தாங்கல்ல... அதுபோதும்“ என்றான் மகேஷ்.

இந்த நிலையிலேயே மேலும் இரண்டு தினங்கள் ஓடின.

“டாக்டர், எந்த முன்னேற்றமும் இல்லையே?” என்று கேட்டான்.

“ஸ்கேன் எல்லாம் எடுத்துப் பார்த்தோம் சில பேஷண்டுகள் நிலை டாக்டர்களின் திறமையை சோதிக்கற அளவுக்கு இருக்கும். கொஞ்சம் பொறுத்துத்தான் பார்க்கணும்“ என்றார்.

அவர்கள் நிலையும் டாக்டருக்கும் புரிய “மூணு பேரும் இருக்கணும்னு இல்ல. யாராவது ஒருத்தர் இருந்தா போதும்“ என்றார்.

பெண்கள் இருவரும் வீட்டுக்குப் போவது என்று முடிவு செய்தார்கள். மகேஷ் பாஸ்புக் கணக்கை மந்தாகினியிடம் காட்டினான். நாராயண ஸ்வாமி போட்ட பணம் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. நகைகள் பற்றிச் சொன்னதும் பெண்கள் அசந்து போனார்கள்.

“அத்தனை நகைகளா?” வாயைப் பிளந்தாள் மஞ்சு.

“நான் எடுத்து ஒவ்வொண்ணாப் பார்க்கல்ல. மேலாகப் பார்த்துட்டு வச்சுட்டேன். எல்லாம் உனக்குத்தான் மஞ்சு. அத்தனையும் ஜமீன்தார் கொடுத்த நகைகனு புரியுது. நான் என்ன உறவுனு புரியல்ல” என்று தடுமாறிய பொழுது மந்தாகினி சொன்னாள்.

“இப்படி நீ தவிர்க்கறதானா ஆபிஸ் புறப்பட்டு போ. நான் அம்மாவைப் பார்த்துக்கறேன். இங்கே உட்கார்ந்தா அம்மாவை மட்டும் தான் நினைக்கணும். அவங்க குணமாகி வரணும் புரிஞ்சுதா. என்ன சொல்றே நீ என்று மிரட்டலாக மொழிந்தாள்.

“இல்லக்கா, நான் இங்கேயே இருக்கேன்” என்றான் மகேஷ்.

நல்ல சமயத்துல ஹரிநாத் வந்தார்.

“நிறைய லீவ் இருக்குது. அதான் வந்துட்டேன்” என்றார்.

அவரிடம் மகேஷை ஒப்படைத்து விட்டுப் புறப்பட்டாள் மந்தாகினி மஞ்சுவுடன் இவ்வளவு பணம், நகைகள் என்று இருக்கும் பொழுது பாலாம்மா நன்றாக இயல்பான உணர்வுடன் இருந்தால் எப்படி இருக்கும்? என்ற வேதனையுடன் போனாள் மந்தாகினி.

பத்து நாட்கள்... இரண்டு மூன்று தினங்கள் பகலில் அவசர வேலை என்று அலுவலகம் போய் வந்தான். சமூக சேவை நிலையத்திலும் மந்தாகினிக்கு சரியான வேலை. மஞ்சு மாலையில் போய் மகேஷுடன் இருந்து விட்டு இரவு ஏழரை மணி வாக்கில் வருவாள்.

பாலாம்மாவின் உடலில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இது மகேஷிற்கு ஏமாற்றமே. டாக்டர்களிடம் கண்டிப்பாக எதையும் கேட்கவும் முடியவில்லை.

பார்க்க வந்த அலுவலக நண்பர்கள் தலைக்குத் தலை பேசினார்கள். அவரவர்கள் வீட்டு அனுபவங்களை மொழிந்தார்கள்.

“எப்படி இப்படி கோமாவுக்குள்ள போனாங்க?” என்று கேட்டார்கள்.

“நடிகை சாவித்ரி வருஷம் கணக்குல இப்படி கோமாவுக்குள்ளதான் கிடந்தாங்க” என்று பேசினார்கள்.

“இதை விட பெஸ்ட் ஹாஸ்பிடல்ல சேர்க்கலாமே? மருத்துவமனைச் செலவை நம்ம கம்பெனி கொடுத்திடுவாங்க மகேஷ். என்ன தான் சொல்றாஙக டாக்டர்கள்” என்றெல்லாம் டாக்டர்கள் துருவினார்கள்.

குழம்பிப் போனான் மகேஷ்.

அம்மா மீண்டும் பிழைப்பாளா? என்னுடைய கல்யாண ஏற்பாடெல்லாம் கவனிப்பாளா? வீட்டில் வளைய வருவாளா? என்றெல்லாம் கவலைப்பட்டு தனியாக உட்கார்ந்து அழுதான் மகேஷ்.

அன்று மதியம் மூணு மணியைப் போல் பாலாம்மாவிற்கு கொஞ்சம் நல்ல நினைவு வந்தது. “மகேஷ்... மகேஷ்...” என்று அலறினாள்.

உடனே ஐ.ஸி.யூ. பணியாளர் ஓடி வந்து மகேஷை அழைக்க உள்ளே போனான் மகேஷ். வார்த்தைகள் குழறின. “அம்மா... அம்மா”,, என்று கூறினான்.

“அவங்க என்னவோ சொல்றாங்க. கவனியுங்க. சம்திங் மிராகிள். காதை வாய்கிட்ட வச்சுக்குங்க. டாக்டரைக் கூட்டிட்டு வரேன்” என்று பணியாளர் ஓடினார்.

குழறலாக “மகேஷ்.. மகேஷ்...” என்ற பாலாம்மா” நகப் பெட்டி.. நகப்பெட்டி... அது ஒன் அப்பா கொடுத்தது.” என்று சொல்லிக் கொண்டு வரும்பொழுதே வார்த்தைகள் கோண .... கண்கள் மூடிக் கொண்டு நினைவை இழந்தாள்.

டாக்டர் வித்யாதரன் வந்த பொழுது பாலாம்மா பூரண நினைவை இழந்திருந்தாள். அவன் பாலாம்மா பேசியதை டாக்டரிடம் சொன்னான்.

“அவங்க மனசுல குடும்ப ரகசியங்கள் போராட்டம் நடத்துனது தெரியுது மிஸ்டர் மகேஷ். நல்ல நினைவு வரதுக்கு சான்ஸ் இருக்கும் போல இருக்குது. நம்பிக்கையோட இருப்போம்“ என்றார்.

பேசும் பொழுதே அம்மாவின் முகத்தில் தெளிந்த பிரகாசம் அவனுக்கும் நம்பிக்கையைத் தந்தது.

“அம்மாவை நல்லா பார்த்துக்குங்க.. மெல்ல நினைவு வந்துடும்னு தோணுது. நினைவு வந்துச்சுன்னா வந்து சொல்லுங்க” என்றான் மகேஷ்.

தன் நாற்காலியில் வந்தமர்ந்த சமயம், மஞ்சு வந்து விட்டாள்.

“என்ன மஞ்சு, இன்னிக்கு சீக்கிரம் வந்துட்டே?”

“தெரியல்ல மகேஷ்... என்னமோ இன்னிக்கு மதியத்திலிருந்தே அம்மாவோ முகம் மனசுல தோணிச்சே இருந்தது. அதான் கொஞ்சம் பர்மிஷன் போட்டுட்டு வந்துட்டேன்.”

அவன் சற்று முன் பாலாம்மா கொஞ்சம் நினைவு வரப் பேசினதைப் பற்றிச் சொன்னான். பணியாளரிடம் சொல்லிவிட்டு இருவரும் கேண்டீன் வந்தார்கள்.

தனியா உட்கார்ந்துட்டு இருக்க முடியல்ல மஞ்சு. நீ எப்ப வருவேணு

காத்துக்கிட்டு கெடக்கேன். எத்தனையோ பேசணும்னு மனசு துடிக்குது. அம்மாவோட நினைவு அதை எல்லாம் மூடி வச்சுடுது. அம்மா வாழ்விலேயும், என்னோட வாழ்விலேயயும் ஏதோ பெரிய இரகசியம் இருக்குது. எனக்கும் ஜமீன்தார் ஷண்முக சுந்தரத்திற்கும் உறவு இருக்குன்னா அப்ப இந்த பாலாம்மா யார்! எனக்கு இவங்க யார்?”

“தோளைத் தட்டினாள். எந்த விதத்லேயாவது கடவுள் உதவுவார் மகேஷ். நீ மட்டும் மனசை தளரவிடாதே. இப்ப நமக்கு அம்மாதான் முக்கியம். உன்னை அப்பானு ஒருத்தரோட நிழல் படியாம வளர்ந்திருக்காங்க. அதுக்கு ஒரு காரணம் இருக்கணும். அதைக் கண்டுபிடிக்கலாம். அப்பா மகிழ மலை ஜமீன்தார்னு தெரியுது. நிலைமை சரியானப்புரம் அந்த மகிழ மலைக்குப் போயிரலாம் மகேஷ். அங்கே ஏதாவது தடயம் நீ யார்ங்குறத்துக்கு கிடைக்கும் இப்ப தெளிவா இரு.”

கேண்டீனில் சூடான பஜ்ஜி சுவையா இருந்தது.” ஏய், ஏழெட்டு நாளா அக்கா தான் பேசினாங்க. நீ பேசா மடந்தையா உட்கார்ந்துகிட்டு இருந்தே. இப்ப இத்தனை அழகா பேசறே?” என்றான்.

“மதியம் சரியா சாப்பிடல்ல. இன்னொரு பிளேட் பஜ்ஜிக்கு ஆர்டர் பண்ணு. நீ வருத்தப்பட்ட பொழுதெல்லாம் என் தோள்ல சாத்திட்டு “அழாதேடா”னு முதுகு தட்டி சமாதானப்படுத்தணும்னு தோணும். அக்கா எதிரே எப்படி முடியும்“.

பஜ்ஜிக்கு ஆர்டர் பண்ணின மகேஷ் “நம்ம கல்யாணம் நடக்குமில்ல மஞ்சு” என்று குரல் கமறக் கேட்டான்.

“அதுல என்ன சந்தேகம்?” என்று கேட்டாள் மஞ்சு.

அவர்கள் சற்று நேரம் மருத்துவமனை வளாகத்தில் நடந்துவிட்டு மீண்டும் ஐ.ஸி.யூ. பிரிவுக்கே வந்தார்கள். அம்மாவிடம் ஏதாவது மாற்றம் தெரிகிறதா என்று இருவரும் பார்த்துவிட்டு பணியாளரிடமும் கேட்டார்கள். எதுவுமில்லை என்பது தெரிந்துக் கொண்டு வெளியே வந்தார்கள்.

மீண்டும் நாற்காலியில் அமர்ந்து பேசத் தொடங்கினார்கள்.

“மஞ்சு, நான் என் வாழ்க்கையில் முக்கி முக்கிச் சேத்தாலும் சேக்க முடியுமா என்ற அளவுக்கு வைரங்களும், நவரத்தினங்களும் இழைத்த நகைகள் மஞ்சு. அதைப் பார்த்ததும் என்ன தோணிச்சு தெரியுமா! உனக்குப் பட்டுப் புடவை கட்டிப் போட்டுப் பார்க்கணும்னு

தோணிச்சு” என்று அவன் கூறியதைக் கேட்டு போதை ஏற உட்கார்ந்திருந்தாள்.

அவனுடைய அன்பைச் சுமந்தபடி மஞ்சு வீட்டிற்கு வரும் பொழுது மணி எட்டரை. அவள் மருத்துவமனைக்குப் போய்விட்டு வருவாள் என்பது மூத்தவளுக்கு தெரியும். சாப்பிடத் தட்டைப் போட்டவள். “அம்மாவுக்கு உடம்பு எப்படியிருக்கு மஞ்சு” என்று விசாரிக்கிறாள்.

மதியம் நடந்த நிகழ்ச்சியை விவரித்து விட்டு கை கால்கள், கழுவிக் கொண்டு சுவாமி பூஜையறையில் போய் நின்று கும்பிட்டாள் மஞ்சு.

“குணமாக சான்ஸ் இருக்குனு சொல்லு” என்று மந்தா சொன்னாள்.

மஞ்சு பெரியவரின் படத்தையே பார்த்தாள். அவர் கண்கள் மூடி இருப்பது போல் பட்டது மஞ்சுவுக்கு. அவள் மனதில் திக்கென்று ஒரு அதிர்ச்சி பரவியது.

## 10

“மஞ்சுக் கண்ணா, சாப்பிட வாடா” என்றழைத்த மந்தாகினி” மகேஷ். கேண்டீன்ல போய் என்னத்தச் சாப்பிட்டானோ!” என்று மூணு முறைத்தாள்.

மஞ்சு விபூதியைத் தொட்டு நெற்றியில் வைத்துக் கொண்டாள். கண்கள் மீண்டும் பெரியவரின் படத்தையே பார்த்தது. இப்பொழுது அவர் முகம் இடது புறத் தோளில் இடித்து ஒட்டிக் கொண்டிருந்தது.

“கடவுளே! இதென்ன சோதனை? இது நாள் வரை இல்லாத மாறுதல் அல்லவா!

“மஞ்சு. வாடா,” என்று மந்தா குரல் கொடுக்கப் போய் உணவுத் தட்டின் முன் அமர்ந்தாள்.

“விபரமாய்ச் சொல்லு மஞ்சும்மா”.

மஞ்சு விவரமாக பாாலாம்மா கண்களைத் திறந்தது, மகேஷை அழைத்தது, நகப் பெட்டினு ரெண்டு தரம் முனகினது என்று சொன்னாள்.

“மகேஷ் என்னம்மா சொன்னான்?”

“குழம்பிப் போறார் அக்கா ஜமீன்தாரோட பிள்ளை நான்னா

பாலாம்மா யாரு? பாலாம்மா அம்மாவோ இல்லையா? என்னை ஏன் ஜமீனை விட்டு இங்கே கொண்டு வந்து வளர்த்தாங்கனு கேட்கிறார். மொத்தத்துல குழம்பிப் போயிருக்கிறார்" என்றாள் மஞ்சு.

சாப்பிட்டுக் கைக் கழுவும் சமயம் மகேஷ் கைபேசியில் அழைத்தான்.

"மஞ்சு, எடுத்துப் பேசு" என்றாள் கைக்கழுவிக் கொண்டிருந்த மந்தா.

மகேஷின் குரல்தான் பலமாக ஒலித்தது.

"அக்கா, சீக்கிரம் வாங்க அம்மாவுக்கு சீரியஸா இருக்கு" என்று அலறினான்.

தன் அம்மா பிழைத்து வந்தால் எத்தனையோ கேள்விகளுக்கு விடை கிடைக்கும் என்று எண்ணி எதிர்பார்த்த மகனுக்கு பதில் தராமலேயே தன் மேலுலகப் பயணத்தைத் தொடர்ந்தாள் பாலாம்மா. மகேஷை சமாதானப்படுத்துவது கஷ்டம் என்று புரிந்துக் கொண்ட மந்தாகினி ஆட்டோவில் பயணப்படும் பொழுதே ஹரிநாத்தையும் வரச் சொல்லி விட்டாள். பெண்கள் இருவரும் வந்து இறங்கும் பொழுது பாலாம்மா தன் மூச்சை நிறுத்திக் கொண்டிருக்க பெண்களாலேயே தாள முடியவில்லை.

சேவை நிலையத்திலிருந்து அன்னம்மா செய்தி வந்ததுமே உதவி செய்ய ஆட்களுடன் புறப்பட்டு வந்து விட்டார்.

மறுநாள் ஜாம் ஜாமென்று பாலாம்மாவின் இறுதிக் காரியங்கள் நிறைவடைய, மகேஷின் வீட்டில் மந்தா, மஞ்சு, மகேஷ் மூவரும் மட்டுமே தங்கிக் கொண்டிருந்தனர்.

"கடைசி வரை அம்மா எங்கிட்ட எதுவுமே சொல்லாம போயிட்டாங்களே அக்கா. என்னோட பிறப்பின் ரகசியம் எனக்குத் தெரியவே இல்லையே அக்கா" என்று கதறினான் மகேஷ்.

அவனை சமாதானப்படுத்துவது என்பது பெரிய பாடாக இருந்தது. அழுத கண்களோடு அமர்ந்திருந்த பொழுதுதான் மஞ்சுவுக்கு அந்த யோசனை தோன்றியது.

"அக்கா, இந்த நாராயண ஸ்வாமி வந்து பணம் கொடுத்து ஜமீன்தாரின் இறுதி கடிதத்தையும் கொடுக்காவிட்டால் என்ன ஆகும்? அம்மாவுடைய கணக்கில் பணத்தைப் போட்ட இந்த ஷண்முக சுந்தரம் யாருனு மண்டையப் போட்டு உடைச்சிக்கிட்டு இருப்போம்."

“ரொம்ப வாஸ்தவம் மஞ்சு” என்றாள் மந்தாகினி.

“ஒரு வகையில் மகேஷ் ஜமீன்தாரின் மகன்னு நாராயணஸ்வாமி வந்ததால புரிஞ்சதுடன், இத்தனை நகைகளை ஜமீன்தார்தான் கொடுத்திருக்கார்னும் புரிஞ்சிருக்கு” என்று மஞ்சு பேசப் பேச இருட்டு உள்ளே சின்ன வெளிச்சம் பரவுவது போன்ற விளக்கம் தெளிவாகியது.

மகேஷ் குறுக்கிட்டான்.

“நீ சொல்றது சரிதான் மஞ்சு. அம்மாவுக்கும் ஜமீன்தாருக்கும் என்ன உறவுனு தெரியல்லயே?”

“உங்களைப் பெத்தவங்க பாலாம்மானுதான் தெரியுது மகேஷ்”

“சரி... அப்படியே இருக்கட்டும் மஞ்சு. ஜமீன்தார் அம்மாவை ஊரறிய கல்யாணம் கட்டிக்கிட்டாரா? இல்ல அம்மாவுக்கு அந்தஸ்து இல்லேனுட்டு ரகசியமா கல்யாணம் கட்டிக்கிட்டு இங்கே கொண்டு வச்சிட்டாரானு எனக்குள் ஓர் உறுத்தல் இருக்குது மஞ்சு. இப்பப் போட்டு உடைச்சிட்டேன்” என்று தழுதழுத்தான்.

சற்று தள்ளி உட்கார்ந்திருந்த மஞ்சு நகர்ந்து போய் மகேஷின் கரத்தைப் பற்றி கொண்டாள்.

“என்ன மகேஷ் இது? உங்கம்மா கதை என்ன சிலப்பதிகாரமா! ஊரறிய. மாதவியோட போய் வாழ்ந்த கதையைப் பற்றிப் பேச... உங்கப்பாவோட கடிதத்தைப் படிச்சேல்ல.. நீ பிறந்ததை நிறையப் பேர்கள் விரும்பல. ஜமீன்தார் - பாலாம்மா உறவு முக்கியமில்ல. எது முக்கியம்? உன்னோட பிறப்புதான்னு எனக்குத் தோணுது. ஜமீன்தாரின் எதிரிகளுக்கு இன்னும் நீ இருக்கேனு தெரிஞ்சா உன் உயிருக்கே ஆபத்து வரும்னு எனக்குத் தோணுது”. என்றாள் மஞ்சு.

“நல்லா புரிஞ்சு பேசறே மஞ்சு. நீ நல்லா கதை எழுதுவே. அந்தத் திறமை உனக்கு இருக்குது. மகேஷ், நீ என்னப்பா சொல்றே?”

“அப்பா இன்னொன்னையும் எழுதி இருந்தார் மஞ்சு. புரிஞ்சுக்கோ. நான் எதிரிகளையும் உரிய காலத்துல விரட்டணும்னு சொல்லி இருக்கார். மகிழ மலை என்னோட சொத்து. அம்மாவை தியாகம் பண்ணிவைணும் குறிப்பிட்டிருக்கார். அம்மாதான் இவர்தான் உன் அப்பா என்று உறவைக் காட்டுறவர். இவர் காட்டாமலேயே போயிட்டாளே மஞ்சு” என்று கண்ணீர் வடித்தான் மகேஷ்.

“சரி.... இப்ப என்ன திட்டம் வச்சிருக்கே அதைச் சொல்லு மகேஷ்.”

என்று கேட்டாள் மந்தா.

"எனக்கு என்னோட பிறப்பு, என்னோட உறவுகள் யார் யார்? ஏன் என்னை பாலாம்மா இங்கே தூக்கிட்டு வந்தாங்கனு பூராவிவரமும் தெரியணும். அப்பா ஏன் பாலாம்மாவை தியாகினு எழுதனும்?"

அவனுடைய உள்ளத்தில் முட்களாகக் குத்திக் கொண்டிருக்கும் சந்தேக உணர்வுகளைப் புரிந்துக் கொண்டாள் மந்தா. சேவை நிலையத்தில் இப்படி எத்தனை பேர்களின் துயரக் கதைகளைக் கேட்டுக் கேட்டு உருகி இருப்பாள்! ஆனால் இந்த கள்ளமற்ற இளைஞனின் உள்ளத்தை உடையாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அவளுடையதல்லவா? அதில் அவள் தங்கை மஞ்சுவின் வாழ்வு அடங்கி இருக்கிறதே.

"அதற்கு வழி என்னனு தெரியணும் மகேஷ்" என்றாள் மஞ்சு.

"அஸ்திவாரம் இல்லாம கட்டிடம் எழுப்ப முடியாது. அதுக்கு அஸ்திவாரமா இருப்பவர், எல்லா ரகசியங்களும் தெரிஞ்சவர் நாராயண ஸ்வாமிதான்.".

"அவர் கனடாவுக்குப் போயிருந்தால்?" என்று சந்தேகத்தைக் கிளப்பினான் மஞ்சு.

"போகாமல் இருந்தால்?" என்று எதிர்கேள்வி போட்டான் மகேஷ்.

"அது நமக்கு யோகம்" என்ற மந்தாகினி "நாராயண ஸ்வாமிக்கு போன் போடவா? அம்மா போன செய்தியைச் சொல்லிடற மாதிரியும் ஆகும் மேலே விஷயத்தையும் கேட்டுரலாம்" என்றாள்.

நல்ல வேளை தொடர்பில் கிடைத்தார் நாராயண ஸ்வாமி. எடுத்த எடுப்பிலேயே" அம்மாடி, மந்தாகினியா பேசறே?" என்று கேட்டார்.

"ஆமாய்யா, நான் தான் பேசறேன். கனடா போயிட்டீங்களோனு நினைச்சேன்.

"இன்னிக்கு ராத்திரி ஒரு மணிக்குத்தான் ஏர்போர்ட் போறேம்மா"

"ஐயா, அதிர்ச்சியான சமாச்சாரம் ஒண்ணு"

"என்னம்மா, பாலாம்மா நல்ல இருக்காங்களா?"

"அம்மா காரியத்தை முடிச்சுட்டு சாப்பிட்டுவிட்டு வந்து உட்கார்ந்திருக்கோம்."

"அப்படியாம்மா. நல்ல மனுஷிம்மா... எனக்குத் தாங்கலே. ஆரம்ப

காலத்துல ஜமீன்தார் கொடுத்த பணத்தை அவங்ககிட்ட மாசாமாசம் கொடுக்க வந்துட்டு இருந்தேன். அக்கம் பக்கம் புரளி பேசச ஆரம்பிச்சாங்க. எனக்கும் அவங்களுக்கும் தொடர்பு இருக்குனு பேச ஆரம்பிச்சதும்" நாராயணசாமி ஐயா, இனிமே பணத்தை வங்கியில போட்டுடுங்கனு சொல்லிட்டாங்க." என்று தழுதழுத்தவரை பிடித்துக் கொண்டாள் மந்தாகினி.

"ஐயா, ஆரம்பகாலம்னா எப்ப ஐயா? மகேஷ் குழந்தையா இருக்கறப்ப தானே?"

"ஆமா தாயி" பாலம்மாவின் மரணம் அவரை திசை திருப்ப வைத்தது. தன்னையுமறியாமல் பேச ஆரம்பித்து விட்டார்.

"பச்சைக் குழந்தையை வச்சுட்டு... பகவானே.... என்ன பாடுபட்டுச்சு பாலாம்மா"

"ஐயா, முன்னுக்குப் பின் முரணா இருக்குது ஐயா.. மகிழ மலைக்கு வந்து பதினைஞ்சு வருஷம்தான் ஆச்சுனிங்க. இப்ப பாலாம்மா கைக் குழந்தையை வச்சுட்டு ரொம்ப கஷ்டப்பட்டாங்கனு சொல்றீங்க. ஐயா, தயவுசெய்து உங்களுக்குத் தெரிஞ்ச உண்மையை சொல்லுங்க ஐயா, மகேஷ் தம்பி அம்மா காரியம் முடிஞ்சதும் மகிழ மலைக்குப் போகணும்னு துடிச்சிட்டு இருக்காரு" என்று மந்தா சொல்லச் சொல்ல பதறிப் போனார் நாராயண ஸ்வாமி.

"ஐயோ வேணாம்மா"...

"அப்ப ஜமீன்தார்க்கும், பாலம்மாவுக்கும் என்ன உறவு? ஏன் அவங்க மகேஷைத் தனியா கொண்டு வந்து வளர்த்தாங்கன்னு உங்களுக்குத் தெரிஞ்ச உண்மையைச் சொல்லிடுங்கய்யா"

"இன்னிக்கு ராத்திரி புறப்படறேம்மா"

"இப்ப மணி மூணாகுது. விலாசத்தைச் சொல்லுங்க. புறப்பட்டு வரோம்."

"சரி வாங்கம்மா" என்ற நாராயணஸ்வாமி விலாசத்தைச் சொல்லக் குறித்துக் கொண்டாள் மந்தா.

சாப்பாடு கொண்டு வந்த மெஸ்காரர்கள் பாத்திரங்களை எடுத்துப் போக வரும் வரையில் காத்திருந்த கொஞ்ச நேரத்தில் என்னனென்ன பேச வேண்டும் என்று மூவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

அவசர அவசரமாகக் கிளம்பி இவர்கள் நாராயண ஸ்வாமியின்

வீட்டிற்கு வரும்பொழுது மணி நான்காகி வீட்டிருந்தது. வேலைக்காரனை விட்டுக் காப்பி வரவழைத்து வைத்திருந்தார் நாராயண ஸ்வாமி.

“வாப்பா, உன்னைப் பார்க்கவே அதாவது எங்கள் ஜமீன்தார் மகனைப் பார்க்கவே கஷ்டமாக இருக்கிறதப்பா” என்று வரவேற்றார் நாராயண ஸ்வாமி.

கண்களில் சோகத்தைத் தேக்கிய மகேஷ் “என்னை ஜமீன்தார் மகன் என்றே முடிவுகட்டிவிட்டீர்களா ஐயா?” என்று கேட்க, அதில் என்ன சந்தேகம்“ என்று கேட்டார் நாராயண ஸ்வாமி.

“அப்படி என்றால் நான் மகிழ மலைக்கும் போய் என் ஜமீனை எனதாக உரிமை எடுத்துக் கொள்ளலாமா” என்று கேட்க நாராயண ஸ்வாமி “மகிழ மலைக்கு நீ போவதா? வேண்டாம் வேண்டாம்“ என்று பதறினார்.

## 11

நாராயண ஸ்வாமியின் பதற்றம் அவர்களை ஆச்சர்யப்பட வைத்தது. சமாளித்த நாராயண ஸ்வாமி” முதல்ல உள்ளே வாங்க. அப்புறம் பேசலாம்“ என்று அழைத்துப் போய் உட்கார வைத்தார்.

முதல்நாள் இரவிலிருந்து தூங்காமல் பாலாம்மாவின் இறுதிக் காரியங்களை முடித்த களைப்பு அவர்கள் முகத்தில் தேங்கிக் கிடந்தது. சூடாக காப்பியை கோப்பைகளில் ஊற்றிக் கொடுத்தார். அது அந்த நேரத்திற்குத் தேவையாக இருந்தது. காப்பியைக் குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட மகேஷ் சோபாவில் சாய்ந்து உட்கார்ந்து நன்றாக ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

நாராயண ஸ்வாமியும் எதிரே வந்து உட்கார்ந்துக் கொண்டார்.

“நேரமாகிக் கொண்டிருக்கிறது. சீக்கிரமாக சொல்லுங்க ஐயா? பாலாம்மா ஜமீன்தாரின் மனைவி தானே! ஏன் ஜமீனை விட்டு வந்து தனியே மகனுடன் வசித்தார்கள்... சொல்லுங்கய்யா” என்று மந்தாகினி கேட்டாள்.

அவர் கண்களிலும் சோகம் தேங்கியது. மெல்லியதாகக் கண்ணீர் திரையிட்டது. அவர் பார்வை தொலைதூர நோக்காக மகிழ மலைக்கு சென்று ஒன்றியது.

பசுமை பாய்ந்த மலை. நடுவே கம்பீரமாக நிற்கும் ஜமீன் பங்களா . ஜமீன் என்ற சொல் அரசால் ஒதுக்கப்பட்டாலும், பெருங்காயம் வைத்த பாண்டமாக மகிழ மலை ஜமீன் மணத்தது. காரணம் ஷண்முக சுந்தரம். குடிமக்களைத் தன் கிராமத்தைச் சேர்ந்தவர்களை கஷ்டப்பட வைக்க மாட்டார்.

பெரிய ஜமீன்தார் இறந்த சமயம் ஷண்முக சுந்தரம் லண்டன் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். தந்தையின் இறுதிச் சடங்கை நடத்த வந்தவர் பார்வையில் தந்தையுடன் செழுமையாக இருந்த பாலா கண்களில் பட்டான். பெரிய ஜமீன்தாரின் இறுதிச் சடங்கை நடத்த ஜமீனில் நுழைந்து பொறுப்பாக செயல்பட்டாள்.

அவள் வாட்ட சாட்டமாக வாலிப வயசு கண்களில் கவிதை எழுதி ஷண்முகத்தை வளைத்துப் போட்டது.

“யாரிவள்?” என்று விசாரித்தார்.

நம்ம மலைப் பண்ணையில் அப்பணும் மகளுமா பஞ்சம் பிழைக்க வந்திருக்காங்க. அந்தப் பொட்டப்புள்ள விவரமான புள்ள. வூட்டு வேலை அனைத்தையும் கவனிச்சுக்குது.

ஆளுமை ரத்தம் உடம்பில் பாய “பொண்ணைக் கண்களால் அளந்தான். பெரிய ஹாலில் யாரும் இல்லாத நேரத்தில் அவள் வெளியே வந்த சமயம் “ஓ... பொண்ணு. இங்கே வா” என்று அழைத்தான்.

அவள் தலை குனிந்தபடி வந்து நின்றாள்.

“என் பெயர் பொண்ணு இல்ல. பாலா” ஷண்முத்தின் கண்கள் அவளையே பார்த்தன. நல்ல உயரம், மிடுக்கான பார்வை. நிற்பதிலும் நிமிர்வு.

“நீ மலைசாதிப் பொண்ணா?”

“எப்படி கண்டுபிடிச்சீங்க?” என்று முகம் பார்த்துக் கேட்டாள்.

“அப்பன் பேரு என்ன?”

“இருளப்பன்”

“எந்தப் பக்கம்...?”

“தென்காசி குற்றால மலைப் பக்கம்...”

“ஏன் இங்க வந்தீங்க?”

“அம்மா இறந்து போச்சு. அப்பனுக்கு இருக்கப் புடிக்கல்ல. நம்ம மலையில வேலைக்கு ஆள் சேர்க்கறாங்கனு கேள்விப்பட்டு வந்துட்டோம்.”

அவரால் தன் பார்வையை அவளை விட்டு மீள முடியல்ல.

“அது என்ன நம்ம மலைனு சொன்னே?” என்று ஷண்முகம் கிண்டல் போட்டார்.

“எங்க உண்ண உணவும், உடுக்க உடையும் கிடைக்குதோ அது நம்ம இடம்தானுங்க. விசுவாசமா உழைக்கணும். பெரிய ஐயாதான் வேலைக்கு எங்களை எடுத்துக்கிட்டாரு. இப்ப நீங்க இங்க பொறுப்பை ஏத்துக்கணும். உங்களுக்கு நாங்க விசுவாசமா, சத்தியமா உழைப்போங்க” என்ற அவளின் மிருதுவான பேச்சு பிடித்தது.

அவளிடம் ஓர் ஈர்ப்பு ஏற்பட்டது. எதை வேண்டுமானாலும் அவன் பாலாவை அழைத்தே கேட்டான். பெரிய ஜமீன்தாரின் காரியங்களுக்கு தாயாதிகள், பங்காளிகள் என்று மாளிகை பூராவும் கூடியிருந்தனர்.

ஷண்முகத்திற்கும் அம்மா இல்லை. அதனால் இனி லண்டன் போகாமல் நிலபுலன்களையே கவனிக்க வேண்டும் ஷண்முகம் என்று உறவுமுறைகள் தீர்மானித்து விட்டார்கள். ஷண்முகத்தின் பார்வையும் பாலாவின் மீது விழ அவரும் மகிழ மலையில் தங்கிக் கொண்டார்.

உறவுமுறைகள் அப்பொழுதே ஷண்முகத்தின் கல்யாணத்தைப் பேசி முடிக்க ஆசைப்பட்டனர். தாயாதிக்காரர்கள் எப்படியாவது மகிழ மலையை பங்கு போட்டு தங்கள் வாரிசுகளுக்கு சேர்க்க வேண்டும் என்று ரகசியத் திட்டம் போட்டனர். நீண்ட காலமாக வேலை பார்க்கும் நாராயண ஸ்வாமிக்கு இதெல்லாம் தெரிய வந்தது.

ஷண்முக சுந்தரத்தைக் காப்பாற்ற முடிவு பண்ணினார்.

“நீங்க கல்யாணம் கட்டிக்கணும்“ என்று ஷண்முகத்தை நச்சரிக்கத் தொடங்கினார். ஒரு நாள் தனிமையில் நிலா முற்றத்தில் இருக்கும் சமயம் நாராயண ஸ்வாமியினடம் தன்னுடைய மனத்தைத் திறந்து காட்டினார் ஷண்முகம்.

“பாலாவைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?” என்று கேட்டார் சின்ன ஜமீன்தார் ஷண்முகம்.

“எதுக்காக கேட்கிறீங்க?”

“தெரிஞ்சுக்கத்தான்.. சொல்லுங்க...”

“மலை ஜாதிப் பெண். உழைப்பாளி. சமையற்கட்டையும், தோட்டத்தையும் நல்லா கவனிக்கிறது. இப்படி ஒரு பெண் கிடைக்கிறது அபூர்வம்“.

மீசையைத் தடவிக் கொண்டார் ஷண்முகம். பாலாவைப் பற்றி நினைக்கும் பொழுதே கண்களில் கனிவு பிறந்தது.

“சின்ன ஜமீன்தார் ஏன் கேட்கறார்னு புரியல்ல” என்றார் நாராயண ஸ்வாமி.

அவர் கைகளைப் பற்றிய ஜமீன்தார் “பாலா ஜமீன்தாரியா வரமுடியுமா நாராயண ஸ்வாமி?” என்று சன்னக் குரலில் கேட்டார்.

“வழியே இல்ல. பெரிய ஜமீன் போயிட்டாரு. ஆனா உங்க பங்காளிங்க இருக்காங்க. பெரியவர் இருக்கறப்பவே ஒரு பொண்ணை உங்களுக்குக் கட்டி வச்சுட்டு ஒரு வாரிசை பார்த்திருந்தார்னா பிரச்சனையே இல்லை. உங்களைச் சுத்தி இருக்கறவங்க பெண்ணைதான் நீங்க கட்டிக்கிடணும். உங்களுக்கு எந்தப் பொண்ணைப் புடிக்கிதோ கட்டிக்கிடலாம். இதுதான் இப்பதான் நிலவரம். பாலாவை மறந்துடுங்க. இன்னொண்ணைச் சொல்லுவேன்.”

“சொல்லுங்க நாராயண “ஸ்வாமி”

“சின்ன ஜமீன்கோவிச்சுக்கக் கூடாது. நாட்டு நிலவரந்தான் சொல்றேன்.”

“கோவிச்சுக்கல்ல சொல்லுங்க”

“ஆசை நாயகியா வச்சுக்கலாம்“ என்ற வார்த்தையே ஜமீன்தாரை இடியெனத் தாக்கியது.

“நாராயண ஸ்வாமி” என்று முழங்கினார்.

“கோவம் வேண்டாம். நடப்பதைத் தானே சொன்னேன்.

கடைசியில் நாராயண ஸ்வாமி சொன்னபடி தான் நடந்தது. பாலாவை மறக்க முயன்றார். மனத்தில் அவளை நினைத்துக் கொண்டே ஒன்றுவிட்ட மாமன்மகள் சங்கரி நாச்சியை மணந்துக் கொண்டார். இதிலும் கொஞ்சம் பகை ஏற்பட்டது. இரண்டு மாமன்கள். இருவருக்குமே மகள்கள் இருக்கிறார்கள். இன்னொரு மாமனுக்கு மனவேற்றுமை ஏற்பட்டது.

அந்த மாமன் பொல்லதவர். செய்வினை முதலியவற்றில் வைப்பதில் தேர்ந்தவர். இருவரின் மகள்களில் சங்கரி நாச்சி கொஞ்சம் நிதானமும, பொறுமையும் உடையவள். ஜமீன்தார் ஷண்முக சுந்தரத்தின் சாத்வீக குணத்திற்கு ஏற்றவள். அது இரண்டாவது மாமன் நாச்சியப்பனை வெகுளச் செய்தது.

“என்ன மருமகப்புள்ளே... என் பொண்ணு சாந்த லட்சுமிக்கு என்ன குறையை கண்டுபுட்டீங்க?” என்றார் ஷண்முகத்திடம்.

“ஒரு குறையும் காணல்ல மாமா. சங்கரி நாச்சியை விட சாந்த லட்சுமி கெட்டிக்காரி. புத்திசாலி. சங்கரிக்கு அத்தனை சமர்த்துப் போதாது மாமா. அவளைக் கட்டிக்க ஆளுங்க அவ்வளவா வரமாட்டாங்க. அதான் நம்ம ஜமீன்லயே இருக்கட்டும்னு கட்டிக்கப் போறேன். சாந்த லட்சுமிக்கு நல்ல இடமா பார்த்துரலாம் மாமா” என்று பொறுமையாகச் சொன்னார் ஷண்முகம்.

கல்யாணத்திற்கு வந்தாலும் மாமன் நாச்சியப்பன் சமாதானமாகவில்லை. மகிழ மலை ஜமீனுக்கு தன் மகள் ஜமீன்தாரிணியாகவில்லையே என்ற கோபம் உள்ளுக்குள் புகைந்துக கொண்டே இருந்தது. அந்த விரோதம் சங்கரி நாச்சியார் மீது வன்மம் கொள்ள வைத்தது.

ஜமீன்தாரின் இரண்டாவது மாமன் நாச்சியப்பன் அப்படியொன்றும் பெரிய சொத்துக்கு அதிபதி அல்ல. எல்லாமே தன் தங்கை வரலெட்சுமியைக் கட்டிக் கொடுத்து மகிழ மலையைச் சுரண்டி சேர்த்த சொத்துக்கள் தான். மூத்த மாமன் சங்கரி நாச்சியோட அப்பன் அவ்வளவு கெட்டிக்காரன் இல்லை. தனக்குள்ள சொத்துக்களை வைத்துக் கொண்டு கெட்டிக்காரத்தனமாக தன்மானமுள்ளவனாக வாழ்ந்து வந்தான்.

“மாமா, உங்க மக சங்கரியைத் தான் நான் கட்டப் போறேன்” என்று சின்ன ஜமீன் ஷண்முக சுந்தரம் சொன்னதும் நடுங்கிப் போனார்.

“உங்க அளவுக்கு எனக்கு அந்தஸ்து இல்லையேப்பா” என்று ஒதுங்கவும் பார்த்தார்.

சின்ன ஜமீன்தார் ஷண்முகத்திற்கு பாலாவை மணக்க ஆசை. ஆனால் அது எக்காலத்திலும் முடியாது என்பதும் அவர் அறிந்ததே. தனக்கு அன்பும், அனுசரணையும் உள்ளவள். மனைவியாக வேண்டும் என்பதே அவரின் விருப்பம். அதை பெரிய மாமன் உணர வேண்டும என்று எண்ணினார்.

"மாமா எனக்குத் தேவை நல்ல மனைவி, சங்கரி நாச்சி நல்ல மனைவியா இருப்பானு எதிர்பார்க்கிறேன். உங்க மகதான் உங்க அந்தஸ்து அது போதும்." என்ற சின்ன ஜமீன்தாரின் பேச்சு அவரை சமாதானப்படுத்தியது.

தந்தையை இழந்து ஜமீன் பொறுப்பை ஏற்ற ஷண்முகத்தை இனியும் சின்ன ஜமீன் என்று அழைப்பது பொருத்தம் இல்லை மகிழ மலை ஜமீன்தார் என்றே அழைக்கலாம்.

ஜமீன்தார் ஷண்முகத்தின் திருமணம் வஞ்சகத்தை வெளியே காட்டாத பெரிய மாமனின் குடும்பம் கலந்து கொள்ள நடந்தேறியது. தன்னுள்ளத்தில் பொத்தி வைத்த மல்லிகைப் பூச்சரமாய் வைத்திருந்த ஜமீன்தாரின் நினைப்பை வெளியே காட்டாமல் கவனமாய் நடந்துக் கொண்டாள் பாலாம்மா. பார்வை சங்கமம் ஒன்றே உள்ளப் பரிமாற்றலுக்கு இலக்காகி நிற்க தன்னுள்ளேயே பாலாவுக்குத் தெரியாமலேயே அடக்கிக் கொண்டார்.

மூன்று மாதங்கள் ஓடின. பெரிய மாமா தன் வீட்டில் பூஜை என்றும், விருந்துக்கும் ஜமீன்தாரையும், சங்கர நாச்சியாரையும் அழைத்தார். அந்த சமயம்தான் பாலாவின் அப்பாவை பாம்பு கடித்து இறந்து போன சம்பவமும் நடந்தது. இதைக் கேட்டு பதறிப் போனார் ஜமீன்தார் ஷண்முகம்.

## 12

ஜமீன்தார் ஷண்முகம் வந்து சேர்வதற்குள் சவ அடக்கம் எல்லாம் முடிந்துவிட்டது. சங்கரி நாச்சியை பத்து தினங்கள் அங்கேயே விட்டு விட்டுப் போகச் சொல்லி பெரிய மாமன் தங்க வைத்துக் கொண்டார். ஜமீன்தார் ஷண்முகத்திற்கு பாலாவின் அப்பா இறந்தது மனத்திற்குள் அளவில்லாத துயரத்தைக் கொடுத்தது.

அவர் துக்கம் கேட்க வந்த மலையில் பாலா ஜமீன் தோட்டத்து இல்லத்தில் அவர்கள் வசிக்கும் பகுதியில் உட்கார்நதுக் கொண்டிருந்தான். அப்பா இறந்து இரண்டு தினங்களே ஆனதால் ஜமீன் மாளிகைக்குள் அவள் காலெடுத்து வைத்தாளில்லை. ஜமீன்தாரைக் கண்டதும் கண்களில் நீர் பொங்கியது.

ஜமீன்தார் தன் சுய கௌவரவத்தை எண்ணி சற்று தள்ளியே நின்றார். தோட்டத்தில்

ஆங்காங்கு பண்ணையாட்கள் வேலை செய்துக் கொண்டிருப்பார்கள். தன்னால் இந்த ஏழைப் பெண்ணுக்கு எந்த அவப் பெயரும் வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்தார்.

"பாலா, நடந்ததைக் கேள்விப்பட்டேன். அந்த சமயத்தில் நானில்லாமல் போய்விட்டேனே. உன் தந்தையைப் போல் விசுவாசமானவைரைப் பார்க்கவே முடியாதம்மா"

முகத்தைத் தாழ்த்தி நிலம் பார்த்துக் கொண்டிருந்த பாலா நீர் நிறைந்த விழிகளை உயர்த்தி அவரைப் பார்த்தாள். கண்ணீர் அவளது அழகிய கன்னங்களில் உருண்டு நெஞ்சுப்புடவையை நனைத்தது. அவரது கரங்கள் அணைத்துத் துடைக்கத் துடித்தன. தனக்கு அதற்குரிய உரிமை இல்லை. மனத்துக்குள் இப்படி உணர்ச்சிகளை அனுபவிப்பது எவ்வளவு கொடுமையானது? சற்று நீரின் சுழல் போல சுழல வைத்து மூச்சடைக்க வைத்து விடுகிறதே.

"பாலா வருவதைத் தடுக்க முடியாதும்மா.. நீ தைர்யமான பொண்ணுனு எனக்குத் தெரியும். உன் உள்மனசுக்கு இன்னொண்ணும் தெரியும்".

"என்ன ஐயா" என்று கண்களைத் துடைத்துக் கொண்டே கேட்டாள்.

"மனசு விட்டுப் பேசறேன். உன்னை நான் விரும்பறேன்னு தெரியும்."

"தெரியும்".

"உன்னை மணக்க முடியாததுங்கறதும் தெரியும்".

"தெரியும்"

"ஒரு பெண்ணைக் கல்யாணம் கட்டிக்கிட்டு இன்னொருத்தியை ஆசைக்காக வச்சுக்கற ஈனத் தொழிலையும் செய்ய மாட்டேன். என்னைப் பொறுத்த வரைக்கும் காதல் உயர்ந்த உணர்வு கொச்சைப்படுத்த மாட்டேன். உன் நினைவு என் நெஞ்சுல எப்பவும் இருக்கும்"

அவள் வியப்பு கண்களில் பூக்க ஜமீன்தாரை நிமிர்ந்து பார்த்தாள். இந்த அடைக்கலம் என் வாழ்க்கைக்கு போதும் என்று கண்கள் பேசியதை அவர் புரிந்துக் கொண்டார். ஆனாலும் பாதுகாப்பு தர வேண்டிய பொறுப்பை உணர்ந்துக் கொண்டார். அவளும் அவருடைய குடிமக்கள்களில் ஒருத்தி அல்லவா? அது தனியான பொறுப்பாயிற்றே.

“ரொம்ப புண்ணியம் பண்ணி இருக்கேன்”

“அதனால உனக்கு என்ன லாபம் பாலா”

“யாருக்கும் கிடைக்காத பாக்யம் எனக்குக் கிடைச்சிருக்கே”

“அதுல எந்த லாபமும் இல்லையேம்மா.. நீ இருந்த இடத்துல சங்கரி நாச்சி இருக்கா. அவள் பெறக் கூடிய உரிமைகள் எதையும் நான் உனக்குத் தர முடியாதே. அதனால ஒண்ணு சொல்ல விரும்புகிறேன்.”

“என்ன ஐயா? “

“நீ இன்னொருவரைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கணும்.”

தீ சுட்டாற் போல நடுங்கிப் போனாள் பாலா. அப்படியே அவர் கால்களில் விழுந்தாள்.

“என்ன பாலா இது?”

“என் உணர்ச்சிகள் சாகாது ஐயா.

காலம் பூராவும் நான் இந்த ஜமீன்ல ஊழியம் பண்ணிக் கொண்டு உங்கள் வாரிசுகளை என்னுடையதாக எண்ணி வளர்ப்பேன் ஐயா. எந்த காலத்திலும் சங்கரி நாச்சிக்கு அம்மாவுக்கு துரோகம் பண்ணமாட்டேன்”. என்றவளைத் தூக்கி நிறுத்தினார்.

இந்த இடத்தில் நாராயணஸ்வாமி நிறுத்தி கண்களைத் துடைத்துக் கொண்டார். மற்றவர்களும் இமைக்க மறந்து உட்கார்ந்திருந்தனர். அவர் பிளாஸ்கிலிருந்த மீதி காப்பியை தம்ளர்களில் ஊற்றிக் கொடுத்தார்.

“சில பேர்களின் சொற்கள் மந்திர வலிமை உடையது. பாலாவின் சொற்கள் எப்படி பலித்ததுனு போகப் போகத் தெரிஞ்சுக்குவே. அதுக்கு சாட்சி பாலா வளர்த்த பையன் நீதான்” என்றவர் சொல்லத் தொடங்கினார்.

ஜமீன்தார் என்ன சொல்லியும் பாலா திருமணத்திற்கு சம்மதிக்கவே இல்லை. பதினைந்து தினங்களில் சங்கரி நாச்சியார் திரும்பி வந்துவிட்டாள். ஜமீன்தாரின் பெரியம்மா அவளுக்கு பெரியப்பா முறை அல்லவா! மேள தாளம் வைக்காத குறையாய் சீர் வரிசைகளோடு கொண்டு விட்டனர்.

இதுவரை சரிதான். ஆனால் நடந்தது என்ன? பெரியப்பா வீட்டிலிருந்து திரும்பி வந்த சங்கரி நாச்சியார் சுமூகமாக இல்லை.

வெளித்துப் பார்த்தவளாக, திருதிருவென்று விழித்துக் கொண்டு இருந்தாள். அவர்கள் வரும் பொழுது ஜமீன்தார் கிராமங்களைப் பார்வை இடச் சென்றவர் மாலையில் தான் திரும்பினார்.

அவர் வந்த சமயம் பெரிய மாமன் குடும்பத்தினர் கிளம்பிக் கொண்டிருந்தனர். தன் மனைவி நாச்சியின் மாற்றம் ஜமீன்தாருக்கு இரவுதான் தெரிந்தது. பதினைந்து நாள் பிரிவைத் தீர்க்க மனைவியை அணைத்தார் ஜமீன்தார்.

நாச்சியின் கண்களில் தீக்கொழுந்துகள் சுடர் விட்டன. நடுவில் தான் வந்து அவளைப் பார்க்காத கோபம் என்று நினைத்துப் புன்னகை புரிந்தார் ஜமீன்தார்.

"என்னம்மா கோபமா! ஜமீன்லா வேலை அதிகம்" என்று தோள் மீது கை போட்டவரைத் தட்டி விட்டாள்.

"என்னைத் தொடாதே" என்று அடிக்குரலில் உறுமினாள். மரியாதையில்லாத ஒருமை விளிப்பு.

சாதுவான சங்கரி நாச்சி ஒருபோதும் முகத்தில் கோபத்தை துவேஷத்தை, வெறுப்பைக் காட்டியவள் அல்ல. இது புது சங்கரி நாச்சி.

"என்னாச்சும்மா"

"எனக்குப் புடிக்கல்ல"

"எது புடிக்கல்ல"

"நீ என்னைத் தொடறது"

"புடிக்கல்ல. என்னைத் தொடாதே ஜமீன்தாருக்கு மனக்குழப்பம் அதிகமாகியது.

"என்னாச்சும்மா"

இந்தப் பார்வை வெறித்து உறுத்துப் பார்த்தாள். இந்தப் பார்வை புதுசு. அவள் சொற்கள் புதுசு. என்னவாயிற்று இவளுக்கு? புரியத்தான் இல்லை. ஏதாவது குழம்பிப் போயிருக்கிறாளா!

"சரி.. தொடல்ல.... படுத்துக்கோ"....

படுத்துக் கொண்டாள்.

அடுத்த நாள்... அடுத்த நாள்... அதற்கும் அடுத்த நாள் என்று எந்த மாற்றமும் இல்லாமல் சங்கரி நாச்சியார் வெறித்த பார்வையுடன்

இருந்ததைக் காண ஜமீன்தார்க்கு தாளமுடியவில்லை.

பெரிய மாமன் வீட்டில் ஏதாவது நடந்திருக்குமா? சங்கரி நாச்சியின் அப்பாவான தன் சின்ன மாமன் நாச்சியப்பனை அழைத்து விசாரிச்சார். மகளின் நிலைமை அவருக்கே திகிலூட்டியது.

"என்ன தம்பி இப்படி இருக்குது?"

"அதான் எனக்கும் புரியல்ல மாமா பெரிய மாமன் வீட்டில் போய் விசாரிக்க இருவருமே போய் சேர்ந்தனர்.

"மாமா, இங்கே ஏதாச்சும் நடந்தா! சங்கரி வெறிச்சு பிரம்மமாய் உன் மத்தமாய் இருக்கிறாளே?" என்று விசாரித்தார்.

"அப்படி எல்லாம் ஒண்ணுமில்லையே ஷண்முகம். இங்கே சாந்த லட்சுமியுடன் நல்லாத்தானே இருந்தது. நான் கூட இன்னும் பத்துநாள் இருந்துட்டு போனு சொன்னேன். உன்னை விட்டு இருக்க மாட்டேன்னு சொல்லிடுச்சே" என்று விஷமமாக இதழில் சிரிப்பை ஓடவிட்டுச் சொன்ன பெரிய மாமனனிடம் வேறு எதைக் கேட்க முடியும்.

வேதனையுடன் வந்து சேர்ந்தார் ஜமீன்தார் ஷண்முகம்.

மூன்று மாதங்கள் இதே ரீதியில் ஓடிட மனைவி சங்கரி நாச்சியார் நான்கு மாத கர்ப்பமாக இருக்கிறாள் என்ற தெரிய வந்தது. வருத்தப்படுவதா, மகிழ்ச்சியடைவதா என்று தெரியாத நிலையில் குழம்பினார் ஜமீன்தார்.

இந்த நேரங்களில் எல்லாம் பாலாவும், நாராயணஸ்வாமியும் தான் உதவியாக இருந்தார்கள். மனநிலை பாதிக்கப்பட்ட சமயம் கர்ப்பமாக இருக்கிறாளே. குழந்தைக்கு இதனால் ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என்ற சந்தேகமும் அவர்களுக்குள் ஏற்பட்டது.

ஜமீன்தாரின் சாந்த குணம் இனியும் ஜமீனை ஆள சாத்தியப்படாது என்று புரிந்துக் கொண்டார். நாராயண ஸ்வாமி, உளவு வேலை செய்யத் தொடங்கினார். சங்கரி நாச்சியார் இப்படி ஆனதற்கு ஜமீன்தாரின் பெரிய மாமன்தான் காரணம் என்று புரிந்தது. அதை ஜமீன்தார் நம்ப மறுத்தார்.

"இல்லை ஜமீன்தார் ஐயா, அவங்க வீட்டு வேலைக்காரர்கள் மூலம் கிடைத்த தகவல். மருந்து வைத்து செய்வினை செய்திருக்கிறார்கள்."

"காரணம் என்ன நாராயணா?"

குழந்தைத்தனமாகக் கேட்கும் ஜமீன்தாரைப் பார்த்துச் சிரித்த நாராயணஸ்வாமி, "சாந்த லட்சுமி இந்த ஜமீனுக்கு உரிமைக்காரியா ஆகல்லையே... அந்தக் கோபம் தான்" என்றார்.

ஜமீன்தார்க்கு இந்தப் பிரச்சனையை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்ற கவலை எழுந்தது. இதன் நடுவே ஜமீன்தாரின் பெரிய மாமன் குடும்பம் சங்கரி நாச்சியைப் பார்க்க பலகாரங்களுடன் அடிக்கடி வந்து போனார்கள்.

அவர்களைத் தடுக்க முடியாமல் தவித்துப் போனார் ஜமீன்தார். மாதங்கள் ஆக ஆக சங்கரி நாச்சியாரின் மூர்க்கத்தனம் வெறியாக மாறி விட்டது. பெரியப்பாவையும் அவரது குடும்பத்தையுமே கண்டு வெறி கொண்டு கத்தினாள். சீமந்த வைபவத்திற்கு சீர் கொண்டு வந்தவர்கள் அதற்குப் பின் வரவே இல்லை.

மாதம் நெருங்கிய பொழுது நாராணஸ்வாமி கொண்டு வந்த தகவல்களைக் கேட்டு நடுங்கிப் போனார் ஜமீன்தார்.

## 13

"நாராயணா, இது உண்மையா?" என்று பலதரம் கேட்டு விட்டார் ஜமீன்தார்.

"உண்மைதான் ஐயா, உங்க பெரிய மாமா தான் ஜமீன்தாரிணிக்கு செய்வினை வைத்ததோடு உங்கள் வாரிசை அழிக்கவும் முயற்சி செய்கிறார்கள்.

ஜமீன்தார் அதிர்ந்து போனார்.

"இதை எப்படித் தடுப்பது நாராயணா"

நாராயண ஸ்வாமிதான் முயற்சி செய்தார். பாலாவை மனவேற்றுமை காரணமாக மலையை விட்டு நகர்த்துவது போல தன்னுடைய சென்னை வீட்டில் கொண்டு வைத்தார். இதற்கு நாராயண ஸ்வாமியின் மனைவியும் ஒத்துழைத்தாள். குழந்தை பிறந்ததும் உடனே அப்புறப்படுத்தி நாராயண ஸ்வாமியின் வீட்டிற்குக் கொண்டு வந்து விட்டாள். நாராயண ஸ்வாமியின் மனைவி.

சங்கிரி நாச்சி அரை நினைவோடு மயக்க நிலையில் கிடந்தாள். அவளுக்கு ஏன் இப்படி சித்தம் கலங்கிக் கிடக்கிறது என்பதே புரியாமல் தவித்தார் ஷண்முகம். டாக்டரின் உதவியோடு குழந்தை

இறந்துவிட்டதாக அறிவித்தார். இந்தச் செய்தி பெரிய மாமனின் குடும்பத்தினர்க்கு பெருத்த நிம்மதியைக் கொடுத்தது. அதை விடப் பெரிய நிம்மதி குழந்தை இறந்தது தெரியாமல் அரைகுறை நினைவோடு கிடக்கிறாள். சங்கரி நாச்சி என்பதே.

வெகு விரைவில் தன் மகள் சாந்த லட்சுமி மகிழ மலை ஜமீன்தாரிணியாக ஆகிவிடுவாள் என்பது அவர்களைப் பொறுத்த வரை உறுதியான செய்தியாக இருந்தது. ஜமீன்தார் ஷண்முகத்திற்கோ தன்னுடைய பச்சிளம் குழந்தையின் பால் முகத்தைப் பார்க்கவில்லை என்ற ஏக்கத்தை விடத் தாய்ப்பாலும், தாயன்பும் கிடைக்கவில்லையே என்ற தாபமே பெரிதாக இருந்தது.

தன்னிறைவு இன்றிக் கிடந்த பச்சை உடம்புக்காரி சங்கரிக்கு தாய்ப்பால் கட்டிக் கொண்டு ஜுரம் வேறு வந்தது. வலிப்பு வேறு அடிக்கடி வந்தது. ஒரு மாதம் தாக்குப்பிடித்து ஷண்முகம் ஜமீனுக்கு அழைத்து வந்தார். பாலாவும் ஜமீனும் மாளிகையில் இல்லை. சங்கரி நாச்சியின் மனஉணர்வு என்ன உந்தியதோ தெரியவில்லை.

குளியலறையில் பச்சைத் தண்ணீரை மொண்டு மொண்டு தலையில் ஊற்றிக் கொண்டாள்.

பணியாட்கள் பார்த்துவிட்டு அவளை அறைக்கு எடுத்து வந்தார்கள். ஜமீன்தார் இல்லாத நேரம் இது. அன்றிரவே கடுமையான ஜுரம். மருத்துவமனையில் சேர்த்தார். ஒரு வாரம் ஜுரம் இறங்காமல் ஜன்னியில் பேத்திக் கொண்டு கிடந்தாள் நாச்சியார்.

மோப்பம் பிடித்தது போல் வந்தார்கள். பெரிய மாமன் குடும்பத்தினர் அச்சமயம் பார்த்து சின்ன மாமன் நாச்சியப்பன் காமாலையால் பீடிக்கப்பட்டிருந்தார். மகளுக்கு உதவ முடியாதவராக தனக்கே உதவி தேவை என்ற நிலையில் கிடந்தார். இது பெரிய மாமன் குடும்பத்தினர்க்கு பேருதவியாக இருந்தது.

“என்ன அத்தான், சங்கரி என்னுடைய தங்கை இல்லையா? நான் கவனித்துக் கொள்ள மாட்டேனா?” என்று தேனொழுகப் பேசியபடி சங்கரியின் கட்டிலை ஆக்கிரமித்துக் கொண்டாள் சாந்த லட்சுமி.

நாராயண ஸ்வாமி தடுத்துப் பார்த்தார். குழந்தையை முன்னிட்டு மெட்ராஸுக்கும் மகிழ மலைக்கும் அல்லாடிக் கொண்டிருந்தார். அவர் மனைவியும், பாலாவும் பச்சிளம் குழந்தையைப் பராமரிக்க வேண்டி இருந்தது. வேறு வழி இன்றி ஷண்முகம் சம்மதித்தார். அது தான் உரிய வினை என்று புரிந்துக் கொள்ள முடியாத வேதனையில்

ஆழ்ந்திருந்தார்.

கர்ப்பமுற்றது தெரியாத நிலையில் தன் பெரிய மாமன் தன் மனைவிக்கு பெரியப்பா தானே ஒன்று நம்பி விட்டு விட்டு வந்தார் ஷண்முகம். பெரிய மாமன் சங்கரி நாச்சியார் தன் தம்பியின் மகள்தானே, வாழ்ந்து விட்டுப் போகட்டும் என்று எண்ணிராயில்லை. இங்கே பங்காளி காய்ச்சல் வேலை செய்தது. தம்பி மகளுக்கே செய்வினை வைக்கச் செய்தார்.

இப்பொழுதும் அவர்கள் சமாதானம் அடையவில்லை. சங்கரி நாச்சியை ஒழித்துக் கட்டி அந்த இடத்தில் ஜமீன்தாரிணியாக தன் மகள் சாந்த லட்சுமியை உட்கார வைக்கத் துணிந்தார். சாந்த லட்சுமி தன் ஒன்று விட்ட தங்கையின் காதுகளில் மெல்லிய குரலில் “நீ செத்துப் போ” என்று யாரும் வராத பொழுதுகளில் ஓதிக் கொண்டே இருந்தாள்.

பிறகு உதட்டைத் திறந்து துளியூண்டு மருந்தையும் தடவினாள். பதினைந்து தினங்கள் கழித்து மெல்ல முனகினாள் சங்கரி நாச்சி. கண்களைத் திறந்தாள். தாழ்வாரத்தில் அமர்ந்துக் கொண்டிருந்தார் மனைவியைப் பார்க்க வந்த ஜமீன்தார்.

“அத்தான், என் தங்கச்சி கண்ணை முழிச்சுப் பார்க்கறா. வாங்கத்தான்” என்றாள்.

சொன்னதுடன் நில்லாமல் ஓடி வந்து அவர் கையையும் உரிமையுடன் பற்றி இழுக்க, மெல்லக் கையை உதறிக் கொண்டான் ஷண்முகம்.

“வாரேன் போ” என்று ஜமீன் அதிகார தோரணையுடன் கடுமையாக மொழிந்தார்.

உள்ளே வந்து மனைவியைப் பார்த்தர். முகக் கடுமை மாற “நாச்சி, எப்படிம்மா இருக்கே?” என்று முன் நெற்றி மயிரை ஒதுக்கியபடி கேட்டார்.

சாந்த லட்சுமி நிற்கும் பொழுது பாய்ச்சிய குறுகுறு பார்வையை முட்களாக உள்ளுணர்வு உணர்த்த சட்டென்று நிமிர்ந்தார் ஷண்முகம்.

“நீ கொஞ்சம் வெளியே இருக்கியா! உனக்கு இவ தங்கச்சியா இருக்கலாம். இவ என் மனைவி” என்றார் அழுத்தமான குரலில்.

என்ன பேசி விடுவார்களோ என்று அறியும் ஆவலில் நின்ற சாந்த லட்சுமி முகம் விழ வெளியேறினாள். ஷண்முகம் மனைவியின்

முகத்தைத் தடவிக் கொடுத்தார். நெற்றியில் அழுத்தமாக முத்தமிட்டாள்.

“சொல்லு நாச்சி” என்றவரின் முகத்தையே கண்ணிமைக்காமல் பார்த்தார்.

“என்னம்மா பார்க்கறே?”

நாச்சி இதழ்களைப் பிரித்து “நான் செத்துப் போகணும்“ என்றாள் சன்னக் குரலில்

“என்ன சொல்றே நாச்சி? உனக்கு அருமையா ஓர் ஆண்குழந்தை இருக்கு. நீ ஏன் செத்துப் போகணும்?” என்று காதருகில் முணுமுணுத்தார்.

“நான் செத்துப் போகணும்“ என்று மீண்டும் சன்னக்குரலில் முனகியபடியே நாச்சி மயங்கிப் போனாள்.

கண்களைத் துடைத்தபடியே வெளியே வந்தார் ஜமீன்தார் ஷண்முகம்.

“அத்தான், என் தங்கச்சி ஏதாவது சொன்னாளா?” என்று கேட்டபடி ஓடி வந்தாள் சாந்த லட்சுமி.

‘இந்த சமயம் இவளிடம் விரோதம் வேண்டாம்‘ என்று அறிவு உபதேசித்தது.

“இல்லம்மா. உதட்டைப் பிரிச்சுப் பிரிச்சுக் குவிச்சா பேச்சு காற்றாகத்தான் வந்துச்சு” என்ற ஜமீன்தார் கிளம்பிப் போனார்.

அடுத்து வந்த நான்கு நாட்களில் சங்கரி நாச்சியார் “நான் செத்துப் போகணும்“ என்ற வாக்கை நிரூபித்து செத்துப் போனாள்.

செய்தி கேட்டு பாலா துடித்துப் போனாள். ஷண்முகம் நடை பிணமானார். நாராயண ஸ்வாமிதான் உடன் இருந்து காரியங்களை கவனித்தார். இந்த நிலையில் தான் சாந்தலட்சுமி அன்று ஜமீன்தார் நாச்சியிடம் பேசியதை அரைகுறையாக ஒட்டுக் கேட்ட விஷயத்தை தன் தந்தையிடம் காதில் போட்டார்.

“என்னம்மா சொல்றே?”

“தங்கச்சி காதுல ஒரு அருமையான ஆண்பிள்ளைணு அத்தான் சொன்னது கேட்டதப்பா”

“அது தான் செத்துப் போச்சேம்மா. நம்ம மருந்தை சாப்பிடடு

அது உயிரோட இருக்கவே முடியாதும்மா”.

“அவ கருத்தரிச்சிருக்கானு தெரியாம தானே மந்திரிச்ச மருந்தைப் கொடுத்தோம்.”

“அவளைத் தாக்கின மருந்து குழந்தையையும் விட்டு வைக்குமா! நான் பார்த்த மந்திரவாதி சாமான்யப்பட்டவன் இல்ல. ஐம்பதாயிரம் இல்ல கொடுத்திருக்கேன்.”

“அதையும் மீறிக் குழந்தை இருந்தா?”

“கண்டுபிடிச்சிருவோம்“ என்று மீசையை முறுக்கினார் பெரிய மாமன்.

ஜமீனின் வேலையாட்கள் ஷண்முகத்தின் தந்தை காலத்தவர்கள். விசுவாசிகள். அறைக்கு வெளியே அலங்கார விளக்குகளைத் துடைத்துக் கொண்டிருந்த வேலையாள் பரமன் மேலே இருப்பதை கவனியாமல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பரமன் ஓடோடி வந்தான்.

என்ன பரமா?” நாராயண ஸ்வாமி தான் கேட்டார்.

“ஐயா, ஜமீன்தாரின் குழந்தை இறக்காமல் இருக்கிறதா?” என்று அவன் கேட்டதும் ஆடிப் போனார்.”

“ஏண்டா கேட்கறே?”

“சொல்லுங்க சாமி”

“நீ முதல்ல விஷயத்தைச் சொல்லு”

அவன் சொன்னதும் நாராயண ஸ்வாமி திடுக்கிட்டார். குழந்தை பாலாவிடம் பத்திரமாக இருப்பதைச் சொன்னவர், அவளைத் தன்னுடைய வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அவர் தெரிவித்தபடி நாராயண ஸ்வாமியின் மனைவி பாலாவையும், குழந்தையையும் தன் பிறந்த வீட்டினர் வசம் ஒப்படைத்து விட்டாள். அந்த வீடு மனிதர்கள் அடர்ந்த வீடு, பாலாவும் குழந்தையும் அந்த வீட்டில் ஒண்டிக் கொண்டனர்.

ஷண்முகத்தின் பெரிய மாமனுக்குத் தன் மகனின் சொல்லை ஏற்கவும் முடியவில்லை, தள்ளவும் முடியவில்லை. ஆங்காங்குத் தேடிப் பார்க்க ஆட்களை அனுப்பி வைத்தார். அவரென்ன கம்ஸனா! ஒரு மாதத்திற்குள் பிறந்த கைக்குழந்தைகளை கொன்னு விட வேண்டும்

என்று உத்திரவு போட?

அலுத்துதான் போனார். எங்கே இருந்தாலும் ஜமீனுக்கு ஒரு நாள் குழந்தை வந்து தானே தீர வேண்டும்? இந்த யோசனையில் ஜமீனைக் கைப்பற்ற முனைந்தார். கரைப்பார் கரைத்தார் கல்லும் கரையும். நாராயண ஸ்வாமி எடுத்துச் சொல்லியும் கரைந்து போனார் ஷண்முகம். சாந்த லட்சுமியை மணந்துக் கொண்டார்.

நாராயண ஸ்வாமிக்கு இதில் கொஞ்சம் வருத்தமே. ஜமீன்தாரின் நிலைமை புரிய அவரைக் காவல் காக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். மனதறிய ஷண்முகம் சாந்த லட்சுமியை மனைவியாக ஏற்காமல் தவித்துதான் போனார். சில சமயங்கள் ஜமீன் வேலை என்று ஒதுங்கிப் போனார். சில சமயம் எதுவும் பேசாமல் படுத்து விடுவார். தன் மூத்த மனைவிக்கு மருந்து வைத்து செய்வினை செய்தது போல நடந்து விடுமோ என்றும் பயந்தார்.

ஒருநாள் வேலை எதுவுமின்றி பங்களா வாசலில் உட்கார்ந்துக் கொண்டிருந்தார். பங்களா முகப்பு பெரிய விளக்கை அணைக்கச் சொல்லிவிட்டார். சின்ன விளக்கு தான் மங்கலாக, தோட்டத்தின் ஒரு மூலையில் யாரோ நிற்பதைப் போல இருக்க... எழுந்து போனார்.

புகை உருவில் சங்கரி நாச்சியின் உருவம்....

## 14

கண்களைக் கசக்கிக் கொண்டும் பார்த்தார். ஜீவ உருவமில்லை. புகை உருவம் அதையும் அவருடைய புலனும், உள்ளுணர்வும் உணர்ந்தது.

“சங்கரி, என்னைப் பார்க்க வந்தியா? அவ்வளவு ஆசையா என் மேலே?” என்று முனகினார்.

பலத்த காற்று வீச காற்றின் ஒலி முகைவாக அவர் காதுகளில் “என் குழந்தை எங்கே”? என்ற கேள்வியாக ஒலிக்க ஸ்தம்பித்துப் போய் நின்றார். எதிரொலியாக சில நிமிடங்கள் ஒலித்தன. கணவரைக் காணோமென்று தேடிக் கொண்டு வந்த சாந்த லட்சுமி தோட்டத்து ஓரமாக நிற்பதைக் கண்டாள்.

“என்னத்தான் என்ன ஆச்சு?” என்றவளைப் பார்த்துப் பேந்தப் பேந்த விழித்தாள்.

“என் குழந்தை... என் குழந்தை” என்று திரும்பத் திரும்ப புலம்பினாள்.

இறந்து போன தன்னுடைய குழந்தையை எண்ணி மனம் குன்றி இருப்பதாகத் தான் அவள் எண்ணினாள். நாச்சியின் உருவத்தைத் தன் கணவர் கண்டதையோ, காற்றின் குரல் காதில் ஒலித்ததையோ அவள் அறிந்தாளில்லை. அவர் தன்னை மறந்து உறங்கியதால் மறுதினம் முன் தினம் கண்டதெல்லாம் கனவாகவே தோன்றியது.

என்றாலும், நான் நாச்சியைப் பார்த்தேனா, அவள்தான் தன் குழந்தை எங்கே என்று கேட்டாளா? என்ற அழைப்பு மட்டும் மனத்தை விட்டுப் போகவே இல்லை. அவர் முகவாட்டத்தை உணர்ந்த நாராயணஸ்வாமி ஏதோ நடந்திருக்கிறது என்று ஊகித்துவிட்டார்.

“என்ன நடந்தது ஐயா?”

அவரைத் தனியே அழைத்துப் போன ஜமீன்தார் நடந்ததைச் சொன்னார்.

“காற்றுக்குக் குரல் உண்டா? என் குழந்தைனே காதுல மோதுதே. அவ உயிரோட இருந்தப்பவே நான் சொன்னதைப் புரிஞ்சுக்கல்ல. இப்பவா புரிஞ்சுக்குவா? எப்படி புரிய வைப்பேன். அவ குழந்தைகிட்ட போயிட்டா குழந்தை பயந்துடாதா! ஒரு வயசுக் குழந்தைக்கு என்ன ஸ்வாமி தெரியும்?”

“இன்னும் ஒரு வயசு கூட ஆகல்ல.

சங்கரி நாச்சி ஏராளமான ஆசைகளோட செத்துப் போயிருக்காங்க. மருந்து வச்சு நினைவு மங்கறத்துக்கு முன்னாடியே தான் கர்ப்பமா இருக்கறதை உணர்ந்திருக்காங்க. அந்த நினைவுகளே அந்த அமானுஷ்ய உருவத்துல பதிஞ்சு போயிருக்குனு நினைக்கிறேன்.

“அதுக்கு என்ன பண்றது? என் ஆயுசு பூரா வந்து நின்னா என் மனோபலம் திடமில்லாம இல்ல போயிடும். நான் மட்டுமல்ல என் குழந்தை எப்படியும் இந்த ஜமீனுக்கு வாரிசு ஆகனும். சங்கரி நாச்சி இந்த மாளிகைல பேயா அலைஞ்சா, அது அவனுக்குப் புரியுமா? பயப்பட மாட்டானா! அவ இப்படி உலாவறது தெரிஞ்ச மக்களும் இதை பேய் மாளிகைனு பேர் கட்டிடுவாங்க். இருட்டினா ஒத்த மனுஷன் இந்தப் பக்கம் நடந்து வருவானா?”

தாடையைத் தடவிக் கொண்டு நாராயண ஸ்வாமி சற்று யோசித்தார்.

“ஐயா, சென்னையைச் சுற்றியுள்ள ஒரு கிராமப்பகுதியிலே சித்தர்

சமாதி ஒண்ணு இருக்குது. சக்தி வாய்ந்த சித்தர் அவர். அவருடைய சீடர் அருள்வாக்கு சொல்றாரு. அவர் வாக்கு சித்தரின் வாக்குனு மக்கள் கருதராங்க. அங்கே போய் கேட்டா என்ன?" என்று யோசனை சொன்னார்.

எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்று அலைபாய்ந்து கொண்டிருந்தார் ஜமீன்தார்" போகலாம் நாராயணா. யாருக்கும் தெரியாம போகணும்" என்று சொன்னார்.

இவர்கள் இப்படித் தீர்மானம் பண்ணிக் கொண்டிருக்கும் சமயம் சாந்த லட்சுமி ஓரிரவில் குண்டைத் தூக்கிப் போட்டாள். தூங்கி எழுந்து காலையில் தோட்டத்தில் உட்கார்ந்திருந்த ஜமீன்தாரிடம் வந்தாள். காப்பியை நீட்டினாள். சிரித்தபடியே மனைவி முகத்தைப் பார்த்த ஜமீன்தார் அதிர்ந்து போனார்.

"என்ன சாந்திம்மா தூங்கல்லையா?"

சாந்த லட்சுமியின் கண்கள் பயத்தில் உருண்டன. "ராத்திரியில் குளியலறையில் சங்கரி நிக்கற மாதிரி இருந்துச்சு".

"பிரமையா இருக்கும்மா"

"நானும் அப்படித்தான் நினைச்சேன். பயத்தோட படுக்கையில படுத்தேன். பயம் போகல்ல. உங்களை அணைச்சுட்டு படுத்தா பயம் போகுமனு பக்கத்துலா புரண்டா படுக்க முடியல்ல. உங்க பக்கத்துல யாரோ படுத்துட்டு இருக்கற மாதிரி ஓர் உணர்வு ஏற்படுதுங்க"

ஜமீன்தார் புரிந்துக் கொண்டார். சங்கரி நாச்சியின் காதல் அவருக்குத் தெரியும். கள்ளம் கபடு இல்லாத பெண். வாழ்ந்த சொற்ப காலத்திலும் அவரே உயிரென அவரின் நிழலாகவே வாழ்ந்தவள். பெரிய மாமன் வீட்டுக்குப் போன பொழுது அங்கே விட்டு விட்டு வராமல் இருந்திருந்தால் சங்கரியைத் தான் இழந்திருக்க மாட்டோமா? இப்படி சில சமயங்கள் நினைத்து மருகுவார்.

தன்னை மணந்து கொண்டதால் தான் அவள் அற்ப ஆயுளில் போய்விடடாள் என்று அவர் உறுதியாக எண்ணியதில் தவறு இல்லை. அமானுஷ்யமாக அவள் தன்னைச் சுற்றி வருகிறாள் என்பதும் அவர் மனத்தின் ஓரத்தில் சிறு மகிழ்ச்சியையே அளித்தது. இந்த நிலை சாந்த லட்சுமியாலும். அவள் தந்தையாலும் தானே என்ற எரிச்சலும் மூண்டது.

"என்னங்க என்றவளைப் பார்த்தாள் ஜமீன்தார்.

“எனக்கு பயமா இருக்குங்க. நம்மளோட மாளிகையில சங்கரி பேயா அலையறாளேனு பயமா இருக்குதுங்க”

“அவ உன் தங்கச்சிம்மா”

“ஆமாங்க... ஆனா இப்ப அவ பேய்ங்க”

“எப்படி இப்படி உறுதியாச் சொல்றே”

“பேய்கது பந்த பாசம், உறவு எல்லாம் கிடையாதுங்க.”

“ம்... என்று கனமாக மூச்சை இழுத்து விட்ட ஜமீன்தார்” இப்ப என்ன பண்ணணும்னு சொல்றே? என்று கேட்டார்.

“எனக்கு பயமா இருக்குதுங்க. இந்த மாளிகையை விட்டு பேயை ஓட்டணுங்க”

இதழ்களில் புன்முறுவல் காட்டிய ஷண்முகம் “செஞ்சுருவோம்“ என்றார்.

“எப்படி.. எப்படிங்க?”

“முதல்ல இந்த ஜமீன் மாளிகைக்கு கண், காது, மூக்கு எல்லாம் உண்டு. வெளியே தெரிஞ்சா இது மகிழ மலை ஜமீன் இல்ல. பேய் ஜமீன்னு ஆகிடும். இந்த விஷயம் உன்னோடும் என்னோடும் மட்டும் இருக்கணும்“ என்றார்.

கண்களில் பயம் மின்ன “நான் என்ன செய்யணுங்க?” என்று கேட்டாள்.

“நீ உன் அப்பா வீட்ல இரு. நான் இரகசியமா ஹோமமம் பண்றேன்னு சொல்லி அந்த அமானுஷ்ய சக்தியைக் கட்டுப்படுத்தறேன்” என்று சொன்னார்.

அதுதான் சரி என்று தோண சாந்தா அன்றே பிறந்த வீட்டுக்குப் புறப்பட்டுப் போனார். ஏனோ ஜமீன்தார் ஷண்முகத்திற்கு அவளிடம் மனம் ஒட்டாததுடன் கொஞ்சம் நிம்மதியாகவும் அவளுடைய புறப்பாடு அமைந்தது.

குறிப்பிட்ட நன்னாளில் பூக்கடைகள், பழக்கூடைகளுடனும் ஷண்முகமும், நாராயணஸ்வாமியும் போன பொழுது, ஸ்வாமிகள் அருள்வாக்கு பீடத்தில் அமர்ந்துக் கொண்டிருந்தார். மழையை முன்னிட்டு அன்று ஒன்றிரண்டு பேரைத் தவிர அதிக கூட்டம் இல்லை. அவர்களும் சற்று நேரத்தில் போய் விட்டார்கள்.

ஜமீன்தார் ஸ்வாமிகளிடம் மனசு விட்டுப் பேசினார்.

"ஸ்வாமி, அவ என் மனைவிதான். அது எனக்குப் புரியுது. ஆனா அவ ஆத்மா சாந்தியடையாமல் இப்படி அரூபமா சுத்தறானு புரியுது. பணியாட்கள் கண்ணுக்குப் பட்டுவிட்டால் என் மாளிகையே பேய் மாளிகைனு மக்கள் பயப்படற மாதிரி ஆகிடும். ஆவியா அலையுற என் மனைவியின் ஆத்மா சாந்தியடைணும். வழி சொல்லுங்க" என்று விழுந்து வணங்கினார் ஷண்முகம்.

ஸ்வாமிகள் அவரிடம் விபூதியைக் கொடுத்துப் பூசிக்கச் சொன்னார்.

"என் எதிரே மணையிலே உட்கார்ந்து என்னையே பார்த்துக் கொண்டிருங்க" என்றார் ஸ்வாமிகள்.

அப்படியே அமர்ந்தார் ஜமீன்தார். ஸ்வாமிகளின் முகத்தையே பார்த்தார். சித்தர் பெருமான் இவர் உடம்பில் புகுந்து கொண்டிருப்பாரோ? அப்படித் தான் மக்கள் நம்புவதாக நாராயண ஸ்வாமி சொல்லிக் கொண்டு வந்தார். சித்தர்கள் என்பவர்கள் மக்களுக்கு நன்மை செய்பவர்கள் தானே?

ஸ்வாமிகள் இவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். ஷண்முகத்திற்கு அந்தப் பார்வையே சுகமாக இருந்தது. ஒரு வித நறுமணம் வீசியது. பூக்கள் மலர்ந்து காற்றில் மணம் கவர்ந்து வரும் நந்தவனம் ஒன்றில் நிற்பது போல இருந்து. எந்தக் கவலையும் இல்லாத சுகந்தம்....

ஜமீன்தாரையே பார்த்துக் கொண்டிருந்த ஸ்வாமிகள் முகத்தில் என்ன படித்தாரோ தெரியவில்லை.

"உம்ம மூத்த பொண்டாட்டிய கொஞ்சம் கொஞ்சமா நஞ்சு வச்சு கொன்னுட்டாங்கய்யா. ஏற்கனவே வேற இடத்துல செஞ்சிருக்காங்க. உம்ம பையன் வேற இடத்துல கன்னிப் பெண் ஒருத்தி தாயா இருந்து வளர்க்கறா. அவன் இப்போதைக்கு ஜமீனுக்கு வரமுடியாது. உமக்குப் பிறகு தான் அவன் வருவான்" என்றார்.

தான் சொல்லாத விஷயங்களையும் ஸ்வாமிகள் சொல்லுவதைக் கேட்டு திகைத்தார். ஏதோ சந்தேகம் கேட்டார்.

"ஐயா, நான் ஜோஸ்யன் இல்ல. சித்தர் பீட அருள்வாக்கு. பரிகாரம் பண்ணு. உன் பெண்டாட்டி மத்தவங்களை நெருங்காம பண்ணலாம். ஆனா உன்னைச் சுத்திச் சுத்திட்டே இருப்பா. ஒண்ணும் பண்ண மாட்டா. பயப்படாதே. உன் கூட வாழாம போன தாபம் அவளை

விடலேய்யா” என்ற ஸ்வாமிகள் பரிகாரம் சொன்னார்.

அவர் சொன்னபடி மகிழமலையில் மூன்று தினங்கள் ஹோமங்கள் அமர்க்களப்பட்டன. சங்கரி நாச்சியைக் கட்டுக்குள் கொண்டு வரும் பரிகாரங்கள் வெளியே தெரியாமல் ரகசியமாக செய்யப்பட்டன. ஸ்வாமிகள் சித்தரின் படம் ஒன்றை ஷண்முகத்திற்குக் கொடுத்து பூஜையில் மாட்டச் சொன்னார். தினமும் ஷண்முகம் சித்தரை வணங்கிய பிறகே செயல்களைச் செய்யத் தொடங்கினார்.

ஜமீன் மாளிகை அமைதியாகத் தன் இயல்புக்கு வந்தது. ஜமீன்தார் அடிக்கடி போய் ஸ்வாமிகளை தரிசித்து விட்டு வந்தார்.

இதன் நடுவே நாராயண ஸ்வாமி பாலாவையும் குழந்தையையும் கலகலப்பான பகுதியில் குடி வைத்தார். குழந்தைக்கு மகேஷ் என்று பெயரிட்டனர். மகேஷூம் பாலாவையே அம்மா என்று அழைக்கத் தொடங்கினான். ஷண்முகம் ஜமீன் நகைகள் சிலவற்றை பாலாவிடம் ஒப்படைக்கச் சொல்லி நாராயண ஸ்வாமியிடம் கொடுத்தனுப்பினார். குடும்பச் செலவுக்கும் பணத்தைக் கொடுத்தனுப்பினார்.

## 15

நாராயண ஸ்வாமி அடிக்கடி வந்து போவது அக்கம் பக்கத்தினர் கண்களுக்கு மஞ்சள் காமாலையை உண்டு பண்ணியது. தன் ஒன்றுவிட்ட அண்ணன் என்று சொல்லிக் கொண்டாள். தனக்கும் தன் புருஷனுக்கும் விவாகரத்தாகிவிட்டது. தாலியைக் கழற்றிப் போட்டு விட்டு வந்து விட்டேன் என்று சொன்னாள்.

மற்றவர்கள் பார்வை வீச்சு தன் மேல் சரியாக விழாத காரணத்தால் ஜாக்கிரதையாக இருக்கத் தீர்மானித்தார்.

“அண்ணே, நீங்க இனிமே வர வேணாம். வங்கிக் கணக்கு ஆரம்பிச்சு பணத்தை அதுல போட்டுடுங்க” என்று கூறி நாராயண ஸ்வாமியின் வருகையை அணை போட்டாள்.

இதன் நடுவே ஜமீனின் நிலைமையும் சரியில்லை. வருமானம் என்னவோ அபரிதமாகவே வந்தது. சாந்த லட்சுமிக்கும் குழந்தை பிறக்கவில்லை. மருத்துவமனைக்கு சிகிச்சைக்கும் போனவளுக்கு அங்குள்ள நர்ஸின் ரகசிய செய்தியாக சங்கரி நாச்சியின் குழந்தை இறக்கவில்லை என்ற ரகசியமும கிடைத்தது.

சங்கரி நாச்சியின் அப்பாவும் இறந்துவிட்டார். சாந்த லட்சுமி இதை ஜமீன்தாரிடம் கேட்கவும் பயந்தாள். வயதாக ஆக ஷண்முகம் கொஞ்சம் முரடனாக மாறி இருந்தார். தன் தந்தையிடம் கலந்து ஆலோசித்த சாந்த லட்சுமி தன் அண்ணன் மகன் சத்திய சீலனை தத்து எடுக்க முயற்சித்தாள்.

இது ஜமீன்தார் ஷண்முகத்திற்குத் தெரிந்த பொழுது வெகுண்டு போனார்.

“என்னனு நினைச்சுட்டு இருக்கே உன் மனசுல?” என்று சீறினார்.

“ஏங்க... நமக்கு புள்ள இல்ல. ஜமீனுக்கு வாரிசு வேணாமுங்களா?” என்ற மனைவி முறைத்தாள்.

“எப்ப வாரிசைக் கொண்டு வரணும்னு எனக்குத் தெரியும். அது உன் வேலை இல்ல” என்றார்.

கணவனின் சீற்றத்துக்குப் பயந்தாலும் சாந்த லட்சுமி அண்ணன் மகன் சத்தியசீலனைக் கொண்டு வந்து மாளிகையில் வைத்துச் சீராட்டத் தயங்கவில்லை.

இதன் நடுவே இன்னொரு சங்கடமும் ஜமீனுக்கு நேர்ந்தது. ஷண்முகத்திற்கு சாந்த லட்சுமியின் உறவு தாய் வழி உறவு. ஜமீன்தாரின் தந்தை வழி உறவுகள் ஒன்றுவிட்ட இரண்டுவிட்ட என்று நினைத்து எழுந்தன.

“டேய், நான் உன் பெரியப்பன்டா, ஷண்முகம் நான் உன் சித்தப்பன்டா. எங்க புள்ளங்களுக்கு இந்த ஜமீன்ல உரிமை உண்டுடா”. என்று கூறியபடி இருதடியன்களைத் தங்கள் மகன்களென கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

தனக்குப் பிறந்த மகன் வாரிசாக உயிரோடு இருக்கிறான் என்று எப்படிச் சொல்வது என்ற தெரியாமல் திணறினான். ஷண்முகம் தனதருமை மகன் மகேஷின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்று பயந்தார்.

ஒருபுறம் மனைவியின் நச்சரிப்பு, இன்னொரு புறம் பங்காளிகள் நெருக்கம் என்று நிலைமை நெருக்கிய போது உடல் நலம் குன்றினாள். தனக்கு எந்த நேரத்திலும் மரணம் சம்பவிக்கலாம் என்று புரிந்துக் கொண்டார்.

கொஞ்சம் நகைகள், பணம் என்று ஒரு பெட்டியில் வைத்து கடிதம் ஒன்றையும் எழுதி நாராயண ஸ்வாமி வசம் ஒப்படைத்து விட்டார்.

“என் மகளிடம் இதை எல்லாம் சேர்க்க வேண்டும்“ என்று ஒப்படைத்து விட்டு இறந்து போனார்.

“இது தான் தம்பி மகேஷ் நடந்தது. மனசுலேயே ஜமீன்தாரைச் சுமந்து வாழ்ந்தவ பாலாம்மா. ஜமீன்தாரை உயிராக நேசித்து வாழ்ந்தவள் உன் தாயார் சங்கரி நாச்சி இருவருமே உனக்கு தெய்வங்களாகத் துணை இருப்பார்கள். ஜமீன் பொறுப்பை ஏத்துக்க” என்றார் நாராயண ஸ்வாமி.

மூவரும் திக்கு பிரமை பிடித்து உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். குருவி தலையில் பனங்காயைச் சுமத்தினாள் போல பெரிய பொறுப்பு. இத்தகைய சங்கடங்கள் நிறைந்த மகிழ மலையில் தான் போய் பொறுப்பை ஏற்க முடியுமா? ஜமீன்தார் அவனுக்குரிய ஏற்பாடு பண்ணி வைத்திருந்தார். என்றாலும் பங்காளிகள் அவனை திடீரென முளைத்த எதிரியாகத்தானே பார்ப்பார்கள்? அவன் நெஞ்சில் திகில் கூடாரமிட்டது.

“ஐயா, நீங்கள் என் அப்பாவுக்குப் பாதுகாவலராக இருந்தீர்கள். இன்னும் கொஞ்ச நாள் எனக்கும் துணையாக இருக்கக் கூடாதா?” என்று கேட்டான் மகேஷ்.

“இவ்வளவு காலம் என் குடும்பம், உற்றார் உறவுனு மறந்துட்டு மகிழ மலைக்கே உழைச்சேன். உன்னை நினைச்சா எனக்குக் கவலையாத்தான் இருக்குது. என்னுடைய உடம்பு தளர்ந்து போச்சு. என் மனைவியும் போய்ச் சேர்ந்தட்டா. பேரன், பேத்திகள், மகள்னு அவங்க கூட இருக்க வேண்டாமா?” என்று குழைந்த குரலில் கேட்டார்.

அவர் மகிழ மலைக்குப் போகும் வழியைக் குறித்துக் கொடுத்தார்.

“இத பார் மகேஷ், பாலாம்மாவின் காரியங்கள் முடிஞ்சதும், அடுத்த முகூர்த்தத்துல மஞ்சுவைக் கல்யாணம் கட்டிக்க. ரெண்டு பேருமா மகிழ மலைக்குப் போங்க. அங்கே காரியஸ்தர் கனக சபை இருப்பாரு. அவர்கிட்ட விவரங்கள் பூரா சொல்லி இருக்கேன். ஜாக்கிரதையா நடந்துக்குங்க” என்றார்.

பிரியமனமின்றி மூவரும் கிளம்பினார்கள்.

அடுத்து வந்த தினங்களில் மளமளவென பாலாம்மாவின் காரியங்கள் நடந்தேறியது. பாலாம்மாவின் அன்பும், ஜமீன்தார் மேல் அவள் வைத்திருந்த அன்பும் மகேஷை நெகிழ வைத்தது. தன்னை வளர்த்தவள் கன்னி தெய்வம் என்று மனத்துக்குள் வணங்கினான்.

மகிழ மலைக்குப் போக வேண்டுமா...

அந்த ஆபத்தை வாங்கிக் கொள்ள வேண்டுமா! என்ற சஞ்சலம் ஏற்பட்டது. பாலாம்மாவின் காரியங்களில் கலந்துக் கொள்ள வந்த ஹரிநாத்திடம் எதையும் மறைக்காமல் மனம் திறந்து பேசினார்கள்.

அவர் ஆச்சர்யப்பட்டுப் போனார். "கதைகளில் சினிமாக்களில் வருவதைப் போலல்லவா இருக்கிறது? என்ன செய்யப் போகிறாய்!" என்று கேட்டார் அந்த நல்ல நண்பர்.

"அதான் புரியல்ல" என்று கண்களில் கலக்கம் காட்டினான் மகேஷ்.

"உனக்குரிய சொத்து அது மகேஷ். வீட்டைக் காக்கிறவன்தான் நாட்டையும் காப்பான்னு சொல்லுவாங்க. உன் பரம்பரைச் சொத்து. நீ ஜமீன்தார் பரம்பரை. போ.. போய்... என்ன நிலவரம்னு பார்" என்று ஊக்குவித்தார்.

அரை மனதாகத் தலையை அசைத்தான். அடுத்த வாரத்திலேயே கோயில் ஒன்றில் வைத்து எளிமையாக ஆடம்பரம் இல்லாமல் மஞ்சுவின் கரம் பற்றினான் மகேஷ். அக்கம் பக்கத்தினரும், சேவை நிலையத்தினரும் மட்டுமே அழைக்கப்பட்டனர். வாழ்த்தினார்கள்.

இப்போது இருக்கும் மனநிலையில் அவர்கள் மனத்தில் காதல் திருமண அலைகள் பொங்கி அடிக்கவில்லை. மகிழ மலை விவகாரம் தீர்ந்தபின்பு மகிழ்ச்சியாக வாழ்வைத் தொடங்கலாம் என்றும், அதுவரை நண்பர்களாகவே பழகுவோம் என்றும் தங்களுக்குள் ஒரு தீர்மானத்தை மேற்கொண்டார்கள்.

மகிழ மலைக்குப் புறப்படும் அவர்களுக்கு ஹரிநாாத் ஒரு யோசனையைக் கூறினார்.

"மகேஷ், நீ வாரிசுனு சொல்லிக் கொண்டு மகிழ மலைக்குள் செல்வது அவ்வளவு நல்லதல்ல. அங்குள்ள கோயில்கள், மலை வளங்கள், மூலிகை வனங்கள், இயற்கைச் சூழ்நிலைகளை ஆராய்ச்சி செய்யும் மாணவர்களாகவே நுழையுங்கள் என்று சொல்லிக் கொடுத்தார்.

நாராயண ஸ்வாமியும் "மகேஷூம் மஞ்சுவும் வருவார்கள். அவர்கள் ஜமீன்வாரிசு என்று காட்டித் தர வேண்டாம்" என்று காரியஸ்தர் வீராச்சாமிக்கு போனில் எச்சரித்திருந்தார். மகேஷின் பெயரில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் எல்லாம் காரியஸ்தர் வசமே பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன.

காரியஸ்தரின் தந்தையும் ஜமீனிலேயே பெரிய ஜமீன்தாரும் சரி, ஷண்முக சுந்தரமும். அந்த வகையில் காரியஸ்தர் வீராச்சாமி ஜமீன் பொறுப்பை வாரிசுவிடம் ஒப்படைக்க காத்துக் கொண்டிருந்தார்.

மகேஷூம், மஞ்சுவும் நல்ல நாளில் கிளம்பினார்கள். பகல் ரயிலில் கிளம்பினார்கள். தமிழக எல்லை தாண்டி ஆந்திராவின் தொடக்கத்தில் ஒரு சின்ன ரயில் நிலையம். தமிழக எல்லை தாண்டியதுமே வேறு ஒரு ரயில் மாறிச் செல்ல வேண்டும். அது இரவு 7-30 மணிக்கு மகிழ மலைக்குச் செல்லவிருக்கும் ரயில் நிலையத்தில் ஐந்து நிமிடங்கள் நிற்கும்.

இவர்கள் செல்லும் பொழுது மழை நசநசவென்று தூறிக் கொண்டிருந்தது. ஆந்திரா செல்லும் ரயில் ஏறிவிட்டனர். முன் பதிவு இல்லாததினால் சிறிது கூட்டம் இருந்தது. இடம் பிடித்து உட்கார்ந்துக் கொண்டனர். துணிமணிகள் அடங்கிய இரு தோள் பைகள் மட்டுமே. ஆனால் ஆறு மணிக்கு ரயில் நின்று விட்டது. காரணம் தண்டவாளம் ஏதோ காரணத்தால் ரிப்பேராகி விட்டிருந்தது.

தண்டவாளம் சரி பண்ணி வண்டி கிளம்பி இவர்கள் இறங்க வேண்டிய ரயில் நிலையததில் இறங்கும் பொழுதே மணி பதினொன்றரை. இரவு சாப்பாட்டிற்கு என்று இருவரும் தயாராக கையில் எடுத்துக் கொண்டிருந்தனர். வழியில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு விட்டனர்.

மழைச் சாரலுடன் குளிரும் சேர்ந்து அணைத்துக் கொண்ட அந்த சிறிய ரயில் நிலையத்தில் சின்னதாகக் கோடியில் விளக்கு எரிந்துக் கொண்டிருந்தது. இவர்களைத் தவிர யாரும் இறங்கவில்லை. சூடாக ஏதாவது குடித்தால் தேவலாம் போல ஒரு தேவை. அங்கு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இருவரும் தோள் பையை மாட்டிக் கொண்டு வெளியே வரும் வழியைப் பார்த்த பொழுது மஞ்சுவின் நடையைத் தடுப்பது போல யாரோ நகர்வதை உணர்ந்து மகேஷின் தோளைப் பற்றிக் கொண்டாள்.

“என்ன மஞ்சும்மா.. பயமா இருக்குதா!

“இல்ல மகேஷ், யாரோ குறுக்கே போன மாதிரி இருந்துச்சு”

“எனக்குத் தெரியல்ல. அடைபட்டுகிட்டு பயணப்பட்டதினாலே இருக்கலாம்.” என்றான் மகேஷ்.

ரயிலை அனுப்பிய ஸ்டேஷன் மாஸ்டர் அவர்களிடம் வந்து

நின்றார்.

“எங்கே போகணும்?”

“மகிழ மலைக்குப் போகணும்“

“இந்த நேரத்திலேயா? மகிழம் பூக்கள் வாசனை அபாரமா இருக்கும். இரண்டு மைல் தூரத்திற்கு காட்டுப் பாதை விலங்குகள் பயம் இல்லை.” என்று தனக்குத் தானே யோசித்தாள்.

அவருடன் வெளியே வந்த பொழுது கம்பளி போர்த்திய ஒரு மனிதன் வெளியே வண்டியுடன் நின்றான். அந்த வண்டியில் ஸ்டேஷன் மாஸ்டர் “உங்க அதிர்ஷ்டம் தான் என்று ஏற்றிவிட்டார்.

## 16

வண்டிக்காரன் தலையிலிருந்து கால்வரை போர்த்திக் கொண்டிருந்தான். முககத்திலும் தாடி, மீசை காடாக மண்டிக் கிடந்தது. ஸ்டேஷன் மாஸ்டருக்கே அவளை அடையாளம் தெரியவில்லை.

“நீ ஊருக்குப் புதுசா”

“ஆமாங்க” குரல் கடினமாக இருந்தது.

“மகிழ மலை எங்கிருக்குதுன்னு தெரியுமா?”

“எனக்குத் தெரியாதது என்ன இருக்குது? நடப்பேன், பறப்பேன், ஓடுவேன், தாண்டுவேன் என்றான் அவன்.

“சரி சரி... சின்னப் புள்ளங்களா இருக்காங்க. ஏம்பா மகிழ மலையில எங்கே போணும்?” என்று மகேஷிடம் கேட்டார் ஸ்டேஷன் மாஸ்டர்.

“ஜமீன் மாளிகைக்கு”

அதிர்ந்து போனார் ஸ்டேஷன் மாஸ்டர்

“ஜமீன்தார் நல்லவர். இறந்துட்டாரே” என்று தலையைக் கோதிக் கொண்டார்.

“அதுவும் தெரியும்“

“பத்திரமா போயிட்டு வாங்க”

இருவரும் வண்டியில் ஏற. வண்டி கிளம்பியது. காற்று மரங்களைத்

தழுவி விர்விர்ரென்று அடித்தது. பசுமை வாசம். மழைத் துளிகள் படிந்த மண் வாசம். மஞ்சு மூக்கை உறிஞ்சினாள்.

“இந்த வாசனைகளை மூக்கை உறிஞ்சி ஸ்டோர் பண்ணிக்கிறியா?” என்று கிண்டல் அடித்தான் மகேஷ்.

“இல்ல மகேஷ்... ---- எங்கேயே வெடிச்சிருக்கு. வாசனை வருது பார்” என்ற சொல்ல வண்டிக்காரன் கலகலவென்று சிரித்தான்.

இயல்பான சிரிப்புதான் என்றாலும் அவர்களுக்கு அந்த இரவின் சூழ்நிலையில் அமானுஷ்யமான பயத்தைக் கொடுத்தது. வானம் கருத்துக் கிடக்க, மரங்களின் அடர்வில் வழியும் இருட்டு நேரம் மனத்தில் பயம் ஏற்பட்டது. ரயில் நிலையத்திலேயே பொழுதைக் கழித்திருக்கலாமோ என்ற பயம் ஏற்பட்டது.

“தாயி, உனக்கு என்ன வாசனை பிடிக்கும் சொல்லு” என்று வண்டிக்காரன் கர்ண கொடூரக் குரலில் கேட்க, மஞ்சு, “மல்லிகை” என்றாள்.

வண்டி சிறிது தூரம் செல்ல குபீரென்று மல்லிகை வாசனை மூக்கைத் துளைத்தது. “மல்லிகை வாசனை... என்னய்யா ஆச்சர்யமா இருக்குது?

“இந்த மலை அதிசயங்கள் பல கண்ட மலை. மகிழ மலைனு ஏன் பேர்? மகிழ மரங்கள் நிறைய இருக்குறதுனாலே...

“அப்ப எப்படி மல்லிகை வாசம் வந்தது”

“மகிமை வாய்ந்த மலை இது. உனக்கு என்ன பழம் பிடிக்கும்?”

“மாம்பழம்“

வண்டிக்காரன் இதழ் பிரியாமல் சிரித்தான். வண்டி சிறிது தூரம் சென்றதும் “பழுத்த மாம்பழ வாசனை. “வாசனை வருதுய்யா”

இப்பொழுதும் சிரித்தான் வண்டிக்காரன் பேச்சு சுவாரஸ்யத்தில் பயத்தை மறந்தாள் மஞ்சு. காற்றின் சுகத்தில் மெல்லக் கண்ணயர்ந்தாள் மகேஷ். அப்படி ஓர் அலுப்பு. ஆனால் காற்றின் ஓசையில் “என் குழந்தை” “என் குழந்தை” என்ற சொற்கள் காதுகளை குடைந்து நுழைந்தது.

திடுக்கிட்டு கண் விழித்தான். தன் ஜமீன்தார் அப்பாவின் காதுகளில் விழுந்த வார்த்தை. மனசு டமாரம் தட்டியது. தன்னைப் பெற்ற சங்கரி நாச்சி அம்மாவின் குரலா? என்னை அவள் அமானுஷ்யமான

நிலையிலும் அடையாளம் கண்டிருப்பாளா?

வண்டி திடுக்கென்று நின்றது. எதிரே பிரம்மாண்டமாய் மூடிக்கிடந்த கதவு.

"இறங்குங்க"

இருவரும் இறங்கினர். கதவை யார் திறப்பார்கள்? போய் தட்டிப் பார்த்தார்கள். திறக்கவில்லை. தள்ளிப் பார்த்தார்கள் முடியவில்லை.

"திறக்க முடியலய்யா?" என்ற வண்டிக்காரன் போர்வை போர்த்திய தோள்களால் கதவைத் தள்ள கதவு விரியத் திறந்தது. அதனுள் கோபுரம் போல தலை நிமிர்ந்து நின்ற மாளிகையைக் கண்டு திகைத்தார்கள்.

சட்டென்று திகைப்பிலிருந்து மீண்ட மஞ்சு "மகேஷ், வண்டிக்காரருக்கு வாடகையைத் தரல்லையே?" என்று சொல்லி இருவரும் திரும்ப வண்டியோ, வண்டிக்காரரையோ காணவில்லை. இருவரும் கற்சிலைகள் போல் நின்றார்கள்.

கதவு கீரிச்சிட்ட சப்தம் கேட்டு மாளிகையின் காவற்காரன் ஓடிவந்தான். மஞ்சு, மகேஷைப் பார்த்து அசந்து போனான்.

"கதவு பூட்டிருக்க எப்படி உள்ளார வந்தீங்க?" என்று கேட்டான் காவற்காரன்.

"ஐயா, கதவைத் தட்டினோம். திறக்கல்ல. எங்களை ஏத்திக்கிட்டு வந்த வண்டிக்காரன் தோளால் தள்ள கதவு திறந்துக் கொண்டது. வண்டிக்கு கூலி தர திரும்பினால் வண்டி, வண்டிக்காரன் ரெண்டு பேரையும் காணல்ல. அதான் திகைச்சு பார்த்துட்டு நிக்கிறோம்.

மாளிகை காவல்காரன் கண்கிளில் சந்தேகம் நிழலாடியது. தலையோடு கால்வரை பார்த்தான். பூட்டிய கதவைத் தள்ளிக் கொண்டு வரும் இவர்கள் மனிதர்களாக! நிச்சயம் இல்லை என்றே அவனுள் பயம் முறையிட்டது. விழிகள் குந்திட்டு விழித்தான்.

"ஐயா, நாங்கள் சென்னையிலிருந்து வரோம். வீராச்சாமி ஐயாவைப் பார்க்கணும்" என்றான் மகேஷ். நிலைமையை புரிந்துக் கொண்டு பயந்துக் கொண்டே அவர்களை மாளிகையின் வாசல்புறம் அழைத்துக் கொண்டு போனான். தனியே நிற்கப் பயந்து வீராச்சாமி ஐயாவை அழைத்து வர உள்ளே ஓடினான். பத்து நிமிடத்தில் அழைத்ததும் வந்து விட்டான். சினிமாவில் வரும் காரியஸ்தரைப் போலத்தான் வீராச்சாமியும் இருந்தார்.

*தூக்கக் கலக்கத்துடன் புருவத்தைத் தூக்கி யாரென்று விசாரிப்பது போல கண்களை மலர்த்தினார்.*

*"ஐயா... ஐயா.... வாங்க வாங்க. வரப் போறதா தகவல் சொல்லி இருந்தா ரயிலடிக்கு வண்டி அனுப்பி இருப்பேனே...." என்று மரியாதை கலந்த குரலில் பரபரத்தார்.*

*வாசற் காவலர்க்கும் வந்தவர் மரியாதைக்குரியவர் என்று புரிந்தது.*

*"ஐயா, நான் போகட்டுமா?" என்று வீராச்சாமியிடம் உத்தரவு பெற்றவன், மகேஷைப் பார்த்துக் கொண்டே வெளியேறினான்.*

*மூவரும் உள்ளே போனார்கள்.*

*"ஐயா... ஒரு நிமிஷம் என்று வீராச்சாமியை நிறுத்திய மகேஷ்" ஐயா இப்பவே நான் யாருனு சொல்ல வேணாம். மலைகளையும் கோயில்களையும்,மூலிகைகளையும் ஆராய்ச்சி பண்ண வந்திருக்கேன்னு சொல்லிடுங்க" என்று சிறு எச்சரிக்கையை உதிர்த்தான்.*

*மகிழ மலை மாளிகையைச் சுற்றியுள்ள ஆபத்துக்களை உணர்ந்த வீராச்சாமிக்கும் அது சரியென்று பட்டது.*

*"சரி, உள்ளார வாங்க. நேரம் நள்ளிரவைத் தாண்டப் போகுது. படுத்துத் தூங்குங்க.. அலுப்பா இருக்கும்" என்று ஓர் அறைக்குக் கூட்டிக் கொண்டு போனார்.*

*சகல வசதிகளுடன் இருந்தது. பெரிய கட்டில், மெத்தை, நிலைக் கண்ணாடிகள், அழஅழகான கவர் படங்கள்... இருவரும் பைகளை வைத்து விட்டு ஆச்சர்யத்துடன் பார்த்தனர். அதற்குள் உள்ளே போன வீராச்சாமி ஒரு பெரிய செம்பு நிறைய பாலுடன் வந்தார்.*

*"இந்த நேரத்துல சூடா பால் தர்றீங்க?" என்று மகேஷ் உபசாரமாக சொன்னான்.*

*"மலை பிரதேசம். குளிர் அதிகம். ஜமீன்ல மாடுகளை காலையில அஞ்சு மணிக்குத் தான் கறப்பாங்க. ஜமீன்தார் ஐயா சரியாத் தூங்க மாட்டாரு. திடீர்னு பால், காப்பினு கேப்பாரு. எப்பவும் கணப்புல பால் இருக்கும். அந்தப் பழக்கம் இப்பவும் இருக்குது தம்பி" என்றார்.*

*"குளிருக்குத் தேவைதான்" என்றான் மகேஷ்.*

*"அதோ குளியலறை. ஒரு குழாய்ல வெந்நீர் வரும். காலையில சந்திப்போம்" என்றபடி கதவைச் சாத்திக் கொண்டு வீராச்சாமி நகர்ந்தார்.*

குளியலறைக்குப் போய்விட்டு அவர்கள் சூடான பாலைக் குடித்தார்கள். லுங்கி ஒன்றை எடுத்துக் கட்டிக் கொண்டான் மகேஷ். மஞ்சு தன் பையைத் திறந்தவள் “மகேஷ் இங்கே வந்து பாருங்க என்று ஆச்சர்யத்துடன் கத்தினாள்.

“மலைப் பிரதேசம். பாம்பு ஏதாவது பைல குடி புகுந்துடுச்சா என்ன?” என்றபடி அவளருகில் வந்தான்.

திறந்திருந்த பையில் குண்டு குண்டா நான்கு மாம்பழங்கள், ஒரு பந்து மல்லிகைச் சரம்.. ஒரு பொட்டலத்தில் பெரிசு பெரிசா ஏழெட்டு பலாச்சுளைகள்...

மகேஷின் முகத்தில் சந்தேக முடிச்சுகள்... “இது எப்படி மஞ்சு வந்திருக்கும். ரயில்ல யாராவது வச்சிருப்பாங்களோ!”

“பையை பக்கத்துலேயே வச்சுக்கிட்டு இருந்தேன். யாரும் பையைத் தொட சான்ஸே இல்ல” என்றாள் மஞ்சு.

“பின்னே எப்படி?” நெற்றியைத் தடவினால் சட்டென்று நினைவு வந்தவளாக வண்டிக்காரருக்கும்,. தனக்கும் நடந்த உரையாடல்களையும், ஆச்சர்யமாய் வந்த வாசனைகளையும் சொன்னாள்.

“நீங்க கொஞ்சம் கண்ணசந்துட்டீங்க மகேஷ்” என்று அவள் சொல்லும் பொழுது அவனுக்கும் அது நினைவுக்கு வந்தது.

“எனக்கும் ஓர் அனுபவம் ஏற்பட்டுச்சு” கண்கள் விரிய “என்ன அனுபவம்?” என்று கேட்டாள் மஞ்சு.

ஜமீன்தார் அப்பாவுக்கு, “என் குழந்தை, என் குழந்தை” என்று சொற்கள் மோதின மாதிரி எனக்கும் கேட்டது. சட்டுனு தூக்கம் கலைஞ்சு எந்திரிச்சேன். ஜமீன் மாளிகை வந்திடுச்சு. வண்டிக்காரர் பூட்டியிருக்கற கதவைத் தள்ளினதும், காணாம போனதும் ஆச்சர்யமாகவே இருக்கு மஞ்சு, இப்ப பழம், பூன்னு ஆச்சர்யத்துக்கு மேல ஆச்சர்யம்.”

“ஆமாம் மகேஷ், இங்கே ஏதோ ஒரு சக்தி இருக்குது. ரயிலேர்ந்து இறங்கினதும் பிளாட் பாரத்துல என்னை யாரோ மோதித் தள்ளின மாதிரி இருந்துச்சுனு சொன்னேன் இல்ல”

“நமக்கு இதுவரை உதவி இருக்கறதைப் பார்த்தா அது நல்ல சக்தியாத்தான் தோணுது”

“அதையே எச்சரிக்ஙகையாகவும் எடுத்துக்கலாம் இல்லையா?”

“சரி கத்தியை எடுத்து பழத்தை நறுக்கு”

அக்கா மந்தாகினி அவர்கள் பையில் டார்ச், கத்தி, மெழுகுவர்த்தி, தீபெட்டி என்றும் பார்த்துப் பார்த்து எடுத்து வைத்திருந்தாள். நிறைய பிளாஸ்டிக் கவர்கள், சின்னச்சின்ன துண்டுகள், கை கழுவ சோப்புத் துண்டுகள் என்று வைத்திருந்தார்கள். பாலும் பழமும் வயிற்றை நிரப்ப சுகமாகத் தூக்கம் வந்தது.

இருவரும் கட்டிலில் படுத்துக் கொண்டார்கள். இப்படியெல்லாம் அலைந்திராத மஞ்சுபடுத்ததுமே உறங்கிப் போனாள்.

மகேஷ் ஏதோ யோசித்துக் கொண்டே படுத்திருந்தவனின் மேல் மெல்லிய ஸ்பரிசம் தட்டுதலாக விழ அம்மாவா இருக்குமோ என்ற எண்ணத்துடன் அப்படியே உறங்கிப் போனான்.

## 17

அருமையான தூக்கம். ஆறு மணிக்கே மஞ்சுவும் மகேஷூம் எழுந்து விட்டனர். வீராச்சாமி பணிப்பெண் காப்பியை ஏந்தியவளாக வர, முன்னே வந்தார். பல் துலக்கி, முகம் கழுவிக் கொண்டு வந்த மகேஷூம், மஞ்சுவும் காப்பியைக் குடித்தனர்.

“தம்பி, காப்பியைக் குடிச்சுட்டு குளியுங்க. ஜமீன்தாரிணி அம்மாவைப் பார்க்கலாம்“ என்றவர் மூக்கை உறிஞ்சினார். “தம்பி, மாம்பழ, பலாப்பல வாசனை தூக்குதே. மாளிகைக்குள்ள பழங்கள், அதுவும் மாவும், பலாவும் இல்லையே வெளித் தோட்டத்துல இல்ல இருக்குது?” என்றார்.

மஞ்சு ஒரு பழத்தை எடுத்து அவர் கையில் கொடுத்தாள்.

“சாப்பிடுங்கய்யா” என்றபடி கூடவே இரண்டு பலாச் சுளைகளையும் கொடுத்தாள்.

“ஊர்லேர்ந்து கொண்டு வந்தீங்களா?”

“இல்லீங்கய்யா” என்றவன் வர வழியில் நடந்தவற்றைக் கூறினான்.

வீராச்சாமி அதிசயமாக அவன் சொன்னவற்றைக் கேட்க் கொண்டார். சுற்றும் முற்றும் பார்த்தார். யாரும் இல்லை என்பதைப் புரிந்துக் கொண்டாலும் சந்தேகம் மனத்தை ஆட்கொண்டது. அருகில் நெருங்கி வந்தார்.

"நீங்க வருங்கால ஜமீன்தார். அது எனக்கு மட்டுமே தெரியும். வெளியில சொல்ல முடியாத இரகசியம். அதனாலதான் தம்பினு கூப்பிடறேன். ஜமீன் சுவருக்கும் கண், காது உண்டு. ஜமீன்தாரிணியம்மா லேசுபட்டவங்க இல்ல. ஜமீன்தாரிணி அம்மா ஜமீனை தன் அண்ணன் பையன் சீலன் பேர்ல வாரிசா எழுதப் பார்க்கறாங்க. ஜமீன்தார் உங்க பேருக்கு ஜமீனை எழுதி வச்சது தெரியாது. பத்திரங்களை நான் மறைச்சு வச்சிருக்கேன். சீலன் பொல்லாதவன் பார்த்துப் பக்குவமா நடந்துக்குங்க" என்றார்.

அவர் பேசியது மஞ்சுக்கே கேட்கவில்லை என்றால் அவ்வளவு மெதுவாகப் பேசி இருக்க வேண்டும்? மகேஷ். கைகளைப் பற்றிக் கொண்டான். "நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கண்களாலேயே பதில் சொன்னான்.

"தம்பி, இந்த மலையில அமானுஷ்ய சக்திகள் நிறைய இருக்கு. மூத்த ஜமீன்தாரிணி காலம் சென்ற சங்கரி நாச்சியோட ஆவியே இங்கே உலாவிக்கிட்டு இருக்குது தம்பி"

"அது எப்படி உங்களுக்குத் தெரியும் ஐயா?"

"ஜமீன்தார் ஐயா சொல்லி இருக்காரு. நாராயண ஸ்வாமி ஐயாவும், நானும் தான் ஜமீன்தார் நம்பிக்கைக்கு உகந்தவங்க. ஜமீன்தார் ஐயா இறக்கறப்ப நாராயண ஸ்வாமி ஐயாவுக்கு எழுதிக் கொடுத்த மாதிரி எனக்கும் நிறையவே எழுதிக் வச்சிருக்காரு. மனசை விட்டுப் பேசுவாரு. என் உடம்புல மூச்சு இருக்கற வரைக்கும் உங்களை விட்டுப் போகமாட்டேன். எனக்கு புள்ள குட்டி கிடையாது. நானும் என் சம்சாரம் மட்டும் தான். சம்சாரம் இங்கேதான் இருக்குது"

இதைக் கேட்டதும் மகேஷின் கண்களில் நீர் கசிந்தது.

"தம்பி, அழறீங்களா?"

"என் அம்மாவைப் பத்தி சொன்னீங்க இல்லையா? ராத்திரி என்னை ஏதோ மெல்லிய ஸ்பரிசம் தடவிக் கொடுத்த மாதிரி இருந்துச்சு. பாலாம்மா ஸ்பரிசத்தை நான் அறிவேன் இது அது மாதிரி இல்ல"

"தம்பி நீங்க வந்ததை சங்கரி நாச்சி புரிஞ்சிக்கிட்டாங்க. இனிமே அவங்க துணை இருப்பாங்க., இன்னொரு விஷயம். இது அமானுஷ்ய மலை மட்டும் இல்ல. சித்தர்கள் வாழற மலை. நம்ம மலைக்கு பக்கத்துல பெரிய சிவன் கோயில் இருக்குது. கொஞ்ச காலமா பாழடைஞ்சு கிடக்கு. இப்ப உங்களுக்கு ஒரு சித்தர்தான் உதவி புரிஞ்

சிருக்கார்னு என்னோட முடிவு. இனி பயமில்ல”

“சரி ஐயா. குளிச்சிட்டு ஜமீன்தாரிணி அம்மாவைப் பார்க்க வரோம்“ என்றான் மகேஷ்.

அடுத்த அரைமணி நேரத்தில் மகேஷும் மஞ்சுவும் குளித்துத் தயாராகி வெளியே வந்தனர். பெரிய கூடத்தைக் கடந்து வெளியே மாளிகை முகப்பிற்கு வந்தனர். மணி எட்டாகியும் சூரியன் மகிழ மலைக்குள் நுழையவில்லை. படி இறங்கிய மகேஷ் கிழக்கு முகமாக நின்று சூரிய பகவானைத் தொழுதான்.

“பாலாம்மாவோட பழக்கம்“ என்றான் மகேஷ்.

மலைப் பிரதேசத்தைப் பார்த்துப் பிரமித்தனர் இருவரும்.

“இங்கேயா இருக்கீங்க?” என்றபடியே வந்தார் வீராச்சாமி.

“நேத்து ராத்திரி எங்களை பயப்படுத்திய மலை இன்னிக்கு எத்தனை ரம்மியமா காட்சி தருதுனு வியப்பா இருக்குது. ரசிச்சிக்கிட்டு இருக்கோம்“ என்றான் மகேஷ்.

“ஐயா, காலையில எழுந்ததும் ஸ்வாமி கும்பிடறது வழக்கம். பூஜை அறை எங்கே இருக்குது? மல்லிகைப் போட்டு கும்பிடணும்“ என்றார் மஞ்சு.

“வாங்க காட்றேன்” என்ற அவரைத் தொடர்ந்த பொழுது” மஞ்சும்மா, பூ பந்து எங்கே? என்று கேட்டான் மகேஷ்.

“ஐயா, இருங்க, பூவை எடுத்துட்டு வந்துர்றேன்” என்று அறைக்குள் போனான்.

பூவை எடுத்துத் திரும்பிய பொழுது படுக்கையிலிருந்து யாரோ நிழலாக நகர்வது போலத் தோன்றியது. அம்மாவாகத்தான் இருக்கணும். மனசு சொல்ல கொஞ்சம் பூச்சரத்தைக் கிள்ளி தன் படுக்கையில் போட்டு விட்டே போனான். காத்திருந்த அவர்களுடன் பூஜையறைக்குப் போய் சேர்ந்துக் கொண்டான்.

“மஞ்சு, உன் கையால விளக்கேத்தும்மா” என்று வீராச்சாமி இரகசியமாய் முனகினார்.

மஞ்சு விளக்கேற்றி பூச்சரங்களைப் படங்களுக்குப் போட முனைந்த பொழுது ஓரத்தில் இருந்த படத்தைப் பார்த்துக் கண்கள் விரிந்தன. வீராச்சாமியை நோக்கிப் பார்வையைத் திருப்பினாள்.

“ஐயா, இந்தப் படம்“ என்று இழுத்தாள்.

“இவரு, சென்னைக்கு அருகே ஒரு கிராமத்துல வாழ்ந்த சித்தரு. இவரோட சிஷ்யரோட வாக்குல குடி இருந்து அருள் வாக்கை பொழியறார். பெரிய ஜாமீன்தாரிணி சங்கரி நாச்சியோட ஆவி இந்த மாளிகையைச் சுற்றி வந்த பொழுது இந்த சின்ன குரு ஸ்வாமிதான் ஹோமங்களைப் பண்ணி அடக்கி வச்சார். ஜமீன்தார் கண்களுக்கு மட்டுமே அந்த ஆவி தெரியும். அதைக் கட்டுப்படுத்த முடியாதனும் சொல்ல இருக்காரு என்று முணுமுணுத்த குரலில் விவரித்தார்.

“ஐயா, இப்ப எங்கம்மா பெரிய ஜமீன்தாரிணியின் ஆவி வெளியே சுத்த ஆரம்பிச்சுடுச்சுனு தெரியுது”

“எப்படி தம்பி?”

“நேத்து ராத்திரி வண்டியில வரப்பவே எங்காதுல என் குழந்தைனு காத்தோட மிதந்து கேட்டது. எங்கப்பா காதுலேயும் கேட்டதா நாராயண ஸ்வாமி ஐயா சொன்னாங்க. ராத்திரி என் உடம்பைப் புடிச்சு தூங்க வச்சதும் அவங்க தான். இப்ப பூசை எடுக்க அறைக்குப் போன பொழுது ஓர் அமானுஷ்ய உருவம் கட்டில்லேர்ந்து எழுந்து போன உணர்வு எனக்கு ஏற்பட்டுச்சு ஐயா”

பேசுவதிறியாமல் மௌனித்து நின்றார் வீராச்சாமி.

“ஐயா, இதே மாதிரி படம் ஒண்ணும் என் வீட்ல இருக்குது. பக்கத்து வீட்டு தாத்தா ஒருத்தன் கொடுத்த படம்னு எங்கம்மா கும்பிட்டு வந்தாஙக. இப்ப நாங்க கும்பிடறோம்“

“அவருதான் உங்களைத் காப்பாத்தறார்” என்றார் வீராச்சாமி கண்கள் பணிக்க.

மகேஷ், மஞ்சு இருவரின் மனத்திலும் நிரம்பி வழிந்தது. நிம்மதியா, துணிவா என்று சொல்ல முடியாத அளவுக்கு இருந்தது.

வீராச்சாமியைத் தொடர்ந்து உணவு உண்ணும் பெரிய உருவமாக உட்கார்ந்திருந்தாள்.

“வணக்கம்மா” என்ற வீராச்சாமியின் வணக்கத்தை தலையாட்டியபடி பெற்றுக் கொண்ட சாந்த லட்சுமி, இவர்கள் யார் என்பது போல் புருவம் வளைத்துக் கேட்டார்.

“இவங்க சென்னையிலேர்ந்து வந்திருக்காங்க. நம்ம நாராயண ஸ்வாமி அய்யாவின் சொந்தக்காரங்க. நம்ம மலை வளம், கோயில்னு

ஆராய்ச்சி பண்ண வந்திருக்காங்க. கொஞ்ச நாள் இங்கே தங்குவாங்க" என்று பணிவாகவே கூறினார்.

ஜமீன்தாரிணி அம்மாவின் முகத்தில் கடுமை கூடியது.

"எங்கிட்ட முன்னாடியே உத்திரவு வாங்க வேண்டமா?"

"நம்ம நாராயண ஸ்வாமி அய்யாவோட சொந்தக்காரங்க தானேனு ஒத்துக்கிட்டேன். இவங்க வராங்கனு நேத்து தான் போன் வந்துச்சு. அவரு கனடாலேர்ந்து போன் பண்ணினாரு. போன் ராத்திரி வந்துச்சா. அம்மா கிட்ட கேக்கலாம்னு வந்தேன். தூங்கப் போயிட்டீங்க. வண்டி கூட அனுப்பல" என்று குழைந்து தலையைச் சொரிந்தார் வீராச்சாமி.

மூச்சை உள்ளிழுத்து வெளியே தள்ளிய சாந்த லட்சுமி. "பத்திரம், இப்ப ஜமீன் நிலவரம் சரியா இல்ல" என்றவள், மகேஷ் பக்கம் திரும்பி "தம்பி, உன் பேர் என்ன?" என்றாள்.

"என் பெயர் மகேஷ். இவ மஞ்சு. என் மனைவிதான்" என்றாள்.

"சின்ன பசங்களா இருக்கீங்க. இந்த ஜமீன் கௌரவத்துக்கு பங்கம் வராம நடந்துக்கணும். பெரிய சிவன் கோயில் இருக்கு. சுத்திப் பாருங்க. இப்ப உட்கார்ந்து சாப்பிடுங்க" என்றாள்.

இருவரும் நாற்காலியில் அமர்ந்தார்கள். பணியாள் தட்டை வைக்க, நடையதிர வந்தான் சீலன், ஜமீன்தார் சாந்த லட்சுமியின் அண்ணன் மகன். அவன் கண்களில் அனல் தெறித்தது.

"அத்தை யார் இவங்க"

சாந்த லட்சுமியின் பார்வையிலும் அலட்சியம் தொனித்தது.

"நாராயணசாமி ஐயாவோட உறவுக்காரங்க, கோயில், மூலிகைனு ஆராய்ச்சி பண்ண நம்ம மகிழ மலையைத் தேர்ந்தெடுத்திருக்காங்க. அவருதான் அனுப்பி வச்சிருக்கார். கண்களின் அலட்சியம் குரலிலும் தொனித்தது.

மகேஷின் இளரத்தம் கொதித்தது. ஜமீன் மண்ணை மிதித்ததுமே அவனுடைய சாந்த குணம் மறைந்து ரத்தம் சூடேறியது. இது என்னுடைய மண். என்னுடைய பூமி. என்னுடைய ஜமீன் என்ற வேகம் பிறந்தது.

பொறுமை.. பொறுமை என்ற அறிவு எச்சரித்தது. வெண்ணை திரண்டு வரும் பொழுது தாழி உடையக் கூடாது. கண்களில் கனிவையும் தயவையும் கூட்டிக் கொண்டான். சட்டென்று எழுந்தான்.

"ஐயாம் மகேஷ்.. இவ என் மனைவி மஞ்சு. கோயில்களையும், சித்தர்களையும் மூலிகைகளையும் பற்றி ஆராய்ச்சி பண்ண வந்திருக்கோம். உங்க ஜமீன் பங்களா எங்களுக்கு பாதுகாப்பையும், உதவியையும் செய்யும்னு நாராயணசாமி மாமா சொன்னாரு. வில் யூ ஹெல்ப் மீ... ப்ளீஸ்" என்று கையை நீட்ட, வேறு வழியின்றி சீலன் கைப்பற்றிக் குலுக்கினான்.

வலை வீசியதில் சிக்கிய மான் குட்டியைப் போல் - மகேஷின் கை பற்றிக் குலுக்கினாலும் அவள் மேல் அவன் பார்வை சுற்றிக் கொண்டிருந்தது. வேட்டை நாயின் பாய்ச்சல் கண்களில். இது காம வேட்டை.

"என்ன உதவி வேண்டுமானாலும் செய்றேன்" என்று வாய் முனகியது.

இடியாப்பம், தேங்காய் பால், பொங்கல், சட்டினி, சாம்பார், இட்லி என்று உண்டபின்பு சுண்டக் காய்ச்சிய மசாலாப் பாலைக் குடித்து கை கழுவி விடைபெற்று வெளியே வந்தனர்.

"அத்தை, இவள் எனக்கு வேணும்" என்ற சீலனின் குரல் இவர்கள் போய்விட்டார்கள். என்று எண்ணிப் பேசியது காதில் விழுந்தது.

## 18

சீலனின் காம வேட்டைப் பேச்சு இருவரின் காதுகளிலும் நன்றாகவே விழுந்தது. மகேஷின் கைகளைப் பற்றிக் கொண்டாள் மஞ்சு.

"கவலைப்படாதே நான் இருக்கேன்"

"பயமா இருக்கு மகேஷ்"

அவன் அவள் தோளில் தன் தோளால் இடித்தான். "பயமா? நான் யார் தெரியுமா? இந்த மகிழ மலை ஜமீன்தார் மகேஷ் பூபதி" என்று சன்னமாகச் சிரித்தான்.

"அது யார் பூபதி?"

"நான் தான்"

"ஓவர் நைட்.. யார் வச்சாங்க?

“நானே வச்சிக்கிட்டேன்”

இருவரும் மாளிகை வாசற்படியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தனர்.

“எப்ப பெயர் சூட்டு விழா நடந்துச்சு”

“இன்னிக்குத் தான்.”

அவள் நின்று கையைத் தட்டினாள்.

“அடடா, பக்கத்துல இருக்கற எனக்கு அழைப்பிதழ் கிடையாதா மகேஷ் பூபதி ஜமீன்தார் அவர்களே?” என்று நையாண்டிக் குரலில் கேட்டாள்.

“ஓ... அழைப்பு விடுத்திருந்தால் பரிசு பொருளோடு வந்திருப்பாய் அல்லவா?”

“நிச்சயமாக”

“என்ன பரிசோ?”

“ஒரு தொட்டில், ஸ்நக்கி, ஜட்டி, பாலாடை, பீடிங் பாட்டில், காப்பரிச்“ என்றவள் “வோ... வோ.. அம்மா அடிச்சாளோ, அரளிப்பூ செண்டாலே... பாட்டி அடிச்சாளோ பால் போட்டும் சங்காலே... தாத்தா அடிச்சாளோ... என்றதும் அவன் அவளுடைய கையை இறுகப் பற்றிக் கொண்டான்.

“என்னை அடிக்க இவர்களில் ஒருத்தருமே இல்லையே மஞ்சும்மா” என்று குரல் தழுதழுக்க ஸ்ருதி குறைந்தது.

தன் பேச்சு அவனுடைய மனப்புண்ணை கிளறி விட்டது. புரிஞ் சது. மாளிகையை விட்டு வெளித்தடத்திற்கு வந்து விட்டிருந்தனர்.

“ஐம்.. ஸோ ஸாரி. ஸோ ஸாரி.. மகேஷ்” என்று சொன்னதும், சில்லென்ற மலைக் காற்று வீசி அவர்களைத் தழுவிக் கொண்டு போயிற்று.

அவன் காதுகளில் “என் குழந்தை என் குழந்தை” என்று ஒலி மோதியது.

அது அவனுக்கு இனிய தாலாட்டு. இனிய சங்கீதம். அமுத ஒலி. அவனைப் பெற்றவளின் குரல் அல்லவா! தேன் மதுர மொழி.. கண்களை மூடி அனுபவித்துக் கொண்டு நின்றான்.

“மகேஷ் பூபதி, என்ன நின்னுட்டீங்க?” என்று கிண்டலாகக் கேட்டாள் மஞ்சு.

மேகம் தவழும் மலைச் சிகரங்களும், கண்ணாமூச்சி ஆடும் சூரிய ஒளியும், பனித் துளிகளைத் தாங்கி நிற்கும் இலைகளும், காற்று கொண்டு வந்து மோதும் பசிய நறுமலர் மணங்களும், சில்லென்ற வெதரும் அவள் மனத்தை ஊஞ்சல் கட்டி ஆட வைத்தன.

காதலித்தவனையே மணந்த உல்லாசம் மனத்திற்குள் ஊர்வலம் வந்தது. அதன் பிரதிபலிப்பு அவனிடம் இல்லை. மாறாக முகம் இறுகிக் கிடந்தது.

"வாட் ஹேப்பண்ட் மகேஷ்?"

"காத்துல என் குழந்தைனு அம்மாவோட குரல் கேக்கறது மஞ்சு"

அவள் உல்லாச மனஊர்வலம் மறைந்தது. சூழ்நிலை காதல் பவனி வர ஏற்றதில்லை. அவர்கள் வந்த விஷயமே சீரியஸான விஷயம். அப்படி இருக்க இங்கு காதல் விளையாட்டுக்கு இடம் இல்லை என்பதுடன், துளிக் கூட முன்னேற முடியாத நிலையில் இது சரியில்லையே..

"அம்மா குரல் கேட்டது மஞ்சு" என்று அவன் திரும்பத் திரும்பக் கூறினான்.

"கண்ணைத் திறங்க மகேஷ்"

கண்ணைத் திறந்தபடியே "என்ன" என்று கேட்டான்.

"உங்க அம்மா, என் அருமை அத்தை நம்மைத் தொடர்ந்து வராங்கனு தெரியுது மகேஷ். கிழக்குப் பார்த்துதான் நிக்கறோம். என் ஜமீனை எந்த வில்லங்கமும் இல்லாம எனக்குத் தாங்கம்மானு வேண்டிக்குவோம்" என்று கண்களை இறுக்க மூடிப் பிரார்த்தனை செய்தாள்.

மகேஷும் கண்களை மூடிக் கொண்டு கரைந்தான்.

"அம்மா, அம்மா, நீ தெய்வமாகி விட்டாய். உன்னை நான் பார்த்ததே இல்லை. எனக்கு தெரிஞ்ச அம்மா பாலாம்மா தான். இப்ப தெய்வமாய்ட்டாங்க. அம்மா, அப்பாவையும் நான் பார்த்ததே இல்லை. எனக்காக இவ்வளவு சொத்தையும் விட்டுட்டுப் போயிருக்கார். அத்தோடு மட்டுமல்ல. எதிரிகளை பழி வாங்கணும்னு சொல்லி இருக்கார். அரூபமா, அமானுஷ்யமா இருந்து எனக்கு வழி காட்டம்மா என்று வேண்டிக் கொண்டான்.

கண்ணீர் சரம் சரமாகக் கன்னத்தில் இறங்கியது. அவன்

பிரார்த்தனை தனக்குக் கேட்டுவிட்டது என்பது போல் மீண்டும் சிலீரென்ற காற்று வீச "என் குழந்தை என் குழந்தை" என்ற சொற்களும் மோதின.

"மஞ்சு நம்ம பிரார்த்தனை அம்மாவுக்குக் கேட்டு விட்டது" என்றான்.

இருவரும் அந்த ஒற்றைத் தடத்தில் எங்கே போகிறோம் என்ற இலக்கு இன்றி நடந்தார்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரியாத குழப்பம். தான்தான் ஜமீன் வாரிசு என்றால் சும்மா இருப்பார்களா!

உண்மைதான்! சீலனால் பேசாமல் இருக்கத்தான் முடியவில்லை. காலையில் சிற்றுண்டி மேஜையில் வைத்து அத்தையிடம் பேச வந்தவன், மஞ்சுவைக் கண்டு மதி மயங்கிப் போய் நின்றான்.

அவர்கள் அகன்றதும் தான் வந்த வேலை நிறைவுக்கு வந்தது.

"அத்தை, எப்ப தத்து சடங்கு வைக்கப்போறீங்க?"

சாந்த லட்சுமியால் எதுவும் சொல்ல முடியவில்லை. எந்த அளவிற்கு அண்ணன் மகனை தத்து எடுத்துக் கொள்வது என்று குழப்பமாக இருந்தது. இவனை நம்பலாமா! கூடாதா! கூடாநட்புக் கொண்டவனிடம் இவ்வளவு பெரிய ஜமீன் பொறுப்பை ஒப்படைப்பது நல்லதா! நாகப் பாம்பை நஞ்சு இல்லை என்று மடியில் போட்டுப் கொஞ்சவா முடியும்?

அண்ணன் மகன் சத்திய சீலனின் வற்புறுத்துதல் கொஞ்ச காலமாக அதிகமாகவே இருந்தது. சங்கரி நாச்சியைக் கொல்வதற்கு தன் தந்தையும், சகோதரனும் கூட்டாக இருந்தது அவளுக்கு மறக்கவில்லை. அதே போல் தன்னையும் ஒழிக்க தந்தையும், மகனும் முன்னுக்கு வர மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

தனக்கு அண்ணன் மகனின் பிடுங்கலிலிருந்து எப்படி விடுதலை கிடைக்கும்? சரி, சீலனின் பிடியிலிருந்து விடுதலை பெற்றால் அவளால் நிம்மதியாக இருந்து விட முடியுமா? பங்காளிகளின் மகன்கள் இருவர் துவார பாலகர்கள் மாதிரி ஜமீன் மாளிகையின் வாசலில் நின்று கொண்டு விடுகிறார்களே...

அது மட்டுமா? ஜமீன் கணக்கைப் பார்க்க வேண்டும் என்கிறார்கள். அவர்கள் குணம் எப்படிப்பட்டது என்பது தெரியவில்லை. அது ஒரு தலைவலி அவளுக்கு அண்ணன் மகனாக இருப்பினும் சரி, பங்காளிகள் பையன்களாக இருக்கட்டும். ஜமீனைக் கொடுத்துவிட்டு

அவர்களிடம் அவள் கைகட்டி சேவகம் பண்ணவா முடியும்?

சமீபகாலமாக அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றி வதைக்கத் தொடங்கி இருந்தது. தன் மூத்தாளும், தங்கையுமான சங்கரி நாச்சியாரின் மகன் இறக்காமல் இருந்திருக்கக் கூடாதா? என்ன இருந்தாலும் மகன் என்ற உரிமை இருந்திருக்கும் அல்லவா! தன்னுடைய நிலை பற்றி இத்தனை கழிவிரக்கம் கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்திராதே.

மனப்பூவை வண்டாகக் குடைந்தது. இறந்து போன தன் கணவர் ஷண்முக சுந்தரம் போட்டோ முன்பு போய் நின்ற கண் கலங்கினாள் அடிக்கடி. அண்ணன் மகன்தான் சத்தியசீலன் இரத்த சம்பந்தம் உள்ளவன். சமீபகாலமாக அவன் போடும் ஆட்டம் தாங்க முடியவில்லை. இப்பொழுதே ஜமீன் தன்னுடையது என்பது போல் அவன் நடந்துக் கொள்வது சரியாக இல்லை.

ஜமீனில் வேலை செய்யும் எந்த ஒரு பெண்ணையும் அவன் விட்டு வைப்பதில்லை என்ற செய்யதிகள் அவள் காதுகளில் விழத்தான் செய்கிறது. இதிலிருந்து தான் அவள் சத்திய சீலனுக்கு எப்படி ஜமீன் வாரிசைத் தரமுடியும்! என்று வியாகூலப் படத் தொடங்கி இருந்தாள்.

அவளுக்கு இன்னொரு சந்தேகமும எழத் தொடங்கி இருந்தது. மாளிகை நகைப் பெட்டகத்தில் ஷண்முக சுந்தரம் இறந்த பின் பார்த்த பொழுது பரம்பரை நகைகள் காணாமல் போயிருந்தன. சாந்த லட்சுமி குழந்தையாக இருக்கும் பொழுது தன் அத்தை வீட்டுக்கு வருவது உண்டு.

ஷண்முக சுந்தரத்தின் அம்மா போட்டுக் கொண்டிருந்த நகைகள் அவளுக்குத் தெரியும். ஷண்முக சுந்தரத்தின் தாயார்க்கு பெண் குழந்தைகள் இல்லாததினால் சாந்த லட்சுமியையும், சங்கரி நாச்சியாரையும் நன்றாகவே பிடிக்கும். அடிக்கடி மாளிகைக்கு வரவழைத்து சீராட்டுவாள்.

குழந்தையாக இருக்கும் பொழுது சாந்த லட்சுமி அந்த நகைகள் மீது ஒரு கண் வைத்து விட்டிருந்தாள். சங்கரி நாச்சியின் மறைவுக்கு பின் அந்த இடத்திற்கு அவள் வந்ததுமே முதலில் தன் கணவரிடம் அந்த நகைகள் பற்றித்தான் கேட்டாள்.

“அத்தான், நானும் அத்தை மாதிரி அந்த நகைகளைப் போட்டுகிட்டு மாளிகையைச் சுற்றி வரணும்.

பாவம் ஷண்முக சுந்தரம் இருந்தால் தானே தருவார்? ஒரு பகுதியை பாலாம்மாவிடம் கொடுத்து வைத்திருந்தார். மீதி நகைகள்,

வாரிசு பத்திரங்கள் அனைத்தையும் தங்கப் பேழை ஒன்றில் வைத்து நகரத்தின் பெரிய வங்கி லாக்கரில் வைத்து, அதை எப்படி மகேஷிற்கு சேர வேண்டுமோ அந்த வகையில் சிறந்த வங்கியை வைத்து ஏற்பாடு செய்திருந்தார்.

மகேஷின் கையெழுத்தை பாலாம்மா தன் நிலத்திற்கு வாங்குவது போல் வாங்கி நாராயணசாமி மூலம் அனுப்பி வைத்திருந்தார். பாலாம்மா அனைத்தையும் அறிவாள். ஆனால் தன் வாய் மூலம் எதையும் சொல்லாமல் போய்விட்டதுதான் பரிதாபம்.

## 19

எல்லா விபரங்களும் வீராச்சாமிக்கும் சொல்லப்பட்டிருந்தது. வீராச்சாமி எல்லாம் தெரியும் என்ற சந்தேகம் சாந்த லட்சுமிக்கு உண்டு. அதைப் பற்றி ஒருநாள் வீராச்சாமியிடம் விசாரணை செய்தாள்.

“வீராச்சாமி, நான் இந்த ஜமீனுக்குப் புதியவள் இல்லை.”

“நான் அப்படிச் சொல்லவில்லையே அம்மா நீங்க இந்த ஜமீனை ஆளும் மகாராணி” என்ற வீராசாமி கை கும்பிட்டுச் சொன்னார்.

“இந்த ஜமீனுக்கு மகாராணியா வரத்துக்கு முன்னாடியிலேயிருந்து பழக்கப்பட்டவள். ஜமீன்தார் எனக்கு மாமன் மகன்”

எதையோ தோண்டித் துருவத்தான் இந்த சாந்த லட்சுமி தூண்டில் போடுகிறாள் என்பது புரிகிறது. “அதுவும் எனக்குத் தெரியும். மூத்த ஜமீன்தாரிணி அம்மாவும் ஜமீன்தாரின் மாமன் மகள் என்பதும் தெரியும்“ என்று வீராசாமி வாயை அடைக்க உள்ளூர வெகுண்டாள் சாந்த லட்சுமி.

“உறவு முறைகளை உங்ககிட்ட கேட்கல்ல இது என் குடும்ப விஷயம்.”

மௌனம் சாதித்தார் வீராசாமி.

“ஏன் பேசல்ல?”

மூட் கெட்ட எஜமானிடம் என்ன பேசுவார்? “என்ன பேசப் போறீங்க அம்மா?” என்று கேட்டு நிறுத்திக் கொண்டார்.

“ஜமீன் பெட்டகத்தில் பரம்பரை நகைகள் எதுவுமில்லையே...

அதைப் பற்றி ஏதாவது நீங்க அறிவீரா?”

பதறிப் போனார் வீராசாமி.

“அம்மா, எனக்கு எதுவும் தெரியாதும்மா... அந்த விஷயங்களை ஜமீன்தார் ஐயாதான் பார்த்துக்கிட்டு இருந்தார்ம்மா”...

யோசனையில் ஆழ்ந்தாள் சாந்தலட்சுமி. இவரிடம் நாம் முதலில் எரிச்சலைக் காட்டி இருக்கக் கூடாதோ? ஜமீன் இருக்கும் நிலையில் இவரை விரோதிச்சுக்கக் கூடாது. அது புத்திசாலிகள் செய்யும் செய்கை இல்லை.

“ஜமீன்தார் உங்ககிட்ட ஏதாவது சொல்லி இருப்பாரோனுதான் கேட்டேன். உங்களைச் சந்தேகப்பட்டு கேட்கவில்லை.... தப்பா எடுத்துக்காதீங்க” என்றாள்

சாந்த லட்சுமி சொல்வது எதையும் வீராச்சாமி நம்புவது கிடையாது. ஜமீன்தாரின் அந்தரங்கம் தெரிந்தவர் என்பதால் சாந்த லட்சுமி பற்றியும் தெரிந்திருந்தது. நகைகளைத் தான் எடுத்திருப்பேன் என்று ஜமீன்தாரிணி நினைக்கிறாளோ!

“சாமி சத்தியமா நகைகளைப் பற்றி எனக்குத் தெரியாதும்மா” என்றார் வீராச்சாமி.

“ஐயோ... ஐயோ.. பரம்பரை பரம்பரையா நீங்க ஜமீன்ல இருக்கீஙக. நீங்க எடுத்தீங்கனு சொல்லல. ஜமீன்தார் வேற எங்கையாவது வச்சிருக்காரோ பத்திரமானு கேட்டேன்” என்றவள் அத்தோடு விட்டுவிட்டாள் சாந்த லட்சுமி.

“வரேம்மா” என்று பணிந்து வீராச்சாமி விடைபெற்ற பொழுது, அவள் மனத்தில் இன்னொரு எண்ணம் உதித்தது.

நாராயண சாமி ஜமீன்தார்க்கு இன்னும் நெருங்கியவராயிற்றே.... நகைகள் பற்றி அவர் அறிந்திருக்கலாமே... அதற்கு வாய்ப்பு உண்டே என்று தோன்ற “வீராசாமி, கொஞ்சம் நில்லுங்க” என்றாள்.

இன்னும் என்ன குண்டைத் தூக்கிப் போட போகிறாளோ என்ற பயத்துடன் நின்றார் வீராசாமி.

“ஏன் வீராசாமி, இதைப் பற்றி நாராயணஸ்வாமி ஏதாவது அறிந்திருப்பாரா?” என்று கேட்டாள்.

“அது எனக்கு எப்படித் தெரியும் அம்மா?”

"போன் போட்டு கேட்கலாமா?" அது அத்தனை சுலபமில்லை அம்மா. இந்த மலைப் பிரதேசத்தில் சென்னைக்கு சிக்னல் கிடைக்கறதே கஷ்டமா இருக்கு. கனடாவுக்கு எங்கேம்மா தொடர்பு கிடைக்கும்?

"கிடைக்காதுனு சொல்றீங்களா" அவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

"இதெல்லாம் என் சக்திக்கு மேற்பட்ட விஷயம்மா. அதிக படிப்பு வாசனை எல்லாம் இல்லாதவன் நான். குருடனைப் பார்த்து ராஜவிழி விழிக்கச் சொன்ன எப்படிம்மா!"

"சரி சரி.... புராணம் பாடாதீங்க.. நீங்க போங்க" என்றாள் சாந்தலட்சுமி. யோசித்துக் கொண்டே இருந்தவள் மனத்தில் ஒரு ப்ளாஷ் அடித்தது. நாராயண ஸ்வாமியை தொடர்பு கொள்ள இன்று காலையில் வந்திருக்கும மகேஷை உபயோகப்படுத்திக் கொண்டால் என்ன? அதுதான் சரி என்று முடிவு செய்ததும் மனத்தில் நிம்மதி பிறந்தது. அப்பொழுதே நகைகள் கையில் கிடைத்தாற் போன்ற மகிழ்ச்சியும் ஏற்பட்டது.

இதெல்லாம் தெரியாத மகேஷும் மஞ்சுவும் இயற்கையை ரசித்துக் கொண்டே அந்த ஒற்றையடித் தடத்தில் நடந்தார்கள். பனிபடர்ந்த சூழ்நிலை, மலரின் மணம், காற்றில் கலந்த பசுமை என்று நுகர்ந்து கொண்டே நடந்த பொழுது களைப்பு தெரியவில்லை.

அந்த சமயத்தில் தான் நாராயணஸ்வாமி கைபேசியில் அழைத்தார். மஞ்சு, ஐயா அழைக்கிறார்?"

"கனடாவிலேர்ந்தா"

"இப்பல்லாம் கனடா நம்ம வீட்டுக் கொல்லப்புறமாயிடுச்சு மஞ்சு" என்று கிண்டலடித்தபடியே கைபேசியை உயிர்ப்பித்தாள்.

"என்னய்யா, மகேஷ் ஜமீன்தாரா பேசுகிறார்?"

"என்னய்யா விளையாடுறீங்க. நீங்க என்னைப் போய் ஜமீன்தார்னுட்டு...."

"உண்மையைத்தானே சொல்றேன். இப்ப எங்கிருந்து பேசுறீர்?"

"மகிழ மலையிலேர்ந்துதான் ஐயா"

"பேஷ்.... போய் சேர்ந்துட்டீரா?"

"வந்தோம் நேத்து ராத்திரிதான். கோயில்கள், மூலிகைகள் ஆராய்ச்சி ஸ்டுடண்ட்ஸ்னு சொல்லிட்டோம்"

“பேஷ்... நல்ல காரியம் பண்ணினீர்” எப்படி ஆரம்பிக்கறது.. என்ன செய்யறதுனு தெரியல்ல” என்றவன், இரவு வந்த வண்டிக்காரன் பற்றியும், காற்றில் மோதும் குரல்கள் பற்றியும் அவன் விரிவாகச் சொன்னான்.

பருத்த மரத்தடியில் நின்று பேசிக் கொண்டிருந்த மகேஷ், மரத்தின் பின்புறம் மரத்தடியில் மடியில் உழவுப் பெண்ணொருத்தியை போட்டு தாலாட்டிக் கொண்டிருந்த சீலனின் காதுகளில் துல்லியமாக காற்று கொண்டு சேர்த்ததை அறிந்தானில்லை.

“ஐயா, என்ன செய்யறது? எப்படி நான் தான் ஜமீன்தார் ஷண்முக சுந்தரத்தின் மகன்னு எப்படி வெளிப்படுத்தறதுனு புரியல்ல. ஜமீன் மாளிகையில புகுந்துட்டேன்”

“கவலைப்படாதே. மந்தாகினி எண்ணைச் சொல்லு அவங்களை சித்தர் பீடம் போய் வாக்கு கேட்டுட்டு வரச் சொல்றேன். அவருக்கு இப்ப வயசாகிப் போச்சு. அருள் வாக்கு சொல்றதையும் குறைச்சுக்கிட்டார். ஆனா நமக்குன்னா கண்டிப்பா சொல்வாரு” என்ற நாராயணசாமி மந்தாகினியில் எண்ணை பதிவு பண்ணிக் கொண்டு இணைப்பைத் துண்டித்தார்.

மகேஷும், மஞ்சுவும் மேலும் நடக்கத் தொடங்கினார்கள். அவர்கள் நெஞ்சில் நடையில் இப்பொழுது நிம்மதி கூடியிருந்தது.

இங்கே சீலனின் நிலைமை தர்ம சங்கடமாக ஆயிற்று. மகேஷின் பேச்சு ஒரு நிழற் சித்திரம் போட்டுக் காட்டியதே தவிர அடி நுனி தெரியாத பேச்சாக இருந்தது. கோண புத்திக்காரனை அவன் பேச்சை கோர்த்துப் பார்க்க ஆரம்பித்தாள்.

தன் அத்தையின் கணவனரான ஷண்முக சுந்தரத்திற்கு மகன் உயிரோடு வந்திருக்கிறான் என்ற புரிதலே இடியாக இறங்கியது. அவன் எதிர்பாராத அதிர்ச்சி. அவனுடைய தந்தை சாந்த லட்சுமியின் அண்ணன் சங்கரி நாச்சிக்குப் பிறந்த குழந்தை இறந்து விட்டதாக அல்லவா சொன்னார்?

இதென்ன கண் கட்டி வித்தை!

அவன் எரிச்சலும் கோபமுமாய் மடிய உதற மடியில் கிடந்த இளம் பெண் மண்ணில் தவழ்ந்தாள்.

“என்னங்க எஜமான்?” பயந்து போனாள். தான் எஜமானுக்கு கோபம் வரும்படி ஏதாவது செய்து விட்டோமோ என்ற பயம்.

ஷர்ட் பாக்கெட்டிலிருந்து நூறு ரூபாயை எடுத்து அவள் முன் வீசினான். “எடுத்துக்க”

“எஜமான் நான் ஏதாச்சும் தப்புப் பண்ணிப்புட்டேனா?”

“இல்ல புள்ள.. புறப்பட்டு போ.. அப்புறமா கூப்பிடறேன்”.

அவன் தன் உடலை மீட்டிய வேதனையுடன் தாபம் தீராமல் எழுந்து போனாள்.

அவன் சற்று நேரம் அப்படியே உட்கார்ந்துக் கொண்டிருந்தான். காற்றில் தவழ்ந்து வந்த மகேஷ் குரலை அவனால் நம்பவோ, நமபாமலோ இருக்க முடியவில்லை இதை எவ்வளவு தூரம் நம்பி அத்தையிடம் சொல்வது? அத்தை இதை சீரியஸாக ஏற்றுக் கொண்டு தனக்கு வாரிசு உரிமையைத் தருவாளா! ஜமீனுக்கு உரிய வாரிசு அவன்தான் என்று மகேஷைக் கொண்டாடுவாளா! இதன் நடுவே மஞ்சுவின் மேல் கொண்ட மையல் அவனைச் சாக அடித்தது.

அந்த மையலைத் தீர்த்துக் கொள்ளவே உழவுப் பெண் ஒருத்தியைத் தள்ளிக் கொண்டு வந்திருந்தான். சீலன் கேட்டு விட்டான் என்பதை அறியாத மகேஷ் மஞ்சுவிடம் பேசிக் கொண்டே ஒற்றைத் தடத்தில் நடந்து போனான். சீலனும் எழுந்து மகேஷின் வரவைப் பற்றி தன் தாத்தா தந்தையிடம் சொல்லப் போனான். அதன் பிறகே ஒரு முடிவுக்கு வர தீர்மானித்தான்.

அதனால் அத்தையிடம் சொல்லாமல் தன் ஊருக்குக் கிளம்பிப் போனான்.

இதையொன்றும் அறியாத மகேஷும் மஞ்சுவும் நீண்ட தொலைவு நடந்த பொழுது அழகான மண்டபம் இருந்தது. ஆனால் பழைய மண்டபம் என்றாலும் ஜமீன்தார் காலத்தில் பாதுகாக்கப்பட்டு வந்த மண்டபம் பல நுழைவாயில்கள் சாரளம் கொண்டிருந்தது. எந்தக் காலத்து மன்னன் கட்டிய மண்டபமோ தெரியவில்லை.

கொஞ்ச காலமாக கவனிப்பாரன்றி ஒட்டடை படிஞ்சு இருந்தது. தூசு நிறைந்திருந்தது. நிறைய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து கிடந்தன. சுத்தப்படுத்த ஒரு வார காலமாவது வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் மகேஷ் அவனிடம் ஓர் அபூர்வ குணம் உண்டு. எதையும் மதித்துப் பார்க்கிற குணத்தை பாலமாக கற்றுக் கொடுத்திருந்தாள்.

மண்டபத்தின் உள் சுற்றுப் பகுதிகள் எல்லாம் இருட்டு தாக்கி

இருந்தது.

“என்ன ரெண்டு பேரும் மண்டபத்தைச் சுற்றிப் பார்க்க வந்தீங்களா? என்று கேட்டபடி வந்த உருவத்தைக் கண்டு திகைத்துப் போனார்கள்.

முகம் முழுக்க தாடியும், உடம்பை கருப்புப் போர்வையால் போர்த்திய வண்டிக்காரன் தான் அது என்பது புரிந்ததும் பயம் விலகியது.

“நீங்களா ஐயா இங்கே இருக்கீங்க? என்று துணிவுடன் கேட்ட மஞ்சு அன்னிக்கு கூலி கூட வாங்கிக் கொள்ளவில்லையே ஐயா என்றாள்.

எனக்கு கூலி கொடுத்து கட்டுபிடி யாகுமோ? இங்கே இருக்கீங்களானு கேட்டியே.. எங்கேயும் இருப்பவன் நான் என்று கரகரப்பாக சிலிர்த்தான்.

## 20

சேவை மையத்தில் மாலை ஐந்து வந்த மந்தாகினியின் முகத்தில் கவலை ரேகைகள் வானம் கருத்து முகத்தில் கவலை ரேகைகள் வானம் கருத்து அடர்ந்து கொண்டு வந்தது. மழை கொட்டு கொட்டென்று கொட்டப் போகிறது அதற்கு முன்பு வீட்டிற்குப் போய் விடுவது நல்லது. காற்று வேறு சுழன்று அடிக்கப் போகிறது. ஏற்கனவே அவள் மனத்தை மகேஷ்-மஞ்சுவிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை என்பதால் கவலை மூட்டம் சூழ்ந்திருந்தது.

ஸ்கூட்டியை எடுக்க படி இறங்கிய பொழுது தான் ஸ்கூட்டரில் ஹரிநாத் வந்து இறங்கினார்.

“கிளம்பி இருப்பீங்களான்னு பயந்துட்டே வந்தேன் மந்தா”

ஏன் ஹரி? எனி அர்ஜண்ட் மேட்டர்?

குழந்தை பவானிக்கு ஜுரம் காலையில நான் ஆபிஸ் போறப்பவே லேசா ஜுரம் இருந்தது. டாப்லெட் கொடுத்துட்டு போனேன். இப்ப பீவர் அதிகமா இருக்காம். தன்னினைவு இல்லாம பேத்தறாளாம். பவானிக்கு ஒண்ணுண்ணா என்னலா தாங்க முடியாது மந்தா நீங்க எங்க கூட வந்தா. தைர்யமா இருக்கும் என்ற பொழுது ஹரிநாத்தின் கண்கள் கலங்கிப் போயின.

“எனக்கு இதை விட என்ன வேலை ஹரி? வீட்ல மஞ்சு - மகேஷ் கூட இல்ல நானே உங்ககிட்ட பேசணும்னு நினைச்சேன்”

“என்ன விஷயம் மந்தா”

“முதல்ல டாக்டருக்கு போன் பண்ணுங்க. குழந்தைக்கு ஜுரம் ஏறிட்டு போறது அத்தனை நல்லது இல்ல. நான் நிதானமாக விஷயத்தைச் சொல்றேன்”

“பதட்டத்துல டாக்டருக்கு போன் பண்ணனும்னு எனக்குத் தோணலையே?”

அதுக்குத்தான் வீட்ல ஒரு பொம்பளை இருக்கணும்ங்கறது என்றவளையே கூர்ந்து பார்த்தான் ஹரிநாத்.

இவள் ஓர் அற்புதமான பெண்மணி என்ற எண்ண ஓட்டம் மனத்தினுள் பிரவாகம் எடுத்தது. மனிதர்களிடம் நேயத்தை வைப்பது என்பது எல்லாராலும் முடியற காரியம் இல்லையே! இவள் ஓர் அபூர்வமான பிறவி.

இருவரும் வீட்டிற்குப் போன பொழுது டாக்டரும் வந்து இறங்கினார்.

“குழந்தைக்கு என்னாச்சு ஹரி?

சொன்னார் ஹரி

காலையிலேயே அழைச்சிட்டு வந்திருக்கலாம் இல்லையா? ஒரு ஊசியிலேயே ஜுரத்தைத் தடுத்து இருக்கலாமே? வயசான இவங்களாலே என்ன முடியும்? இதே உங்க மனைவி இருந்திருந்தா கவலை இல்லையே? சொன்னபடி ஊசி போட்டார் மாத்திரை எழுதி கொடுத்தார்.

“ஜுரம் குறைய நெற்றி, அக்குள்ள ஜில்லுன்னு தண்ணியில நனைச்ச துணியைப் பத்து மாதிரி போடுங்க ஜுரம் குறையற வரைக்கும் போடுங்க. மூணு மணி நேரத்துக்கு ஒரு முறை மாத்திரை கொடுங்க” என்று சொன்ன டாக்டரிடம் நான் பார்த்துக்கறேன் டாக்டர் என்றாள் மந்தாகினி.

டாக்டர் புறப்பட்டுப் போனார். அவருக்கு சேவை மையத்தைப் பற்றியும் மந்தாகினி பற்றியும் தெரியும். அவளைப் பற்றி உயர்வான அபிப்ராயம் உண்டு. அவரை அனுப்பி விட்டு உள்ளே வந்த ஹரி” மந்தா, அடுத்த தெருவில் இருக்கும் மருந்துக் கடையில் மாத்திரை

வாங்கிட்டு வந்துர்றேன்” என்றான்.

அவனுக்கு மந்தா அது இரவென்றும் பாராமல் துணைக்கு வந்திருப்பது தைர்யத்தைக் கொடுத்தது. வாழ்க்கையில் தனக்கு பவானியை வளர்க்க ஒரு பெண் துணை அவசியமோ என்ற எண்ணம் தோன்றியது முதன்முறையாக அதனால் குழப்பமான எண்ணங்களும் மனத்திற்குள் சிலந்தி வலையிட்டது. இதைப்பற்றி மந்தாவிடமே பேசித் தீர்வு காண வேண்டும் என்று தீர்மானித்தான்.

குழந்தைக்கு மாத்திரை கொடுத்து, இரவு உணவான கஞ்சியைக் கொடுத்து, தங்கள் உணவையும் முடித்துக் கொண்டு குழந்தை அருகில் வந்து உட்கார்ந்தனர்.

“ஹரி நீங்க தூங்குங்க காலையில ஆபீஸ் போகணும் இல்ல” என்ற மந்தாவின் சொற்கள் அவனுக்கு மருந்தாயிற்று.

“நாளைக்கு லீவ் போட்டுக்கலாம் மந்தா” இருவரும் விஸ்ராந்தியாக பேசக் கூடிய நேரம் என்பதை உணர்ந்தார்கள்.

“ஹரி மஞ்ச - மகேஷ்கிட்ட இருந்து தகவல் இல்லையேனு கவலைப்பட்டுகிட்டு இருந்தேன். நாராயணாஸ்வாமி போன் பண்ணி மகேஷ்கிட்ட பேசி இருக்கார்.” என்றவள் மகிழ மலையைப் பற்றி நாராயணஸ்வாமி சொன்னவற்றை ஹரியிடம் தெரிவித்தாள்.

“இதை அதிசயம்னு எடுத்துகறதா? இல்ல அமானுஷ்யம்னு எடுத்துக்கறதானு தெரியல்லையே! என்ற ஹரியின் முகத்தில் கவலை அப்பிக் கொண்டது.

அவர் கவலையைப் புரிந்துக் கொண்டாள் யோசனையுடன் பார்த்தவள் நாராயண ஸ்வாமி ஐயா ஜமீன்தார் சந்தித்தார் ஒரு சித்தர் பீடம்பற்றி சொன்னார்னு சொன்னேன் இல்லையா! மகேஷும் மஞ்சுவும் அங்கே மகிழ மலையில் மேற்கொண்டு என்ன செய்வது? அணுகுமுறை என்னனு புரியாம தவிக்கிறாங்கனு சொன்னார்”

அவங்களை அனுப்பிச்சதே தப்போ மந்தா..

“எப்படி தப்பாகும்? மகேஷ் தானே வாரிசு அவருக்கு உரிமை உள்ள சொத்தை அவர் பெற வேண்டாமா!”

“இப்ப கவலைப்பட வேண்டி இருக்கே?”

“பாடு பட்டாத்தான் பலன் கிடைக்கும் ஹரி”

அவளுடைய பாஸிடிவ் அப்ரோச் அவனுக்குப் பிடித்தமானதுடன்

அவனுக்கு ஒரு துணிவையும் கொடுக்கவல்லது. அவளுடைய பேச்சுலர் அவனுக்கு பக்க பலமாக அமையும். அவள் எதையும் சாதிக்கக் கூடியவள்.

“சரி, நாம செய்ய வேண்டியது ஏதாவது இருக்கா மந்தா”

சித்தர் பீடத்து சுவாமிகள் கிட்ட அருள்வாக்கு கேட்க நாம போறோம் ஹரி. அவருக்கு ரொம்ப வயசாயிடுச்சு ஆனா ஜமீன்தார்கிட்ட வச்சிருந்த ப்ரீதியினாலே அவர் மகனுக்கு நேர்ந்த இடைஞ்சல்களை நீக்க வழி சொல்லுவார்னு நாராயண ஸ்வாமி ஐயா சொன்னார்.

“எப்ப போகறோம்“

“குழந்தை எழுந்திரட்டும் ஹரி ரெண்டு நாள் கழிச்சு போகலாம்“

“அதுக்குள்ள ஒண்ணும் ஆயிராதே”

“ஆகாது ஹரி கடவுள் காப்பாற்றுவார்”

“உங்களோட அந்த நம்பிக்கைத் தான் எனக்கே பலமா இருக்கு மந்தா”

புன்னகை பூத்தாள் மந்தா,” நான் ஒண்ணு சொல்றேன் கேளுங்க”

அவன் கண்களில் கனிவு தேங்க “நீங்க என்ன சொன்னாலும் கேட்பேன் மந்தா” என்றான் உணர்ச்சி பொங்க

அதற்கும் சிரித்தாள் மந்தா.

“இதற்கும் சிரிப்புத்தானா? கோபமே வராதா மந்தா?”

“அநியாயத்தைக் கண்டால் கோபம் வரத்தான் செய்யும். ஆனால் கோபம்ங்கறது எல்லாத்தையும் அழிக்கும் நெருப்பு. அநியாயம் அழிகறதோ இல்லையோ அந்த அக்கினி நம்மை அடி வயற்றில் மெல்ல மெல்ல பொறியாகப் பற்றி உட்கார்ந்து நித்தியாகமாக ஹோமம் வளர்க்கும் இனிமையான சொற்கள், பொறுமையை கை கொண்டால் தீ பற்றாது. நம் ஆரோக்யம் கெடாது. எதைக் கண்டாலும் படபடப்பு வரக் கூடாது”

அவளையே பார்த்தார் ஹரிநாத் இவ வேதாந்த நாயகி உள்ளுக்குள் நல்ல அக்னி மூட்டியாகத் தீயை வளர்க்கிறாள். அது அனைவரையும் அழிக்கும் தீயல்ல. சுவையான சமையல் செய்யும் பாதுகாப்பான தீ தேவையானால் மூட்டியும் அணைக்கும் வல்லமையைத் தன்னுள்

வளர்த்தவள்.

“என்ன பார்க்கிறீர்கள் ஹரி?”

“நீங்க வித்யாசாமானவள் மந்தா உங்கள் உள்ளத்தைத் தோண்டிப் பார்க்க முயல்கிறேன் முடியவில்லை.

“பெண்கள் மனசு ஆழமான கடல் என்று சொல்லப் போகிறீர்களா?”

“அது தப்பு இல்ல மந்தா அதில் குளித்தாலும் எத்தனை முத்தை என்னால் எடுக்க முடியும்னு தெரியல்ல காலம் பூரா தேடிக் கொண்டே இருப்பேனோ என்னவோ நீங்க என்னவோ சொல்லணும்னு சொன்னீங்களே”

“ஓ பேச்சு திசை மாறிப் போயிருச்சு என்ன சொல்ல வந்தேன்னா... பவானி வளர்ந்து வரா அவளைப் பத்தி என்ன நினைக்கிறீங்க”

“நினைக்க என்ன இருக்கு”

“நிறைய இருக்கு நீங்க ஆம்பிள்ளை துணிமணிகளை வாங்கித் தரலாம். படிப்பை கவனிக்கலாம். ஒரு பெண் வளர வளர அவள் மனத்தை அணுக, உணர்வை புரிஞ்சுக்க ஒரு பெண் வேண்டும் ஹரி”

சின்னதாகப் புன்னகை பூத்தான் ஹரி

“நூற்கண்டை எதுக்கு சுத்தறீங்கனு புரியுது மந்தா”

“புரிஞ்சா சரி”

“பாட்டியோட துணையை அவளால் நீண்ட காலம் நம்ப முடியாதுன்னு சொல்றீங்க”

“அப்புறம்“

“கல்யாணம் பண்ணிக்கடானு சொல்லாம சொல்றீங்க”

“புரிஞ்சா சரி”

ஒரு சிரிப்பை சிரித்தார் ஹரி அதனுள் விரக்தி ஒளிந்துக் கொண்டிருந்தது. அயோத்தியில என்ன குறைச்சல் ராமனை கைகேயி தன் மகனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணணும்னு காட்டுக்கு அனுப்பினா அங்கே தாயின் உணர்வுகள் செத்துப் போச்சு. கோசலை

இருந்தும் அந்தத் தாயினால் என்ன செய்ய முடிந்தது?

துருவன் ஏன் தவம் செய்யப் போனான்? அவனுடைய பெற்ற தாயாரால் என்ன பண்ண முடிந்தது? இங்கே பெற்ற தகப்பன்கள் கையால் ஆகாதவனாகத் தான் உட்கார முடியும். அப்படி ஒரு தகப்பனாக நானும் ஆகணுமா மந்தா.

"நல்ல பெண்ணாகக் கிடைக்க மாட்டாளா"

"உங்களை மாதிரி பொது நலம் பேணும் ஒரு பெண் எங்கே கிடைப்பாள்? சொல்லுங்க மந்தா?" என்று கேட்டு கண் கலங்கினான் ஹரி.

"ராஜராஜ சோழனின் ஒரு மனைவி. அவ பேர் பஞ்சவன் மாதேவினு ஞாபகம். அவளுக்குக் குழந்தை பிறந்தா தன் மகன் ராஜேந்திரனுக்குப் பட்டம் கிடைக்காதோனு கவலைப்பட்டா. அந்தக் காலத்திலேயே அந்த ராணி பஞ்சவன் மாதேவி அரண்மனை வைத்தியரை வைத்து தனக்கு குழந்தையே பிறக்காதபடி சிகிச்சை பண்ணிக் கொண்டாள். அந்த ராணி பஞ்சவன் மாதேவி ராஜராஜனுக்கு அரசியல்ல ரொம்ப உதவியா இருந்திருக்கா. நான் படிச்சிருக்கேன்.

"நிறையப் படிச்சிருக்கீங்க"

"அது பிரயோசனம் இல்ல. படிச்சபடி நடக்கணும்."

"அப்படி ஒரு தாய் பவானிக்குக் கிடைப்பாளா கிடைச்சா நாளைக்கே தாலி கட்ட நான் தயார்."

"அவசரமில்ல. மஞ்சுவும் - மகேஷும் மகிழ மலையிலிருந்து வந்ததும் தாலியைக் கட்டலாம்" என்று சன்னக் குரலில் சொன்ன மந்தாவை விழி விரிய பார்த்தான் ஹரி.

"அம்மா" என்று பவானி உடம்பை முறுக்கிக் கொள்ள "வந்துட்டேன்டா" என்ற மந்தா அவளை அணைத்து பாலை ஊற்றி வாயில் புகட்டினாள். ஹரியின் விழிகள் குளம் கட்டின.

## 21

அந்த வண்டிக்காரன் அவர்களைப் பார்த்துச் சிரித்தான். நெற்றி, கன்னங்கள் முழுதும் முடி பரந்து கிடந்தன. சிரிப்பில் பால் வெண்மை பொங்கியது. என்ன பற்பொடி போட்டு தேய்க்கிறீங்கனு கேட்கத்

தோன்றிய ஒளிவெண்மை கன்னக் கதுப்புகளில் மட்டும் முடியில்லை. முந்திய இரவு பயந்த பயம் இப்பொழுது அவர்களிடம் இந்தக் காலைப் பொழுதில் இல்லை.

"நேத்து ராத்திரி கூலி வாங்கிக்கல்ல" என்று மகேஷ் சொன்னான் மீண்டும்.

"இப்ப கொடு வாங்கிக்கறேன்"

விழிகள் விரிய "எவ்வளவு தரணும் ஐயா" என்று பாண்ட் பாக்கெட்டினுள் கையை விட்டவனைத் தடுத்தான் வண்டிக்காரன்.

"எனக்குப் பணம் வேண்டாம்".

"வேற என்ன வேணும். சாப்பாடா?"

"எனக்கு சாப்பாடா?" என்று கேட்ட வண்டிக்காரன் பகபகவென்று மண்டபம் அதிரச் சிரித்தான்.

"இப்படி சிரிக்காதீங்க. பணம் வேண்டாம்னு சொல்றீங்க. சாப்பாடும் வேண்டாம்னு சொல்றீங்க. வேற என்ன வேணும்! சொல்லுங்க"

"எனக்கு இந்த ஜமீன் வேணும்"

திடுக்கிட்டுப் போனான்."அதெப்படி நான் தர முடியும்?"

"என் தர முடியாது?"

"நான் ஆராய்ச்சி பண்ண வந்த மாணவன்"

"இந்த சிற்பங்களை, சிவன் கோயிலை, மூலிகைகளைப் பற்றி"

மீண்டும் சிரித்தான் வண்டிக்காரன்.

"இதோ இந்த தூண்ல செகக்கி இருக்கிற சிற்பங்களைப் பத்தி உனக்கு ஏதாவது தெரியுமா! இதன் அளவு நீளம் தெரியுமா! தூணை நிறுத்தி வைத்து சிவனைப் பற்றி என்ன தெரியும்? உங்க உருவைக் கண்டு கன்னத்தில் போட்டுக் கொண்டு வருவதைத் தவிர வேற என்ன தெரியும்? சிவன் என்பவன் யார் லிங்கம் என்று வைத்து நீ தரிசிக்கிறாய்? அவன் தத்துவம் என்ன? அவனுக்கு உரு அரு என்று இரண்டு நிலைகள் உண்டு நீ பார்க்கும் உரு லிங்க வடிவம். உனக்குத் தெரிந்தது அதுதான். எங்கும் வெட்ட வெளியாய் நிற்குமவனை - சிற்பவனை - அண்டங்களுக்கு அப்பாவாய் நிற்பவனை - அதுவும், இதுவும் இல்லாத மோன வெளியை தனதாக்கி ஆகாயப் பெரு வெளியாய் நிற்பவளை பற்றி உனக்கு என்ன தெரியும்?"

மூச்சு விடாமல் பேசியவனையே இருவரும் மூச்சு பேச்சின்றி பார்த்துக் கொண்டு நின்றனர். அனுபவம் இல்லாத இளசுகளுக்கு அகண்ட பேரொளியாய் நிற்பவனின் அடிமுடி தத்துவங்கள் பற்றி என்ன தெரியும்? விழித்தனர். மகேஷின் ஆண்மனம் விழித்துக் கொண்டது. என்ன இருந்தாலும் ஜமீன் ரத்தம் ஓடும் உடம்பல்லவா! அந்தத் துணிச்சல் இல்லாமல் போகுமா!

மஞ்சு பெண்மையின் பேதமையில் அவனுக்கு பின்னால் தள்ளி நின்று கண்களில் பயம் காட்டினாள்.

"ஐயா, நீங்கள் யார்?"

அவன், தன் கூரிய கண்களில் பார்வை தீட்சண்யத்தைக் காட்டினான்.

"நீ நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லவில்லையே?"

"என்ன கேள்வி?"

"அதற்குள் மறந்து விட்டாயா! நல்லபிள்ளையப்பா"

"என்ன கேள்வி கேட்டீர்கள்?"

"உன் ஜமீனை எனக்குத் தருவியா?"

"நான் யார் அதைத் தருவதற்கு?"

"நீதானே ஜமீன்தார் ஷண்முகத்தின் மகன் ஷண்முக மகேஷ் பூபதி"

"நான் வெறும் மகேஷ் தான்"

"கன்னித்தாய் பாலம்மா வளர்த்த மகேஷ் நீதான். அதற்காக பெற்ற ஷண்முகத்தையும் சங்கரி நாச்சியையும் இல்லையென்று சொல்லிவிட முடியுமா?"

"என் அம்மாவைத் தெரியுமா?"

"இப்பக் கூட உன்னைப் பார்த்துக்கிட்டு உன்னைந் சுத்திச் சுத்தி வராளே" என்ற வண்டிக்காரன் மீண்டும் சிரித்தான்.

ஆச்சரியத்தில் மகேஷின் கண்கள் விழுந்து விடுவன போல் தெறித்து நின்றன.

"மகேஷ் பூபதி"

"என் பெயர் மகேஷ்"

“பூபதினு நான் வச்ச பேர். அந்த மரத்தையே பார்”

“அங்கே என்ன இருக்கு?”

“பார்.... தெரியும்“

மஞ்சுவும் - மகேஷும் பார்த்தார்கள். கண் கொட்டாமல் பார்த்த பொழுது மரத்தின் ஒரு பக்க பெரிய கிளை வெள்ளை வெளேரென பனி படர்ந்தாற் போல படர்ந்து, உள்ளேயெல்லாம் வெண் பஞ்சு வடிவமாக ஒரு பெண் வடிவம் கிளையில் சாய்ந்து நிற்க..

மஞ்சு மகேஷின் கையைப் பற்றினாள். அவன் பயப்படாதே என்ற தினுசில் ஒரு கரத்தினால் அவள் கையை அழுத்தினான். மகேஷ். பார்த்துக் கொண்டே நின்றான்.

“அம்மா... அம்மா...” என்று கூவினான். “பலமா கூப்பிடு மகேசு. அதைக் கேட்கத்தான் அஅவ ஆவி துடிச்சிட்டு அலையுது. துடிக்கத் துடிக்க உன் நினைவுலேயே செத்தா அவ. தன் மகன் தன்னை நினைக்கிறான்ங்கள என்ற உணர்வே அவளை அமைதிப்படுத்தும்.

“அம்மா, அம்மா” என்று கண்ணீர் வடிய அழைத்தவன், கண்களைத் துடைத்துக் கொண்டு “ஐயா, நான் அழைப்பது அம்மாவின் ஆவிக்குக் கேட்குமா?” என்று கேட்டான்.

“வானத்துல எத்தனையோ அதிசயங்கள் ஒலிச் சேர்க்கைகள், கோள்களின் சங்கமங்கள் எல்லாம் மனித சக்திக்கு அப்பாற்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன. விந்தைகளைக் காட்டி வினோதங்களை நடத்துபவனுக்குப் பெயர்தான் இறைவன். நீ மனத்தால் உருவகப்படுத்திப் பார்க்கிறாய். அது உருவம். அதிசயங்கள் நடைபெறுகின்றன. அது அரூப சக்தி.

“அது எனக்குப் புரியாதா?”

“அது சாதாரண மனிதர்களுக்கு சாத்தியம் இல்லை. உனக்குள் இருக்கும் சக்தியை உன்னால் தட்டி எழுப்பிப் பார்க்க முடிய வேண்டும். அது சாத்தியமில்லை. அப்படி ஒரு சக்தி இருக்கு என்பதே உனக்குத் தெரியாதே. இதெல்லாம் உனக்குத் தேவை இல்லை தம்பி. உலகத்தோட ஒட்டி நடந்துக்கோ” என்று சொன்ன பொழுது மலைப் பிரதேசத்திற்கே உரிய ஒரு குளிர்காற்று சுழன்று அடிக்க, அங்கே மனோரஞ்சித மலர்களின் வாசம் குபீரென்று வீசியது.

“ஹை... மனோரஞ்சித பூ வாசனை” என்று கூவிய மஞ்சு, குழந்தைத்தனமாக மகேஷின் தோளைத் தட்டினான்.

“இங்கே வா... உனக்கு மனோரஞ்சிதம் ரொம்பப் பிடிக்குமா?”

“எனக்கு மனோரஞ்சிதம்னா உயிர். சென்னையில் ஒரு பூ பத்து ரூபா. அதுவும் பழைய பூ.... தலையில வச்சாப் போதும்.. இதெல்லாம் உதிர்ந்து போயிடும்“ என்றவள். வண்டிக்காரன் சுட்டிக்காட்டிய மரக்கூட்டங்களை பார்த்தாள்.

மரங்களில் உச்சியில் ஏறிய மனோரஞ்சித கொடிகள் போல் படர்ந்து பொன் மலர்களாகப் பூத்துக் கிடந்தன.

“பறிக்க முடியாதா?”

கண்களின் பார்வையைக் கூர்மையாக்கி மரக்கிளைக்கிடையே உற்றுப் பார். கயிறு கயிறாக் கெடக்கே.. அது என்ன?”

அவள் பல நிமிடங்கள் பார்க்க அவைகள் அசைவதுடன் ஒன்றொன்று மெல்லப் படம் விரித்து ஊர்ந்து கிளைகளில் பின்னிப் பிணைய...

“ஐயோ.. பாம்பு” என்று வீரிட்டாள்.

“பறிக்க முடியாதுனு புரிஞ்சுக்க தாயி...

மாமரத்து அடர்த்தியில ஏதோ ஒரு பாம்பு ஏறி இருப்பிடம் போல வச்சுக்கும். ஆனா மனோரஞ்சிதக் கொடியோட இத்தனை பாம்புகள் இருக்குன்னா... யோசிச்சுப்பார். பூக்களின் மணம் பாம்புகளை வசியப்படுத்துனு புரியுது இல்ல.”

மஞ்சு அவரைத் திரும்பிப் பார்த்தாள்.

“பாம்புகளுக்கு மலர்களின் மணத்தை நுகரும் சக்தி உண்டா”

வண்டிக்காரன் சிரித்தபடியே “சர்க்கரையோட வாசனை உனக்குத் தெரியுதோ இல்லையோ எறும்புக்குத் தெரியும். சாணியின் பழய வாசம் புழுக்களுக்குத் தெரியும். மழையின் ஈரச் சொதப்பல் கறையானுக்குத் தெரியும். காலனின் வருகை நாய்க்கும், பசுவுக்கும் தெரியும். இறைவனின் சானித்யம் பக்தனுக்குத் தெரியும்“ என்று வண்டிக்காரன் சொன்ன பொழுது மஞ்சுவுக்குத் தன் வீட்டுப் புகைப்பட பெரியவர் நினைவுக்கு வர கண்களை மூடி கை குவித்து வணங்கினாள்.

“பார்த்தியா தாயே... மனசு எங்கேரோ போய் வணங்கச் சொல்லுது.. இது இது தான் பக்தி. சரி.. புறப்படுங்க.. இன்னும் பத்து நிமிடத்துல மழை கொட்டப் போகுது” என்றான் வண்டிக்காரன்.

புகையுருவம் மறைந்து பசுமை இலைகள் செறிந்த கிளைகளைப் பார்த்தபடி நின்றன மகேஷ்... அது அம்மா தானா?

“மகேஷ் மழை வர மாதிரி இருக்கு. வாங்க போகலாம்“. தோளைப் பிடித்து உலுக்க கனவிலிருந்து விழித்தவனாக நினைவுக்கு வந்தான் மகேஷ்.

“மகேஷ் பூபதி, புறப்படுங்க. வெட்டவெளி தானேனு பக்கம் பார்க்காம பேசக் கூடாது.. இன்னிக்கு உங்களுக்கு சோதனை ஆரம்பம்“ என்று வண்டிக்காரன் சொல்ல.. பயம் அவர்கள் கண்களில் குடிகொண்டது.

“எல்லாம் நல்லபடியா முடியும். ஆனா ஜாக்கிரதையா இருக்கணும்“

குழப்பத்துடன் நடந்தார்கள். மழை பன்னீர் தெளிப்பாகத் தூறிக் கொண்டிருந்தது. மகேஷும் - மஞ்சுவும் சிறிது தூரம் சென்று திரும்ப, பின்னால் வந்த வண்டிக்காரனைக் காணவில்லை. மழை பெரும் தூறலாக சடசடக்க இருவரும வேகமாக மாளிகையை அடைந்தனர்.

மழைக் காற்றின் சில்லிப்புக்கு ஒரு காப்பி குடிக்க வேண்டும் என்ற ஆவல் கிளர்ந்தது. இருவரும் உணவு கூடத்தை நோக்கி நடந்த பொழுது எதிரே வீராசாமி வந்தார்.

“காப்பி, குடிக்கணும்“

உணவுக் கூடத்தில் உட்கார வைத்தவர் சமையற்காரருக்கு காப்பி தரும்படி உத்தரவிட்டார்.

“ஜமீன்தாரிணி அம்மாவுக்கு உடம்பு சரியில்ல” என்ற செய்தியை வீராசாமி சொல்ல “என்னாச்சு?” என்று பதறிப் போனார்கள் மஞ்சுவும், மகேஷும்.

குரலைத் தாழ்த்திக் கொண்ட வீராசாமி “குளியறையில் ஜமீன்தாரிணி அம்மா பெரிய ஜமீன்தாரிணி சங்கரி அம்மாவை ஆவியுருவில பார்த்துட்டு அலறி அடிச்சுட்டு ஓடி வந்துட்டாங்க. அந்த பயத்துல பிரஷர் ஏறிடுச்சு. டாக்டர் வந்து ஊசி போட்டு இருக்கார்.

காப்பி வந்தது. மழைக்குளிருக்கு இதமாக இருந்தது.” நாங்க பார்க்கலாமா!”

“அவங்க அறைக்கு யாரும் போகக் கூடாது. உங்க அறைக்குப் போய் ஓய்வெடுங்க. சாப்பாட்டு டைம்ல கூப்பிடறேன். என்ன செய்யலாம்னு யோசிங்க.

இருவரும் அறைக் கதவைத் திறந்து உள்ளே வந்தார்கள். என்ன திட்டம் போடுவது என்று தெரியவில்லை. படுக்கை தலையணையைக் நகர்த்திய பொழுது குப்பென்ற மனோரஞ்சித பூக்களின் மனம் பொன் பூக்களாகக் கிடந்தன.

ஜமீன்தாரிணி சாந்த லட்சுமிக்கு மதியம் தான் ஊசியின் வேகம் தெளிந்து தெளிவு பிறந்தது. அறைக்கே சாப்பாட்டைக் கொண்டு வரச் சொல்லி சாப்பிட்டாள். மகேஷூம் - மஞ்சுவும் உணவு கூடத்திற்கு வந்து சாப்பிட்டனர். அப்போது கிடைத்த தனிமையில் மண்டபத்தில் நடந்த அதிசயங்களையும், படுக்கையில் கிடந்த மனோரஞ்சித மலர்களைப் பற்றியும் கூறினார்கள்.

“உங்களைச் சுற்றி ஏதோ நடக்கிறது. பேசாமல் வக்கீலை வைத்து உங்களுக்கு உரிய பதவியை பெறுவதுதான் சிலாக்கியம்னு எனக்குத் தோன்றுகிறது” என்றார்.

“ஊருக்குப் போயிரலாமா மகேஷ்?” என்று பயந்த குரலில் கேட்டாள் மஞ்சு.

“அம்மா என்னைச் சுற்றிச் சுத்தி வராங்க மஞ்சு. பொறுத்துப் பார்க்கலாம். நம்மை மீறி என்ன நடந்துடும்? வண்டிக்கார ஐயா சாமான்யப்பட்டவரா தோணலை. அவர்கிட்ட ஏதோ அபூர்வமான சக்தி இருக்கும்மா. எனக்கு உரிமையுள்ள சொத்தை நான் ஏன் விட்டுட்டுப் போகணும்?”

அவர்கள் இப்படி பேசிக் கொண்டே சாப்பிடும்பொழுது உணவு கூடத்தின் வாசலில் சரசரவென்ற சப்தம் கேட்க... வீராசாமி அள்ளிய சோற்றை இலையிலேயே வைத்துவிட்டுப் பார்த்தார்.

“என்ன வீராசாமி? என்ன பார்க்கிறீங்க?” என்றபடி இரண்டு தடிதடியான இளைஞர்கள் உள்ளே நுழைந்தனர். அட்டகாசமான உடைகள்.. பிரிமனை பிரிமணையான சங்கிலிலகள்.. கையில் கங்கணம்.. விரல்களில் பளிச்சிட்ட மோதிரங்கள்.. முறுக்கு மீசை அகன்ற நெற்றியில் புரளும் முடிக்கற்றைகள்.

எச்சில் கையுடன் வாங்க.. வாங்க... என்றபடி எழுந்து விட்டார் வீராசாமி.

“சாப்பிடுங்க.. சாப்பிடுங்க” என்ற அவர்கள் இரண்டு நாற்காலிகளில் அமர்ந்து கொண்டு “யாரய்யா அங்கே! சாப்பாடு கொண்டு வாங்க” என்று உரத்த குரலில் கட்டளை இட்டனர்.

“இலை போடுங்கய்யா” என்று வீராசாமியும் குரல் கொடுத்தார்.

அவர்கள் பார்வை மஞ்சு. மகேஷ் மீது பதியபுருவம் வளைத்தனர். “இவங்க யாரு?” என்று கேட்டபடி தலை வாழையை சமையற்காரர் போட, தண்ணீர் தெளித்துக் கொண்டனர்.

“இவங்க நம்ம மகிழ மலையைப் பற்றி சிவன் கோயில், மூலிகைனு ஆராய வந்திருக்காங்க” என்ற வீராசாமி விட்ட சாப்பாட்டைப் பிசைய ஆரம்பித்தார்.

“இது யாரு?” என்று இருவரில் சற்று இளையவனாக இருந்தவ் மஞ்சுவைச் சுட்டிக் காட்டினான்.

“என் ஒய்ப்”

“ஓ.... புருஷனும் பெண்டாட்டியுமாகவா கிளம்பி வந்திருக்கீங்க?” என்று பகபகவென சிரித்தவன், “கழுத்துல உள்ள தாலிச் சரட்டின் மஞ்சளே உலரல்ல. வந்தமா, மலை மேல ஹனிமூன் கொண்டாடினோமா, போனமானு இல்லாம இதென்ன பைத்தியக்கார ஆராய்ச்சி” என்றவன், அப்பளத்தை நொறுக்கி வாயில் திணித்துக் கொண்டான்.

அடுத்தவன் அன்னத்தை பெரிய குழியாக்கி அதில் சாம்பாரை நிரப்பிக் கொண்டு “நமக்கு இதெல்லாம் தேவை இல்ல. வந்த வேலையை கவனி” என்றவன், “ஏன், வீராசாமி பெரியம்மா எங்கே? என்று கேட்க, வாய்ச் சோற்றை அவசரமாக விழுங்கிய வீராசாமி “உடம்பு சரியாயில்ல. படுத்துட்டு இருக்காங்க” என்றார்.

அவர்கள் வேகமாக சாப்பிடத் தொடங்கினர். மகேஷ் தன் ஜமீன் கம்பீரத்தை இழக்கத் தயாராக இல்லை.

“வீராசாமி, இவங்க யார்னு எனக்குச் சொல்லலையே?” என்று கேட்டான் மகேஷ்.

“இவங்க ஜமீன்தாரின் ஒன்றுவிட்ட அண்ணன் - தம்பி மகன்கள்” என்று சொல்ல “ஏன்ய்யா... மென்னு முழுங்கறீங்க. நாங்க தான் ஜமீனின் வாரிசுகள்” என்றவர்கள் பாயசத்தை விகாரமாக உறுஞ்சினர்.

முழுங்காத வாயுடன் “வருங்கால ஜமீன்தார் நான். இவன் சின்ன ஜமீன்தார்” என்று பெரியவன் சொல்ல சின்னவன் சீற்றத்துடன் “நான் தான் ஜமீன்தார்னா ஆகாதோ” என்று சீறினான்.

“கோவிச்சக்காதேடா தம்பி. நான் வயசுல பெரியவன்டா” என்று தம்பியின் தோளில் கையை வைத்தவன், இப்ப உரிமை போராட்டம் நடத்தற சமயமில்ல. நீயும் நானும் சண்டை போட்டுக்கிட்டா காத்திருந்தவன் பெண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டுகிட்டு போன மாதிரி அந்த சீலன் ஜமீன்தாராகிடுவான். நீயும் நானும் கையைக் கட்டிட்டு நிக்கணும்“ என்று சமாதானப்படுத்தினான்.

“விட்டுருவமா?” என்று சின்னவன் மீசையை முறுக்கினான்.

மகேஷும்-மஞ்சுவும் கை கழுவிட்டு தங்களறையை நோக்கி நடந்தார்கள்.

“எனக்கு பயமாக இருக்கு மகேஷ்”

சின்னதாக சிரித்த மகேஷ்” எதுக்கு பயப்படறே? பாலம்மா என்னைத் தொட்டில் பிள்ளையா வளர்த்துட்டாங்க. இப்ப சினிமா மாதிரி சம்பவங்கள் என் வாழ்க்கையில் நடக்குது. ரெண்டு வில்லன்கள் முளைச்சிருக்கான்கள். நான் என்ன சிவாஜியா! எம்.ஜி.யாரா! கத்தி எடுத்து டிஷும் டிஷும்னு சண்டை போட..” என்றான்.

“அப்ப இந்த ரெண்டு பேர்ல யார் நம்பி------ போட்டினு சொல்ற பி.எஸ்.வீரப்பா மாதிரி கண்களில் வெறி மின்ன இருக்கான்கள்.

“அப்ப நான் யார்? பத்மினியா! பானுமதியா? சாவித்திரியா?”

“யாருமே இல்லை. என் இதய ராணி. மஞ்சு பாஷிணி.” என்றவன், யாருமே அருகில் இல்லாத துணிச்சலில் அவளைத் தோளோடு இறுக்க அணைத்துக் கொண்டான்.

“ஊஹூம், இப்ப இதெல்லாம் கூடாது” என்று மஞ்சுவின் வாய் முனகினாலும், உடம்பு அவனுடைய அணைப்பில் கட்டுண்டது.

அரை நொடியில் இருவரும் சமாளித்து விலகிப் போய் அறையினுள் நுழைந்தனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி விதிர்க்க வைத்தது. கட்டிலில் பூச்சரமான மனோரஞ்சிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு சாந்தலட்சுமி சர்வ அலங்கார பூஷிதையாக ஜமீன்தாரிணி தோரணையுடன் உட்கார்ந்துக் கொண்டிருந்தாள்.

பூட்டி இருக்கும் அறைக்குள் எப்படி வந்து அமர்ந்திருக்கிறாள்! என்று இருவரும் விழித்தனர்.

“அம்மா, நீங்க எப்படி இங்கே?” என்று குழறினான் மகேஷ்.

“வாடா, என் மகனே... நீ தான் ஜமீன் வாரிசுனு புரிஞ்சுக்கிட்டேன்டா”

என்றவள், எழுந்து வந்து அவனை இறுக்க அணைத்துத் தழுவி உச்சிமுகர்ந்து, கன்னம் கிள்ளி முத்தமிட்டாள். பெரிய மலர்மாலைத் தன்னை தழுவியது போல உணர்ந்தான் மகேஷ்.

அம்மா... அம்மா.. “ என்று தழுதழுத்தான்.

“என் கண்ணே.. என் கண்ணாரமுதே” என்று சாந்தலட்சுமி கொஞ்சும் பொகுது தடதடவென்று அறை கதவு தட்டும் சத்தம் கேட்டது.

அணைப்பு அகல மகேஷ் கதவைத் திறந்தான். தோளும், தொந்தியும் குலுங்க, மூச்சிரைக்க பரபரப்புடன் நின்று கொண்டிருந்த வீராசாமி “தம்பி, ஜமீன்தாரிணி அம்மா மூச்சு பேச்சு இல்லாம கெடக்காங்க. அந்த ரெண்டு பசங்களும் பக்கத்துல இருக்காங்க. சமயம் கிடைச்சா ஏதாவது செஞ்சுடுவாங்க. நீங்க ரெண்டு பேரும் வாங்க டாக்டர் வந்துடுவாங்க” என்றபடி மூச்சிரைக்க ஓடினார்.

திகிலடித்த நெஞ்சைப் பிடித்தபடி இருவரும் அறை உள்ளே பார்க்க அங்கே சற்றுமுன் இருந்த சாந்த லட்சுமி இல்லை. இருவரும் சாந்த லட்சுமி அறையை நோக்கி ஓடினார்கள். அங்கே சாந்த லட்சுமி மூச்சு இருக்கா இல்லையா என்னும்படி கிடந்தாள். சாந்த லட்சுமியைப் பார்த்த இருவரும் பயந்து போனார்கள்.

அடுத்த நாளே ஹரிநாத்தின் அன்பு மகள் பவானி முதல் நாள் இவளா ஜுரத்தில் கிடந்தாள் என்று சந்தேகப்படும்படி தேறி எழுந்து விட்டாள். மந்தாதான் தன் அம்மா என்ற உறவில் வீட்டில் தங்கப் போகிறாள் என்ற புத்துணர்ச்சியே காரணமாக ஆயிற்று. அந்த வீட்டு அத்தை பாட்டிக்கும் தன் பொறுப்பைச் சுமக்க வீட்டுக்கு ஒரு எஜமானி வரப் போகிறாள் என்பது மகிழ்ச்சியே.

“நான் அப்ப கிராமத்துக்கும் போயிரட்டுமா?”னு பெட்டியில் துணி அடுக்க ஆரம்பித்தாள்.

“நல்லா இருக்கே. எப்பவும் நீங்க இங்க தான் இருக்கணும்.” என்று மந்தா தடுத்தவுடன், “எனக்கும், ஹரிக்கும் அம்மாவா, பவானிக்கு பாட்டியா, வீட்டுக்குப் பெரியவங்களா இங்கே தான் இருக்கணும்“ என்றதும், அத்தையம்மா மனம் நெகிழ்ந்து போனாள்.

தனக்கொரு தாய் கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் நடமாடத் தொடங்கி விட்டாள் பவானி அவள் உடம்பில் புதுத்தெம்பு ஊறியது. ஹரியின் நெஞ்சில் புது நிம்மதி ஊற்று பொங்கிப் பிரகாசித்தது.

“ஹரி, இதை மஞ்சு, மகேஷுக்கு சொல்லிரலாமா?”

“சஸ்பென்ஸா இருக்கட்டுமே, சிக்னலே கிடைக்கல்லையே?” என்றான் ஹரி.

இப்பொழுதும் முயற்சி பண்ணினாள் மந்தா. மகேஷும், மஞ்சுவும் சாந்தலட்சுமி அறையில் நின்று டாக்டர் இது கோமா ஸ்டேஜா என சந்தேகப்பட்டதைக் கேட்டு அதிர்ந்த நேரம் அது சிக்னல் கிடைக்கவே இல்லை.

“லைன் கிடைக்கல்ல. என்ன பண்றது” கால் டாக்ஸியை ஏற்பாடு பண்ணிக்கலாம். பவானியையும், அத்தையையும் அழைச்சுட்டே சித்தர் ஸ்வாமி பீடத்துககுப் போயிரலாமா! பவானிதான் உடம்பு தேறிட்டாளே... அவர் வாக்கைக் கேட்டா நமக்கு நல்லது நடக்கும். நிம்மதியும் கிடைக்கும்.”

மந்தா உடனே கிளம்ப ஆயத்தப்பட்ட, ஹரி கால் டாக்ஸிக்கு ஏற்பாடு பண்ணினான். பவானிக்கு தேவையான பொருட்களுடன் புறப்பட்டு விட்டனர். மதிய உணவையும் சற்று முன்னதாக முடித்துக் கொண்டு புறப்பட்ட அவர்கள் சித்தர் பீடம் போய்ச் சேர மாலையின் மந்த மாருதம் தவழும் நேரமாகி இருந்தது.

அவர்கள் வரப் போவது ஞான திருஷ்டியில் உணர்ந்தோ என்னவோ சுவாமிகள் பீடத்தின் திண்ணையில் வந்து அமர்ந்திருந்தார். சமீபத்தில் கொஞ்சம் உடல்நலம் குன்றி தேறி மீண்டு வந்த களைப்பு உடம்பில் தளர்வைக் கொடுத்திருந்தது. சீடன் ஒருவன் பசும்பாலை சுண்டக் காய்ச்சி குங்குமப் பூவும், பனங்கற்கண்டும் கலந்துக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனான்.

“சங்கரா நில்லு”

சீடன் நின்றான்.

“இப்ப என்னைப் பார்க்க நாலு பேர்கள் வரப் போறா. சுண்டக் காய்ச்சிய பாலும், வெல்லம் கலந்த பழத் துண்டங்களும் தயாராக இருக்கட்டும். இரவு உணவும் சித்தமாகட்டும்“ என்று உத்தரவிட்ட பொழுதே மந்தா, ஹரி மற்றும் இருவரும் வந்து காரிலிருந்து இறங்கினர்.

பழத்தட்டுக்களை வைத்து விரியும் மந்தாவும் வணங்கி அறிமுகம் பேச தொடர்ந்ததும், “நேத்து ராத்திரி கல்யாணம் நிச்சயமாயிடுச்சு போல என்று சொன்னதுமே ஸ்வாமிகளை அதிர்ந்து பார்த்தனர்.

## 23

அவர்களைப் புன்னகையுடிடின் பார்த்தார். சுவாமிகள் பழத்தட்டுக்களை வைத்து நமஸ்காரம் பண்ணியவர்களை ஆசிர்வாதம் பண்ணினார். ஹரியும் மந்தாவும் சுவாமிகளின் தீர்க்க தரிசனத்தில் ஆச்சர்யப்பட்டுப் போயிருந்தார்கள்.

“நல்ல முடிவுதான் எடுத்திருக்கீங்க. மகேஷ், மஞ்சு கல்யாணம் முடிஞ்சு மகிழ மலைக்குப் போயிருக்காங்க போல இருக்கே?” என்று அவர் சொன்னதும், இன்னும் அதிர்ந்து போனார்கள் இருவரும்.

“அவங்களைப் பத்தின கவலைதான் சுவாமி எங்களுக்கு ஒரு தகவலும் தெரியல்ல. நாராயண ஸ்வாமி ஐயா பேசிட்டு தகவல் சொன்னாரு, என்ன பண்றதுனு புரியாம தவிச்சிகிட்டு இருக்காங்கனு சொன்னாரு. உங்களைப் பார்க்க அவரு தான் சொன்னார்” என்று சொன்னதை சுவாமிகள் கேட்டுக் கொண்டார்.

“இங்கிருந்து கவலைப்பட்டு என்ன பண்ணப் போறீங்க?” என்று சுவாமிகள் கேட்டதும் விழித்தனர்.

சீடன் ஒருவன் சுண்டக் காய்ச்சிய பாலையும், வெல்லம் பிரட்டிய பழத்துண்டங்களையும் கொண்டு வைத்தான்.

“சங்கரா.. எனக்கு எங்கேடா பழம்?” என்று சுவாமிகள் கேட்க” கொண்டு வரேன் சுவாமி என்று ஓடிப்போன சீடன் சங்கரன் இலைத்துண்டில் பழத்துண்டுகளை வைத்துக் கொண்டு வைத்தான்.

“சாப்பிடுங்க” என்றார் சுவாமிகள் அவர்களாகவே கேட்கும் முன் சுவாமிகளே பல விஷயங்களைக் கேட்டு ஆச்சர்யப்பட வைத்தார். ஒரே இடத்தில் உட்கார விரும்பாத குழந்தை பவானி மெல்ல தோட்டத்துப் பக்கம் நழுவினாள். அவளுக்குத் துணையாக அத்தைப் பாட்டியும் போய்விட்டாள்.

அவர்கள் வந்த பொழுதே மாலை நேரமாகி விட்டிருந்தது. பேசி முடித்து இரவு உணவை அங்கேயே முடித்துக் கொண்டனர். ஹரிக்கும், மந்தாவிற்கும் இன்னும் பேச்சு முடியவில்லை என்பது போல ஓர் உணர்வு அலை கழித்தது. கிளம்பும் சமயம் நெருங்கவே விடைபெற்றுக் கொள்ள முயன்றனர்.

“என்ன பண்ணனும்னு தெரிஞ்சுக்காம கிளம்பிட்டீங்களா? என்று

சுவாமிகள் தன் புன்னகையுடன் கேட்டார்.

சமாளித்துக் கொண்ட இருவரும் “நீங்க என்ன சொல்றீங்களோ அதையே கேட்கிறோம் சுவாமி” என்றனர்.

“நீங்க நாளையே கிளம்பி மகிழ மலைக்குப் போங்க. ஜமீன்தார் கொடுத்த கடிதாசியோட பண ரசீதுகளையும் எடுத்துட்டுப் போங்க. இப்பவே மகேஷ் யாருனு அங்கே தெரிய வந்திடும். புது அனுபவங்களைக் கண்டு மிரள வேண்டாம். குழந்தையை அழைச்சிட்டுப் போங்க. அத்தையம்மா வயசானவங்க. பத்திரமான இடத்துல தங்க வச்சிட்டுப் போங்க” என்றார் சுவாமிகள்.

“மகேஷ்க்கு ஒண்ணும் ஆபத்து வராதே” புன்னகை மாறாத சுவாமிகள் “நாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம்னு அப்பர் சுவாமிகள் பாடலையா? சிவனை சிந்தையில் வைப்பவர்களுக்கு ஏது குறை” என்றவர், திருநீற்றுப் பையிலிருந்து திருநீற்றை எடுத்து அவர்கள் நெற்றியில் இட்டார்.

“ஓம் நம சிவாய.. ஓம் நமசிவாய” என்று ஜபிக்கத் தொடங்கினார்.

அந்த இரவு ஹரிக்கும்-மந்தாவிற்கும் தூக்கமில்லாத இரவாகியது. எல்லா ஏற்பாடுகளையும் கவனிக்க வேண்டியதாயிற்று. புறப்பட ஆயத்தமானதுடன், நகைகளை மறுநாள் லாக்கரில் பத்திரப்படுத்த வேண்டியதாயிற்று. ஒருநாள் தாண்டி மறுநாள் தான் கிளம்பினார்கள்.

அத்தையம்மாவை தனியே விடாமல் சேவை மையத்தில் அன்னம்மாவின் பொறுப்பில் தங்க வைத்தார்கள். ஹரியுடன் போகிறோம் என்ற புதுப் பூரிப்பை விட மகிழ மலையின் அனுபவம் எப்படி இருக்குமோ என்ற பயம் கலந்த உணர்வு அவளை ஆட்டிப் படைத்தது.

அவர்கள் வரப் போவது தெரியாத மஞ்சுவும் - மகேஷூம் சாந்த லட்சுமி ஜமீன்தாரிணி மயங்கிக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்கள். பங்காளி வாலிபர்கள் இருவரும் வெளிப்படையாக தாங்கள் தான் ஜமீன் வாரிசுகள் என்ற உரிமையை நிலைநாட்ட அதிகாரம் காட்டினார்கள்.

வீராசாமி என்ன செய்வது என்று புரியாமல் தவிப்புடன் அலைபாய்ந்தார்.

“இப்ப ஒண்ணும் சொல்லாதீங்க. ஜமீன்தாரிணி அம்மா என்ன எழுதி வச்சிருக்காங்கனு தெரியல்ல. இவங்க அண்ணன் மகன்

*சீலன்தான் தான் வாரிசுனு சொல்லிட்டு இருக்காரு." என்றவர், இந்த சமயத்தில் புரளியை கிளப்பி விடுவது நல்லது என்று எண்ணினார் போலும்.*

*"ஏன் வீராசாமி. அவங்க எப்படி வாரிசாக முடியும்? ஜமீன்தாரோட வாரிசுகள் நாங்க. சட்டம் எங்களுக்குத்தான் செல்லுபடி யாகும். நாங்களும் வக்கீல்களைக் கண்டு பேசிட்டுத்தான் வந்திருக்கோம். விட்டுருவமா எங்க சொத்தை... யார் சொத்துக்கு யார் உரிமை பாராட்டறது? நாங்க ரெண்டு பேர் வாரிசா இருக்கோமில?" என்று பி.எஸ்.வீரப்பா சாடையில் இருந்தவன் மீசையைத் திருகினான்.*

*எல்லாமே மஞ்சு - மகேஷ் எதிரேயே நடந்தது. மகேஷ் ஒன்றும் அறியாதவன் போல முகத்தை அப்பாவித்தனமாக வைத்துக் கொண்டு நின்றுக் கொண்டிருந்தான்.*

*மருத்துவரின் வைத்தியத்துக்குக் கட்டுப்படாத சாந்த லட்சுமியின் மயக்கம் மறுநாளும் நீடித்தது. இனி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதுதான் நல்லது என்று மருத்துவர் கூறிக் கொண்டிருந்த சமயம்.*

*சீலன், தன் தந்தையுடனும், தாத்தாவுடனும் வந்து நின்றான். "எங்கே என் அத்தை? அப்பா இவன் தானப்பா ஜமீன் வாரிசாம்" என்று மகேஷின் சட்டையைப் பிடித்து உலுக்க வந்தான். மகேஷ் செய்வதறியாமல் நிற்க, வீராசாமி வேமாகத் தடுக்க முயல, மேல் சீலிங்கில் இருந்த அலங்கார லாந்தர் விளக்கு கீழே விழுந்து நொறுங்கியது.*

*ஏதோ ஒர அதிர்ச்சியில் சீலன் பிடியை நழுவ விட மகேஷ் நகர்ந்து சட்டையை உருவி சுருக்கும் நீக்கிய தருணம், அலங்கார விளக்கு சீலனின் கையில் விழுந்தது. அவ்வளவு உயரத்திலிருந்து விழுந்ததும் அவன் துடித்துப் போனான். அப்பனும், தாத்தனும் ஓடி வந்து சீலனின் கரத்தைப் பற்ற, வலியில் துடிக்க, வலக்கை மணிக்கட்டிற்கு மேல் எண்ணெயில் ஊற்றிய அப்பம் மாவாக வீங்கியது.*

*"ஐயா, வைத்தயரே, என் பேரனுக்கு என்னாச்சுனு பாருங்க" என்று தாத்தா கலவரப்பட்டான்*

*மருத்துவரோ "முதல்ல, ஆம்புலன்ஸ்க்கு ஏற்பாடு பண்ணணும். ஜமீன்தாரிணி அம்மாவை மருத்துவமனையில் சேர்க்கணும் என்றபடி சீலனின் கையைப் பரிசோதித்தார்.*

*"எக்ஸ்ரே எடுத்துப் பார்க்கணும்" என்று ஒரு ஊசியைப் போட்டார்.*

சீலனின் அப்பனுக்கும், தாத்தனுக்கும் ஜமீன்தாரிணி சாந்தலட்சுமியின் நீடித்த மயக்க நிலை தெரிய வந்தது. இது என்னடா? பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதையாய் ஆயிற்றே? என்று அதிர்ந்து போய் நின்றார்கள். ஜமீன்தாரிணி சாந்தலட்சுமி இப்படி நினைவற்றுக் கிடந்தால் எப்படி சீலன் மகிழமலைக்கு ஜமீன்தாராக ஆக முடியும்!

"அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்;" என்பதை மறந்து செயல்பட்டவர்கள் இன்று இல்லாவிடினும் ஒருநாள் நீதியால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தானே. இவர்கள் சங்கரி நாச்சியாரை இரக்கமின்றி துடிக்கத் துடிக்கத் தண்டித்ததை இறைவன் கணக்கெடுக்காமல் இருக்க அவனுக்கு என்ன அம்னீஷியாலா!

இவர்கள் துடிப்பு இப்படி என்றால் பங்காளி இருவர்கள் துடிப்பு வேறு மாதிரி இருந்தது. பக்கத்தில் இருக்கும் இந்த ஆராய்ச்சி மாணவன் வாரிசா? அது எப்படி சாத்தியம்? நம்பமுடியவில்லை. தின்று தின்று மூளையை மங்க வைத்துக் கொண்டிருந்த அவர்களால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

அரை மணி நேரத்தில் ஆம்புலன்ஸ் வர, சீலனின் குடும்பமும், பங்காளிகள் இருவரும் ஏறிக் கொள்ள, மஞ்சுவும் மகேஷூம் தயங்கினார்கள்.

"தம்பி, ஏறிக்குங்கு. நீங்கதான். அம்மாவை கண்ணிமைக்காமல் பார்த்துக்கணும். ரெண்டு பக்கமும் கொலைகாரப் பாவிங்க. ஒண்ணு செத்தா தேவலைனு நினைக்கறவன். இன்னொண்ணு பிழைக்கணும்னு நினைக்கறவன். ஒண்ணுக்கு ஒண்ணு அடிச்சுக்காம இருக்கணும். உரிமையுள்ள நீங்க பக்கத்துல இருக்கணும்" என்று அவர்களையும் ஏற்றி விட்டார் வீராசாமி.

அதைக் காதில் வாங்காமல் ரெண்டு பக்கமும் ஏறிவருவதையும் உணராமல் மரக்கட்டையாய் கிடந்தாள் சாந்தலட்சுமி, பெற்றவனுக்கும், உடன் பிறந்தவனுக்கும் கண்ணீர் சுரந்தது. சீலனோ வலியில் கையைப் பிடித்துக் கொண்டு துடித்தான்.

"தம்பி, ஆராய்ச்சி பண்ண வந்த உங்களுக்கு ஏன் தம்பி இந்த வேலை?" என்று பங்காளிகளில் ஒருத்தன் தடுக்கப் பார்த்தான்.

"அவரு காலேஜூப் படிப்பு படிச்சவருடன் டாக்டர்கள் அவருக்குத் தான் புரியும். நம்ம மருத்துவமனைதானே?" என்று வீராசாமி கூறியதை மற்றவர்களால் தடுக்க முடியவில்லை.

மலையின் மறுபக்க அடிவாரத்தில் ஜமீனுக்குச் சொந்தமான மருத்துவமனை ஒன்று இருந்தது. பல ஸ்பெஷலிஸ்ட்டுகள் அடிக்கடி வரும் வண்ணம் ஜமீன்தார் ஏற்பாடு பண்ணி இருந்தார். ஆம்புலன்ஸ் அங்குதான் சென்றது.

சென்ற நிமிடத்திலிருந்து ஜமீன்தாரிணிக்கு கவனமாக சிகிச்சை ஆரம்பமாகியது. நோயாளி ஐ.ஸி.யூவில் இருக்க இன்னும் பல ஸ்பெஷலிஸ்ட்கள் வரவழைக்க ஏற்பாடாகி இருந்தது. மூன்று குழுவும் அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தனர். சீலனுக்கு கையில் எலும்பு முறிவு என்று சிகிச்சை அளிக்கப்பட்டது.

அந்த வேதனையிலும் அவன் கண்களில் மகேஷின் மீது குரோதமும், மஞ்சுவின் மீது காமத்தையும் கொட்டத் தயங்கவில்லை. அவன் பார்வை படாமல் இருவரும் ஒதுங்கி இருக்கலானார்கள்.

“தம்பி, உங்களுக்கு ஏனிந்த வேதனை? எள்ளுதான் காயணும். எலிப்புளுக்கையும் ஏன் காயணும்ங்கற மாதிரி இருக்கு”. என்ற பங்காளிகள் அவன் இருக்கைக்கு அருகில் வந்து உட்கார்ந்தனர்.

“ஏன் தம்பி, அதென்னா? அந்த சீலன் உங்களை ஜமீன் வாரிசுங்கற மாதிரி சட்டையைப் பிடிச்சான். அதென்ன விஷயம்?” என்று பங்காளிப் பெரியவன் கேட்டான்.

ஒவ்வொருவரிடமும் நடிகர் திலகம் சிவாஜி ஒளிந்து கொண்டிருப்பது சத்தியமான உண்மை. கிரியா ஊக்கியாக அவர்தான் ஊக்குவிக்கிறார் நடிப்பை. இப்பொழுது மகேஷ் நடிப்பைப் பார்த்து இது சத்தியம் என்று எங்கே வேண்டுமானாலும் சொல்லுவார்கள்.

அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்ட மகேஷ் “அதாங்க எனக்கும் புரியல்ல. நானும், இவளும் ஆராய்ச்சி மாணவர்கள்” என்றான்.

“நான் இருக்கேன். பார்த்துக்கறேன்” என்றான் பங்காளிகளில் பெரியவன்.

## 24

மறுநாள் காலை மருத்துவர்கள் அனைவரையுமே மாளிகைக்கு திருப்பி அனுப்பிவிட்டனர். சாந்த லட்சுமியின் உயிருக்கு இரு தரப்பினரும் உலை வைத்து விடக் கூடாது என்பதில் கண்ணும்

கருத்துமாக இருந்தனர். இன்னொரு அதிசயம் இருந்தது. மகேஷ் பிறந்ததும் உயிரோடு பாலம்மாவுடன் அனுப்பும் பொழுது இருந்த டாக்டர்கள் அங்கே இருந்தார்கள்.

மகேஷ் குழந்தையாக இருந்த சமயம் அடிக்கடி ரகசியமாகப் போய் செக்கப் பண்ணிவிட்டு வந்தவர்கள். வீராசாமி ரகசியமாக அவர்களிடம் மகேஷைக் காட்டியதும் வாட்ட சாட்டமாக ஜமீன்தாரின் சாயலில் வளர்ந்தவனைப் பார்த்து ஆச்சர்யப்பட்டுப் போனார்கள்.

“எங்கே வேண்டுமானாலும் நாங்க வந்து சாட்சி சொல்றோம். வருங்கால ஜமீன்தார் மகேஷ் தான்” என்று உறுதி அளித்தனர் வீராச்சாமியிடம். இது வீராசாமிக்கு பெருத்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. சாந்த லட்சுமி படுத்தது இருதரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட வழி இருக்கிறது என்று கவலை கொண்ட வீராசாமி இது பெருத்த நிம்மதியை அளித்தது.

மகிழ மலை ஜமீனின் வக்கீல் இராமகிருஷ்ணனிடம் ஜமீன்தார் மகேஷ்தான் தன் மகன் என்பதற்கான சாட்சிகள் அனைத்தையும் ஒப்படைத்திருக்கிறார். உயிலைப் படிக்கும் பொழுது ஜமீன்தார் உயிரோடு இல்லாவிட்டாலும் வக்கீலிடம் கொடுக்கப்பட்ட உயிலும், சாட்சியங்களும் செல்லுபடியாகும் என்று ஜமீன்தாரின் தனி உயில் ஒன்றும் எழுதப்பட்டிருந்தது.

இதன் பிரதிகளும், ஜமீன் நகைகளும் வீராசாமியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. முக்கிய சாட்சியாக நாராயண ஸ்வாமி ஐயா இருப்பதையும் குறிப்பிட்டிருந்தார். இவற்றை உரியவரிடம் சேர்ப்பித்து எப்பொழுது நிம்மதியாவோம் என்றிருந்தார் வீராசாமி.

மருத்துவமனையிலிருந்து அனைவரும் ஜமீன் மாளிகைக்கு திரும்பி விட்டனர். மாளிகையில் ஹரிநாத்தையும், மந்தாவையும் குழந்தை பவானியுடன் பார்த்ததும் மகேஷூம்-மஞ்சுவும் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தனர். மகேஷூம்-மஞ்சும் மகிழ மலைக்கு வரும்பொழுது அடைந்த ஆச்சர்யங்களை இவர்களும் அனுபவித்திருந்தனர்.

மஞ்சுவை ஓடி வந்து தழுவிக் கொண்ட மந்தா” எப்படித்தான் இந்த மலைக்கு வந்தீங்களோ? என்று கேட்டாள்.

வழியில் என்ன நடந்ததோ என்று பயந்த மஞ்சு” ஏங்க்கா என்னாச்சு?”

“ராத்திரிதான் ரயில் ஸ்டேஷன்ல வந்து நின்னது. வண்டி லேட்.. வெளியே வந்தா காடாந்தரகாரமான இருட்டு. மூஞ்சி பூரா தாடி வச்சு கருப்பு போர்வை போத்தின வண்டிக்காரன் வந்து நின்னான். அவனைப் பார்த்தாலே பயமா இருந்தது. வேற வழியில்லாம வண்டியில ஏறிகிட்டோம். ஹரியும் குழந்தையும் தூங்கிட்டாங்க. வழியில மகிழம் பூவோட மணம்..

“எனக்கு இந்தப் பூவோட வாசனை பிடிக்கும்னு சொன்னேன். கொஞ்ச தூரம் வந்த வாழைப்பழ வாசனை.... என்ன இப்படி ஒரு வாசனைனு கேட்டேன். வாழைப்பழம்னு வண்டிக்காரன் சொன்னான். உங்களுக்குப் பிடிக்குமானு கேட்டான். பிடிக்கும்னு சொன்னேன்”

மஞ்சுவும் - மகேஷும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

“அப்புறம் என்னாச்சு?”

“மாளிகை வாசல்ல கதவு பூட்டியிருக்கு. குழந்தையோ ஜுரம் வந்த உடம்பு.. ஹரியோட தோள்ல தூங்கறா... பனியும் குளிரும் அதிகமா இருக்கு. நாங்க தட்டிப் பார்த்தோம். கேட்டுக்கும், பங்களாவுக்கும் கொஞ்ச தூரம். வண்டிக்காரர் ரெண்டு இடி தோளால தட்டினாரு. பாரு... கதவு விரியத் திறந்துடுச்சி

வண்டிக் கூலி கொடுக்க வண்டிக்காரரைப் பார்த்தா வண்டியையும் காணோம். அந்த வண்டிக்காரரையும் காணோம்“

பயம் அவள் முகத்தில் இப்பொழுதும் பூசிக் கொண்டது.

“உள்ளே வந்தோம். வீராசாமி ஐயா வந்தாரு. சூடா பாலைக் கொடுத்தாரு. குழந்தை பவானி பசிக்கிறதும்மானு சொல்லிச்சு. பால் தேவாமிர்தமா இருந்தது. இன்னும் ஒரு அதிசயம். நீங்க தங்கின ரூம்லதான் தங்கினோம். ரெண்டு ஷோல்டர் பேக்கும், ஒரு சாப்பாட்டுக் கூடையும் தான் கொண்டு வந்தோம். எங்க சாமான்களோட ஒரு பையும் கூட வந்துச்சு. ரயில்லேர்ந்து இறங்கறப்ப நிச்சயமா அந்தப் பை இல்ல. பயந்துட்டே திறந்து பார்த்தா மகிழம் பூக்களும், பெரிசு பெரிசா வாழைப்பழங்களும் இருந்துச்சு மஞ்சு. வண்டிக்காரரைப் பார்த்து பேயோ, பிசாசோனு பயந்தோம் பேய் பிசாசு எல்லாம் பழங்களைத் தருமா! என்ன! என்றாள் மந்தா.

“ராத்திரி எங்களுக்கு பயமா இருந்துச்சு மகேஷ்” என்றான் ஹரி தன் பங்கிற்கு.

“அக்கா, வந்த வண்டிக்காரர் வேற யாரும் இல்ல. நம்ம வீட்ல ஒரு பெரியவர் படத்தை வச்சு கும்பிடுவாங்க தெரியுமா?”

“நீயும் அவரைக் கும்பிடுவே..”

“நீ விளக்கேற்றி ஒரு நமஸ்காரம் பண்றதோட சரி”

“எனக்கு சேவை மையத்தோட சேவைதான் முக்கியம் மஞ்சு”

“நம்ம பேச்சு இப்ப நம்மை சுத்தி வர வேண்டாம். அக்கா, நம்ம வீட்டுப் பெரியவர் படம் மாதிரியே பெரிசா ஜமீன் பூஜையறையில் ஜமீன்தார் மாமா வச்சு பூஜை பண்ணிட்டு இருந்திருக்காரு. ஜமீன்தார் மாமா அருள்வாக்கு கேட்ட சித்தர் பீடம் அதுதான் தோணுது. வண்டிக்காரரை அதுக்கப்புறம் கூட சந்திச்சோம் அக்கா. பயப்பட வேண்டாம்“ என்று மஞ்சு முடிக்கறப்பவே பவானி மந்தாவின் புடவையை பிடித்து இழுத்தாள்.

“அம்மா, பசிக்குதும்மா வாங்க டிபன் சாப்பிட போகலாம். மஞ்சு சித்தி நீங்களும் வாங்க” என்றாள் பவானி.

பவானி அழைத்த வாக்கியங்கள் மஞ்சுவின் மனசினுள் இறங்க அக்காவைப் பார்வையால் அளந்தாள் மஞ்சு. மகேஷும் கவனித்தான்.

“அக்கா, பவானியின் அழைப்பு வித்தியாசமா இருக்குதே”

மந்தாவின் முகம் செம்மை பூண்டது.

“ஆமாம்; நான் பவானிக்கு அம்மாவா இருக்கறதா தீர்மானிச்சுட்டேன்.”

ஹரி கூச்சத்துடன் முகத்தை திருப்பிக் கொள்ள் மகேஷ் “அண்ணா, பொல்லாத ஆள் நீங்க. நாங்க இந்தப் பக்கம் நகர்ந்ததும் அந்தப் பக்கம் மணவினை ஒப்பந்தம் நடந்திடுச்சா?” என்று உரிமையுடன் முகத்தைத் திருப்பினான்.

“நாங்க குளிச்சிட்டு வந்துர்றோம். நீங்க சாப்பிட போங்க” என்று இருவரும் நகர்ந்த சமயம் வீராசாமி ஓட்டமும் நடையுமாக ஓடிவந்தார்.

“தம்பி, நில்லுங்க”

இருவரும் நின்றார்கள். “குளிச்சிட்டு வந்துர்றோம்.”

“சீலனோட கோஷ்டியும், உங்க பங்காளிகளும் ஜமீன்தார் உயிலெழுதி வச்சிருக்கார்னு சொன்னா நம்ப மாட்டேங்கறாங்க. இன்னிக்கே அதை பார்க்கணும்னு சொல்றாங்க. நானும் வக்கீல்

ஐயாவை வரச்சொல்லிட்டேன். உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபனை இல்லையே?”

“நான் என்னஙகய்யா சொல்ல இருக்கு? என்றான் மகேஷ்.

உள்ளூர நால்வருக்குமே ஏதாவது கைகலப்பு நேர்ந்து விடுமோ என்ற பயம் ஏற்பட்டது. அதை புரிந்துக் கொண்டவர் போல வீராசாமி “இது மிகப்பெரிய விஷயம். ஜமீன் வாரிசைப் பொருத்த விஷயம். மருத்துவமனை டாக்டர்களையும் வரச் சொல்லி இருக்கேன். முக்கியமா இதுக்கு சாட்சியா இருக்க வேண்டிய நாராயணஸ்வாமி ஐயாவும், கனடாவிலிருந்து வந்துட்டார். இப்ப கார்லே வந்துட்டு இருக்காரு. எனக்கே இப்பத்தான் நிம்மதியா இருக்கு” என்றார்.

அனைவரும் குளித்து சாப்பிட்டனர். மந்தா கொண்டு வந்த மகிழ மலர்களை சித்தர் படத்திற்கு போட்டு கண் மூடி பிரார்த்தித்தாள். மந்தா சித்தர் பீடத்திற்கு சென்ற விஷயங்களை தங்கை மஞ்சுவிடமும், மகேஷிடமும் சாப்பிடும் பொழுது சொன்னாள்.

“நான் பவானிக்கு அம்மாவாகப் போறதை கூட ஸ்வாமிகளே சொன்னார். அவர்தான் முக்கிய பேப்பர்களை எல்லாம் எடுத்துண்டு மகிழ மலைக்குப் போகச் சொன்னார். அவர் வார்த்தைப்படி தக்க சமயத்தில் வந்திருக்கிறோம்னு புரியுது” என்றாள் மந்தா.

“மஞ்சு சித்தி, உங்க கல்யாணத்துக்கு வாங்கித் தந்த மாதிரி அம்மா அப்பா கல்யாணத்துக்கும் பட்டுப் பாவாடை வாங்கித் தரணும்“ என்ற பவானி, மஞ்சுவின் மடியில் உட்கார்ந்தாள்.

“பாவாடை மட்டுமா? இப்ப சித்தப்பா பெரிய ஜமீன்தார். அதுக்கேத்த மாதிரி நெக்லஸ், வளையல், ஜிமிக்கினு வாங்கித் தருவார்” என்று கொஞ்சினாள்.

சரியாக பத்து மணிக்கு ஜமீனின் பெரிய மாளிகை ஹாலில் அனைவரும் கூடி விட்டனர். பங்காளிகள் இருவரும் மகேஷைப் போட்டிக்காரனாக எண்ணி உறுமினர். சீலனின் குடும்பமோ கடுப்படிக்கக் கேட்கவே வேண்டாம். டாக்டர்கள் வந்ததும் மகேஷிற்கு கை கொடுத்து வாழ்த்தினர்.

குறுக்கே புகுந்தான் கை கட்டுடன் சீலன் “ஹலோ, டாக்டர்ஸ், இவன்தான் வாரிசுனு இன்னும் தீர்மானம் ஆகல்ல” என்றான்.

“சீலா, உனக்கு வேணுமானால் சந்தேகம் இருக்கலாம். இந்த மகேஷ் பிறந்து பாலம்மாவிடம் வளர்ந்த காலத்திலே நாங்கதான் செக்கப்புக்கு

போயிருக்கோம். இதுக்கு நாராயண ஸ்வாமி ஐயாவும், வீராசாமியும் சாட்சியப்பா. செக்கப் முடிஞ்சதும இவங்கக்கிட்ட கையெழுத்தும் வாங்கி இருக்கோம்“ என்றதும், அவன் மூஞ்சி செத்துப் போய்விட்டது.

“இது போதுமா! இன்னும் சொல்றோம். மகேஷ் படிச்ச பள்ளிக் கூடத்திற்கும், கல்லூரிக்கும் ஜமீனதார் ஐயா லட்சக்கணக்குலே டொனேஷன் தந்திருக்காரு. அவரை டொனேஷன் தந்த பேப்பர்களில் தன் மகன் மகேஷ்பூபதி இங்கு படிக்கும காரணத்தால்னு பதிவு பண்ணி இருக்கார். மகேஷின் போட்டோவும், ஒட்டப்பட்டு இருக்கு.” என்ற டாக்டர்கள் தம்பி, சீலா கொஞ்சம் நிலைமையை புரிஞ்சிக்க என்றார்கள்.

“என்ன நிலைமை?” எகிறினான் சீலன்.

மூடத்தனமான எண்ணங்கள் கொண்டவன் ஜமீன்தார்க்குப் பிறகு தன் அத்தைதான் வாரிசு. தன் அத்தை தனக்கு வாரிசு பத்திரம் எழுதியிருப்பாள் என்றே எகிறினான்.

“என் அத்தையோட சொத்து” என்ற வார்த்தையை விடாமல் சுழற்றினான் சீலன்.

அடிக்கடி கையை வீசியதில் கை வேறு வலித்தது.

வீராசாமியின் பொறுமையும் ஒரு சமயம் இழந்தே போயிற்று. வக்கீல் வராததினால் அந்த எதிர்பார்ப்பு பொறுமையை சிதைத்தது.

“அப்பன் சொத்துக்கு மகனே வந்திட்ட பொழுது, அத்தையோட சொத்துனு வாதிடறியே. நீ என்ன முட்டாளா?” என்று எரிச்சல்பட்டார் வீராசாமி.

பங்காளி பசங்கள் இரண்டு பேரும் நிலைமையைப் புரிந்துக் கொண்டார்கள். மகேஷ் பக்கம் போய் சேர்ந்தால் தங்களுக்கென்று துளி சொத்தாவது அவனிடமிருந்து பெறலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டார்கள்.

“தம்பி, வாழ்த்துக்கள்” என்று கையைக் குலுக்கியவர்கள் “நாங்க உங்க அண்ணன்கள். எங்களையும் ஜமீன்பரம்பரைனு சேர்த்துக் கவனிச்சுக்குங்கப்பா” என்று அவனிடம் பேசினார்கள்.

சின்னவன் எங்களுக்கும் ஏதாவது கொடு தம்பி. பிழைச்சுக்குவோம் என்று வாய்விட்டே கேட்டான்.

மகேஷிடம் எப்படித்தான் அப்படி ஒரு மிடுக்கு வந்ததோ

தெரியவில்லை. முகத்தை நிமிர்த்தினான்.

"அண்ணே, எனக்கு பரம்பரை பட்டம், பதவினு வந்தா மட்டும் போதாது. பரம்பரை சொந்தம் வேணும். அம்மா சங்கரி நாச்சி வழி சொந்தம் எதுனு இனிமே தேடணும். அத்தை, மாமன், சித்தி, சித்தப்பானு எனக்கு உறவுகள் வேணும் அண்ணே".

மகேஷின் அரவணைக்கும் குணம் வீராசாமியை மகிழ வைத்தது. 'புலிக்குப் பிறந்தது பூனை யாகுமா? என்ற எண்ணம் ஜமீன்தாரை நினைவு கூற கண்களில் நீர் கசிந்தது.

வக்கீல் வரும் நேரம் கடந்து விட்டிருந்தது. மொபைலைத் தட்டி விட்டார். எடுக்கவில்லை.

## 25

மஞ்சுவிடம் வந்தார் வீராசாமி. "அம்மா, பூஜையறையில் விளக்கேற்றி ஸ்வாமி கும்பிட்டுட்டு வாம்மா. வக்கில் வர நேரமாகுதே என்றதும், மஞ்சு பூஜை அறைக்கு ஓடினாள்.

அவள் பூஜையறையில் சித்தர் பெரியவர் முன்பு கண் மூடி காரியம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று பிரார்த்தனை செய்தாள். அவள் தீபாராதனை காட்டி வெளியே வரும் சமயம் வக்கீல் வந்து விட்ட செய்தி கிடைத்தது.

அனைவரும் ஹாலில் கூடினர். வக்கீல் வந்த இரண்டாவது நிமிடம் நாராயணஸ்வாமி ஐயாவும் வந்து விட்டார். அவர் கம்பீரமாக வந்து தன்னை வணங்கிய மகேஷையும் மஞ்சுவையும அணைத்துக் கொண்டார்.

"மகேஷ் தம்பி, உன்னை பள்ளிக்கூடத்திலும், காலேஜிலும் வந்து தூரத்தில் நின்று ஜமீன்தார் ஐயா பார்ப்பார். ஓடி வந்து கட்டிக்கணும்னு உடம்பு பரபரக்கும், அந்தத் துடிப்பைப் பக்கத்தில் இருந்து உணர்ந்தவன் நான். அவர் இருந்த மாளிகையிலே அவர் அணைக்காத மகனை நான் அணைத்து மகிழற பாக்யம் எனக்குக் கிடைச்சிருக்கே. அது என்னோட பேறு" என்று கண் கலங்கி தழுதழுத்தது இறுக்க அணைத்தார்.

கை பிரேஸ்லெட்டை கழற்றி மகேஷின் கையில் போட்டார். கழுத்து சங்கிலியை மஞ்சுவிடம் கழற்றி நீட்டினார். "திருமணப் பரிசு"

என்றார்.

வக்கீல் இவர்கள் அருகில் வந்தார். “நான் தரும் திருமணப் பரிசு வித்யாசமானது” என்றவர் ஒரு விபூதி பையை எடுத்தார். அதில் மல்லிகைப் பூ மணம் மணத்தது. எடுத்து இருவரின் நெற்றியிலும் இட்டார். மஞ்சுவுக்கு மல்லிகையும், மாம்பழமும் பிடிக்கும் இல்லையா?” என்றவர், தங்க மல்லிகைச் சரத்தையும், தங்க சிறு மாங்கனியையும் கொடுத்தார்.

“மகேஷ், மாங்கனியை பூஜையில வை. மஞ்சு மல்லிகை மாலையை கழுத்திலே போட்டுக்கோ என்றார்.

குட்டி பவானி குடுகுடுவென்று ஓடி நடுவில் வந்து நின்றது. “எனக்கு ஒண்ணும் இல்லையா!” என்று கேட்டது.

“உனக்கு இல்லாததா? கொஞ்ச முன்னாடி பட்டுப் பாவாடை வேணும்னு மஞ்சு சித்திகிட்ட கேட்டே. அதுக்கு சித்தி என்ன சொன்னா!”

ஒற்றை விரலை உதட்டில் வைத்து யோசித்து பவானி குட்டி “ம்.... பாவாடையோட நெக்லஸ் சங்கரி, வளையல், ஜிமிக்கி, வாங்கித் தரதா சொன்னாங்க” என்றது. “இப்ப அந்த ஜிமிக்கியை குட்டிப் பொண்ணுக்கு நான் தரவேணாம்“ என்ற வக்கீல் நாதன் நெஞ்சைத் தடவி, கண்களை கண நேரம் மூடி சட்டைப் பையைத் துழாவ சின்ன வெல்வெட் டப்பாவில் வீற்றிருந்த ஜிமிக்கிகளைத் திறந்துகாட்டினார்.

குழந்தை மலர்ந்து போனாள்.

“அதோ, உங்க அம்மா கிட்ட போய் போட்டுக்கோ” என்றார் வக்கீல் நாதன்.

குழந்தை மந்தாவின் மடியில் போய் உட்கார்ந்துக் கொண்டது. “ஜிமிக்கி சின்ன தோட்டோட இருக்கு. இப்பவே போட்டு விடுங்கம்மா” என்றது.

மஞ்சுவின் காதில் “மஞ்சு, புரிஞ்சுகிட்டியா” என்ற கரகரப்பான குரல் கேட்டாது. அது வண்டிக்காரரின் குரல் என்று புரிந்துக் கொண்டாள்.

அவரவர் இடத்தில் அமர்ந்தனர். வக்கீல் நாதன் கைப்பெட்டியைத் திறந்து உயில் மற்றும் முக்கிய ஆவணங்களை எடுத்து அக்கு வேறு ஆணி வேறாய் பிரித்து அலசிப் படித்தார். எந்த வகையிலும் துளி சந்தேகம் வராதபடி சாட்சிப் பேப்பர்கள் இருந்தன. எதையும் மறுக்க

சீலன் தரப்பினருக்கு இயலவில்லை.

ஜமீன்தார் கொடுத்த வங்கிக் கணக்கிற்கும சரியானபடி சலான்கள் இருந்தன. அவை எல்லாம் பாலாம்பாள் கணக்கோடு நகல்களை வங்கியினர் கொடுத்திருந்தனர். ஜமீன்தாரிணி சாந்த லட்சுமிக்கு சொந்தமாக முன்னூறு பவுன் நகைகள் இருந்தன. அவைகளை அவள் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்றும், அவள் ஆயுள் பரியந்தம் ஜமீனில் ஜமீன்தாரிணியாக வாழலாம் என்றும் உயிலில் குறிப்பிட்டுள்ளார்.

“யாருக்கு வேண்டும் இந்த நகைகள்? வக்கீல் ஐயா, எங்க அத்தை எந்த உயிலும் எழுதலையா என்று சீலன் சத்தம் போட்டான்.

“சொத்தை ஜமீன்தார் மகன் மகேஷிற்கு மட்டுமே எழுதி இருக்கார். உங்க அத்தைக்கு அனுபவ பாக்யதை மட்டுமே. ஜமீன்தாரிணியாக உரிமையுடன் வாழலாம்“ என்றார் வக்கீல்.

காலால் எதிர் நாற்காலியை எட்டி உதைக்க நாற்காலி எகிறிப் போய் தூர விழுந்தது.

“ஹலோ... அது ஜமீன் நாற்காலி... உங்க சொத்து இல்ல. இதுவரை அத்தை சொன்னாங்கனு உங்க பேர்ல எட்டு லட்சம் போல கொடுக்கப்பட்டிருக்கு. அதை திரும்பக் கட்டணும் நீங்க” என்று வக்கீல் சொல்ல சீலன் கத்திக் கொண்டே அப்பா தாத்தாவுடன் வெளியேறினான்.

அனைவரும் சாப்பிட உணவு ஹாலில் கூடினர். அன்று விருந்து சமையலுக்கு ஏற்பாடாகி இருந்தது. விருந்து தலை வாழை இலை போடப்பட்டு பரிமாறினார்கள்.

“இன்றைக்கு ஷஷ்டி.. சாப்பிட மாட்டேன். எனக்கு பலாப்பழ பாயசமும், சுண்டக் காய்ச்சிய பாலில் மாம்பழத் துண்டுகள் போட்டு தேன் ஊற்றி கொடுங்க” என்றார் வக்கீல்.

“எனக்கும் அது மாதிரிதான் வேணும்“ என்றாள் பவானி.

“மகேஷ்... இவ உங்கம்மா சங்கரி நாச்சி மாதிரி இருக்கா. மகிழ மலைக்கு வந்தா நான் என்ன சாப்பிடறேனோ அதையேதான் சாப்பிடுவா”

“நீங்க எங்கம்மாவைப் பார்த்திருக்கீங்களா?”

“உங்கம்மா கல்யாணத்துக்கே வந்திருக்கேன்”

மகேஷ் வக்கீலைப் பார்த்தான்.

“என்ன பாக்கறே மகேஷ். எனக்கு வயசு எழுபது என்றார் வக்கீல்.

“பொய் சொல்லாதீங்க அங்கிள். உங்களைப் பார்த்தா நாற்பத்தஞ்சு வயசுக்கு மேல சொல்ல மாட்டாங்க” என்று சொன்ன மகேஷைப் பார்த்துச் சிரித்த வக்கீல் “தலை நரைக்காததைப் பார்த்து சொல்றீயா! எங்களுக்கு நரை, திரை, மூப்பு எதுவும் கிடையாது” என்றவர் “பலாப்பழ பாயாசம் என்னாச்சு?” என்று பரிமாறுபவர்களைப் பார்த்துக் கேட்டார்.

“பலாப்பழமே கிடையது ஐயா”

“சரி, பாயசத்தைத் திறந்து பாரும் ஐயா. பலாப்பழம் அதுல நீச்சலடிக்குது. உம்ம கண்ணுக்குத் தெரியல்லைய்யா?”

சமைப்பவர்கள் திறந்து பார்த்தனர். சின்ன சின்ன துண்டுகளாக அதில் பலாப்பழம் நீச்சலடித்துக் கொண்டிருந்தன.

“எனக்கு அதுதான் ஆகாரம். ஒரு செம்புல கொண்டு வாங்க”

ஒரு செம்பு பாயசமும, சுண்டக் காய்ச்சிய பாலில் போட்ட மாம்பழத்துண்டுகளும், அதன் மேல் மிதந்த தேனுமாக ஒரு கிண்ணத்தில் வைத்தார்கள். குழந்தைக்கும் கொண்டு வைத்தார்கள். தேங்காய் பால் விட்ட அரிசி பாயாசத்தில் பலாப்பழ சுவை அமுதமாக இருந்தது.

கை கழுவிக் கொண்டு வந்த மகேஷிடம் வக்கில் நாதன் ஒரு தங்க சாவிக் கொத்தைக் கொடுத்தார்.

“உங்க ஜமீன் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வைக்கப்பட்ட பெட்டக சாவிகள். இதைப் பற்றி வீராசாமி சொல்லுவார்” என்று சொன்னார் வக்கீல்.

“பாத்ரூம் போய் கை கழுவிட்டு வரேன். இன்னும் ஒரு வாரத்துல இவங்க கல்யாணத்தை வச்சுடு. மகிழ மலையிலேயே வை” என்றார் வக்கீல்.

விருந்து முடிந்ததும் டாக்டர்கள் கிளம்பிப் போனார்கள். பங்காளிகள் தங்கள் அறையில் போய் தங்கினார்கள். டாக்டர்களை அனுப்பி விட்டு வீராசாமியும், நாராயண ஸ்வாமியும் பெரிய காரியம் முடித்த திருப்தியில் உள்ளே வந்தார்கள். வக்கீலைத் தேடினார்கள். வக்கீல் குளியலறையில் இல்லை. அவர் கொடுத்த தங்க சாவி கொத்தும், அவர் கொண்டு வந்த பெட்டியும் காலியாய் கிடந்தது.

சாவிக் கொத்தை வீராசாமியிடம காட்டினான் மகேஷ்.

வீராசாமியின் கைபேசி கிணுகிணுத்தது. பேசப் பேச அவர் முகம் மாறியது.

“வீராசாமி ஐயா, என்னாச்சு?”

“வக்கீல் சாருக்கு காலையில புறப்பட்டு வரும் போது கார் ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சாம். கால்ல அடியாம். ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வந்துரலாம்னு பார்த்தாராம். எப்படியும் நடக்க ரெண்டு மூணு நாள் ஆகுமாம். அதுக்கப்புறம் உயில் படிக்கறதை வச்சுக்கலாம்னு சொல்வாரு”.

அனைவரும் திகைத்தனர்.

அப்படியானால் வந்தவர்! பலாப்பழ பாயசம் குடித்தவர்! ஷஷ்டி விரதம் என்று பாலில் ஊறிய மாம்பழத் துண்டங்களை தின்றவர். “மகிழ மலையிலேயே கல்யாணத்தை வை” என்று சொன்னவர்.

ஹரி முருக பக்தர். “வந்தவர் முருகர் தான் என்றார்.

“இங்கே நிறைய சித்தர்கள் இருப்பதாகச் சொல்வார்கள். அவர்களுக்குப் படையல் போட வேண்டும்“ என்றார் வீராசாமி.

“ஐயா கனடா திரும்புறதுக்குள்ளே கல்யாணத்தை வைக்கணும். சித்தர் பீட ஸ்வாமிகளை வரவழைத்து பெரிய ஹோமம் வைக்கணும்“ என்றான் மகேஷ் பூபதி - மகிழ மலை ஜமீன்தார்.

“நான் கொஞ்ச நாள் இருப்பேன். மகேஷிற்கு ஜமீன் வேலைகளை சொல்லித் தரணுமே” என்றார் நாராயண ஸ்வாமி.

அனைவரும் கல்யாண ஏற்பாட்டைத் தொடங்க ஆரம்பித்தனர்.

தனிமை கிடைத்த பொழுது” ஜமீன்தார், இனிமே பெரிய மீசை வச்சுப்பீங்களா?” மஞ்சு கிண்டலடிக்க “ முதலிரவன்னிக்கு வச்சுப்பேன் கச்சேரி. அன்னிக்குப் பார் இந்த ஜமீன்தாரை” என்று கூற மகிழ்ச்சி மகிழமலை பூரா பரவியது.

**சுபம்**

# உருளைக்கிழங்கு கைமா கபாப்

**தேவையான பொருட்கள்:** மட்டன் கைமா 1/4 கிலோ, உருளைக்கிழங்கு 2 (வேக வைத்தது), துருவிய தேங்காய் 2 டேபிள் ஸ்பூன், வெங்காயம் 1 (நறுக்கியது), தக்காளி 1 (நறுக்கியது), இஞ்சி பூண்டு பேஸ்ட் 1 டீஸ்பூன், பிரட் துண்டு 2, மிளகாய் தூள் 1, டீஸ்பூன் மஞ்சள் தூள் 1/2 டீஸ்பூன், பச்சை மிளகாய் 2 (நறுக்கியது), கொத்தமல்லி சிறிது, கரம் மசாலா 1 டீஸ்பூன், உப்பு தேவையான அளவு, முட்டை 2, பிரட் தூள் 1 கப், எண்ணெய் 2 கப்

**செய்முறை:** முதலில் வேக வைத்த உருளைக்கிழங்கை நன்கு மசித்துக் கொள்ள வேண்டும். பின்னர் மட்டன் கைமாவை நீரில் நன்கு கழுவி வடிகட்டி தனியாக வைத்துக் கொள்ளவும். பின்பு பிரட் துண்டை நீரில் ஒருமுறை முக்கி எடுத்து, பிழிந்து, சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளவும். அடுத்து ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் 1 டேபிள் ஸ்பூன் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், வெங்காயத்தைப் போட்டு பொன்னிறமாக வதப்பி, பின் இஞ்சி பூண்டு பேஸ்ட், பச்சை மிளகாய் சேர்த்து வதக்க வேண்டும். பிறகு அதில் கைமாவை சேர்த்து, உப்பு தூவி நன்கு கிளறி விட்டு, பின் ஒரு கப் தண்ணீர் ஊற்றி, தண்ணீர் வற்றும் வரை கைமாவை நன்கு வேக வைக்க வேண்டும்.



பின் அதில் தக்காளி, மிளகாய் தூள், மஞ்சள் தூள், கரம் மசாலா சேர்த்து கிளறி, துருவிய தேங்காய், பிரட் துண்டுகள், கொத்தமல்லி சேர்த்து பச்சை வாசனை போக நன்கு வதக்கி இறக்கி, குளிர வைக்க வேண்டும். அதற்குள் முட்டையை ஒரு பௌலில் உடைத்து ஊற்றி நன்கு அடித்துக் கொள்ளவும். பின் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடேற்ற வேண்டும். பின்னர் மசித்து வைத்திருக்கும் உருளைக்கிழங்கில் சிறிது எடுத்து உருண்டையாக்கி, தட்டையாக தட்டி அதன் நடுவே சிறிது மட்டன் கைமாவை வைத்து மூடி, முட்டையில் நனைத்து, பிரட் தூளில் பிரட்டி, எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்க வேண்டும். இதேப்போல் மீதமுள்ள மசித்த உருளைக்கிழங்கை செய்தால், உருளைக்கிழங்கு கைமா கபாப் ரெடி!!

**Owned - Published by C. Raju at 18, (New No.67), P.V. Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai - 600 014 and Printed by Mrs. R. Radha at Apsara Art Printers, 18, (New No.67), P.V.Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai 600 014.**
**Editor : Mrs. Radha Raaju**